அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி
பட்டயம் (சோதிடவியல்)

தாள் - 3 சோதிடப் பலன்கள்

## பொருளடக்கம்


**அலகு -I : இராசி, அம்சம் ,நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம், பரிவர்த்தனை பலன்கள்**

1. இராசி, அம்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம், பரிவர்த்தனை பலன்கள் … 2
2. தனிக்கிரகம், கூட்டுக் கிரகங்கள் பலன்கள் … 8
3. ஜாதகரின் பிறந்த மாதம், வருடம், கிழமை பலன்கள் … 12

**அலகு–II : இரு திருநாகங்கள், சோதிடப் பழமொழிகள்**

4. இரு திருநாகங்கள் … 19
5. பழமொழிகளும் விதிவிலக்குகளும் … 23
6. ஜாதீய மற்றும் பிற பழமொழிகள் … 31

**அலகு–III : பாவம், உச்சம், நீச்சம், வர்கோத்தமம், அதிபதி பலன்கள்**

7. பன்னிருபாவம், உச்சம், நீச்சம், வர்கோத்தமம் பலன்கள் … 34
8. அதிபதிகள், அவை இருக்கும் வீடுகள் பலன்கள் … 38
9. இராசி, அம்சம், லக்கினம் பலன்கள் … 47

**அலகு–IV : கோள்சாரம் பலன்கள்**

10. சோதிடவியலும் சமூகவியலும் … 49
11. கோள்சாரப் பலன்கள் … 54

**அலகு–V : தெசா புத்தி பலன்கள்**

12. தெசா புத்தி பலன்கள் … 62
13. சோதிடமும் இறைத்தன்மையும் … 64

**அலகு–VI : பன்னிரு பாவங்கள் பலன்கள்**

14. பன்னிரு பாவங்கள், பலன்கள் - 1, 2, 3, 4 வீடுகள் … 69
15. பன்னிரு பாவங்கள், பலன்கள் - 5, 6, 7, 8 வீடுகள் … 84
16. பன்னிரு பாவங்கள், பலன்கள் - 9, 10, 11, 12 வீடுகள் … 114

# தாள் – 3 சோதிடப் பலன்கள்

***அலகு I – இராசி, அம்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம், பரிவர்த்தனை பலன்கள்***

## பாடம் 1 – கிரகங்கள் உச்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம் மற்றும் பரிவர்த்தனை பலன்கள்

ஒரு ஜாதகத்தில் கிரகங்கள் அமைந்த நிலையைக் கொண்டு பலன்கள் சொல்ல வேண்டும். அதன்படி கிரகங்கள் உச்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம், பரிவர்த்தனைப் பலன்களைப் பார்ப்போம். ஒருவர் ஜாதகத்தில் எந்தக் கிரகம் உச்சமானாலும் அக்கிரகம் எத்தனையாவது வீட்டின் அதிபதி எந்த வீட்டில் இருக்கிறார் என்று அறிந்து பலன் சொல்ல வேண்டும். லக்கினத்துக்கு லக்கினம் பலன்கள் மாறும் என்பதை முன்னர் பார்த்தோம். லக்கினாதிபதி உச்சமானால் இந்தப் பலன், குடும்பாதிபதி உச்சமானால் இந்தப் பலன் என்று சொல்ல ஜோதிடக்காரர்கள் அறிந்திருக்க வேண்டும். எல்லாக் கிரகங்களும் ஒரு வீட்டில் தான் உச்சம், நீச்சம், நிலை பெறும். சூரியன், சந்திரன் ஒரு வீட்டிலும், மற்ற ஐந்து கிரகங்களும் இரண்டு வீடுகளிலும் ஆட்சி பெறும்.

**1. சூரியன்**

சூரியன் உச்சமானால்: (அதாவது மேஷத்தில்) குரங்கு பசுவால் அபாயம் வரும். இயந்திரப் பணி, இரயில்வே பணி அமையும். தந்தையைத் திட்டுவார்.

சூரியன் நீச்சமானால்: (அதாவது துலாத்தில்) நெருப்பு மின்சாரத்தால் இடருண்டாகும். செட்டியார்கள் மூலம் இலாபமுண்டாகும். காய்கறி வாணிபம் செய்வார். இந்தி அறிவு உண்டாகும்.

சூரியன் எந்த இராசியிலும் வர்கோத்தமமானால் தந்தையின் ஆரோக்கியம் கூடும். செல்வம் சேரும்.

சூரியன் ஆட்சியானால் அஞ்சல் துறையில் பணியாற்றுவார்.

சூரியன் சந்திரன் பரிவர்த்தனையானால் எல்.ஐ.சி., நிலக்கரி சுரங்கம் (நெய்வேலி). பெரிய தொழிற்சாலை (பெல்) வேலை கிடைக்கும். வெப்ப நோய் உண்டு.

சூரியன், புதன் பரிவர்த்தனையானால் தணிக்கையாளர், முறுக்குக் கம்பி வாணிபம், வெள்ளி அடமானக் கடை ஆகியன உண்டு. மிதுன சூரியன், சிம்ம புதன் எப்போதாவது ஒருமுறை பரிவர்த்தனை ஆகும்.

சூரியன் குரு பரிவர்த்தனையானால் சிங்கப்பூர் தொடர்பு உண்டு. இது 12 ஆண்டுகளுக்கு ஒரு முறையே நிகழும். இவ்வமைப்பு மாமாங்க வருடத்தில் மார்கழி மாதத்தில் பிறந்தவர்களுக்கு அமையும்.

சூரியன் சனி பரிவர்த்தனையானால் வெல்லமண்டி, கறிவேப்பிலை, கரிபவழத் தொழில், இஞ்சின் டிரைவர் தொழில் வரும்.

சூரியன் சுக்கிரன் பரிவர்த்தனையானால் பிற மாநிலப் பணி மற்றும் கிராம மருத்துவராவார்.

## 2. சந்திரன்

சந்திரன் ஆட்சியானால்: (அதாவது கடகத்தில்) கடலோரக் காவற்படை நேவி (தமிழில் நாவாய் என்றால் கப்பல் என்று பொருள் அதுவே நேவியானது.) பயணிகள் பொருட்கள் தூக்கும் வேலைகள், எழுது மை, பெட்ரோல் டீஸல், பால் போன்ற விற்பனை அமையும்.

சந்திரன் உச்சமானால் உள் அரங்கு விளையாட்டுக்கள் ஆதாயமுண்டு. பொதுப்பணித்துறை வேலை அமையும்.

சந்திரன் நீச்சமானால் தண்ணீரில் (குளம், கிணறு ) அபாயமுண்டு. பொதுப்பணித்துறையைப் பாதியில் விட்டுவிட்டு நில விற்பனை செய்வார். சிமெண்ட் தொழில் அமையும்.

சந்திரன் வர்கோத்தமமானால் கவர்னர் அல்லது மந்திரியாவார்.

சந்திரன் செவ்வாய் பரிவர்த்தனையானால் சந்திர மங்கள யோகம், திரையரங்கு, திருமண மண்டபம் கட்டுவார். பெரிய வீடு உண்டு.

சந்திரன் புதன் பரிவர்த்தனையானால் உள்துறை தணிக்கையாளர். (இதில் கன்னி–கடகம், மிதுனம்–கடகம் என்று இருபிரிவுகள் உண்டு. இவை லக்னத்தைப் பொறுத்து மாறும். மாரியம்மன் அருள் உண்டு. சாத்துக்குடி வாணிபம், முத்துக் குளித்தல் ஆகியன உண்டாகும்.

சந்திரன் குரு பரிவர்த்தனை 12 வருடங்களுக்கு ஒரு முறை நிகழும். இது குருச்சந்திர யோகம், தியாகம் செய்ய நேரும். இருவகையான பரிவர்த்தனை உண்டு.

அவை: தனுசுவில் சந்திரன் – கடகத்தில் குரு, மீனச் சந்திரன்– கடக குரு என இருவகை உண்டு.

தனுசு–கடகம்பரிவர்த்தனை என்றால் அக்ரஹார வாசமுண்டு. திருவனந்தபுரத் தொடர்பு உண்டு. மீனம்–கடகம் பரிவர்த்தனை என்றால் ஜாதகர் வங்கி செயலாளர் ஆவார். வாழை விவசாயம் பலிதமாகும்.

சந்திரன் சுக்கிரன் பரிவர்த்தனையும் இருவகையானவை. துலாச் சந்திரன் கடகம் சுக்கிரன்: வழக்கு வரும். பெண்களால் ஆண்களுக்கும், ஆண்களால் பெண்களுக்கும் தொல்லை வரும். ரிஷபம் சந்திரன் + கடகம் சுக்கிரன்: வீணை வாசிப்பார். சபல எண்ணம் இருக்கும். சூதாடியாவார்.

சந்திரன் + சனி பரிவர்த்தனை 30 ஆண்டுகளுக்கு ஒரு முறை நிகழும். ஆனால், 30ஆம் ஆண்டு, மகரம் கும்பத்தில் இருக்கும் போதெல்லாம் ஆகும். மகரம் – கடகம் பரிவர்த்தனை: செல்லம்மாள் பாப்பா என்பவரால் நலமுண்டு. பணி நிரந்தரமின்மையாகும்.

கும்பம் – கடகம் பரிவர்த்தனையானால் ஹோமியோபதி மருந்துண்பார். சிறுநீரகத் தொல்லை இருக்கும்.

## 3. செவ்வாய்

செவ்வாய் விருட்சிகத்தில்ஆட்சியானால்:மின்னியல், வேதியியல், மருத்துவம் தொடர்பு உண்டாகும். மின்சார வாரியம் பணி, வேதி இயல் ஆசிரியர், அறுவைச் சிகிச்சை மருத்துவர், மனை விற்பனை தொழில் அமையும். இலங்கை போவார். சிமெண்ட் வாணிபமுண்டு.

மேஷம் இராசியில் ஆட்சியானால் போலீஸ், இராணுவம், பாதுகாப்புத் துறை தொடர்பு உண்டாகும். செந்நிற தரை வீடு கட்டுவர்.

செவ்வாய் உச்சமானால் மலைவாழ் வாசமுண்டாகும். காப்பி, தேயிலை, ஏலக்காய் இலாபம் தரும். இராக்கெட் பணி அமையும். உயர் இரத்த அழுத்தம் வரும்.

செவ்வாய் நீச்சமானால் ஆயுதம் மற்றும் மின்சாரம் மழையினால் இடர் உண்டு. செவ்வாய் வர்கோத்தமமானால் நீச்ச வர்கோத்தமம் (கடகம்–கடகம்) உச்சபலனையும், உச்ச வர்கோத்தமம்) மகரம்–மகரம்) நீச்ச பலனையும் தரும். இது எல்லா கிரகங்களுக்கும் பொருந்தும். நிலம், புலம் சேரும். செங்கல், ஓடு தொழில் அமையும். இரத்த ஓட்டநாளம் பலமுறும். குறைந்த இரத்த அழுத்தம் உண்டாகும். மயக்கம் வரும்.

செவ்வாய் + புதன் பரிவர்த்தனை ஆனால் கணவர்/மனைவியை விவாக இரத்தாலோ, உயிர் பிரிந்தோ இழக்க நேரும். செவ்வாய் + சூரியன் சேர்ந்தாலும் இதுவே ஆகும். இதனைக் கட்டு கிரக பலனில் காணலாம்.

செவ்வாய் + குரு பரிவர்த்தனை: குருமங்களயோகம் தீவுக்கூட்ட வாசமுண்டு. மகான்கள் அருளுண்டு. செவ்வாய் + குரு பரிவர்த்தனை நான்கு வகையாய் நிகழும். மீனச் செவ்வாய் + மேஷ குரு: கூட்டுறவு பண்டகசாலைப் பணி. மீனச் செவ்வாய் + விருச்சிக குரு: ஏற்றுமதி மருத்துவம். தனுசு செவ்வாய் + மேஷ குரு, பால்பண்ணை, கோழிப்பணணை வைப்பார். தனுசு, செவ்வாய் + விருச்சிக குரு இரத்தப் பரிசோதனை பயிற்சியாளர்.

செவ்வாய் சுக்கிரன் பரிவர்த்தனை: கோவில் கட்டுவார். மாடு மேய்ப்பார். சுள்ளி பொறுக்குவார், தொழிற்சாலைக் கடன் தருவார்.

செவ்வாய் + சனி பரிவர்த்தனை நான்கு வகைப்படும். மகர செவ்வாய் + மேஷ சனி நீச்ச பங்க யோகம். ஞானியாவார். மகர செவ்வாய் + விருச்சிக சனி: புனைபெயருள்ளவர். தொலைபேசி துறையில் பணியாற்றுவார். செவ்வாய் மகரத்திலும் சனி மேஷத்திலும் இருந்தால் செவ்வாய் + சனி பரஸ்பரபார்வை பெரும் யோகம் தரும். இது ஒரு சிறந்த யோகமாகும். கும்ப செவ்வாய் + மேஷ சனி: உள்நாட்டு வங்கிப் பணி அமையும். கும்ப செவ்வாய் + விருச்சிக சனி: கண், தொண்டை மருத்துவர். காற்றாலை பொறியாளர்.

### 4) புதன்

புதன் ஆட்சியானால் அதாவது மிதுனத்தில், வெள்ளி, தங்கம், வாணிபம், கப்பல் வாணிபம், பால், பேப்பர், முத்து, உப்பு, பருத்தி, சர்க்கரை, அரிசி, முட்டை போன்ற தொழில் செய்வர். கணக்கு தணிக்கையாளர் படிப்பு படிப்பர். விமானப் போக்குவரத்துத் தொடர்பு உண்டாகும்.

புதன் நீச்சமானால் பைத்தியம் பிடிக்கும். வர்கோத்தமமானால் யோகபலன் உண்டு. பளிங்கு வீடு கட்டுவார்.

புதன் உச்சமானால் ஆஸ்திரேலியா தொடர்பு உண்டு. கொழுப்பு நோய் வரும்.

புதன் – குரு பரிவர்த்தனையால் வழக்கு வெல்லும். சனி புதன் பரிவர்த்தனையானால் தூதரகப் பணி, பைண்டிங், பிரிண்டிங் தொழில் அமையும். கிராம வங்கிப்பணி அமையும். வெள்ளை வீடு கட்டுவார்.

**5) குரு:**

குரு உச்சமானால் இடத்துக்கு இடம் மாறுபடும். தானே தன் வாழ்வைப் பேசிக் கெடுத்துக்கொள்வார். குரு நீச்சமானால் மரம், மலை உச்சியிலிருந்து விழுந்து மரிப்பர்.

குரு ஆட்சியானால் குழந்தைப்பேறு குறைவு. குரு தனித்திருப்பதைவிட பிற கிரகங்களுடன் இருப்பதே நல்லது.

குரு மீனத்தில்  வர்கோத்தமமானால் அலாஸ்கா தொடர்பு உண்டு. குரு தனுசில் வர்கோத்தமமானால் ஆப்பிரிக்காத் தொடர்பு உண்டு.

குரு, சனி பரிவர்த்தனை 4 வகைப்படும். கும்ப  குரு+ மீன சனி: தாதுப் பொருள், சுரங்கப பணி. கும்ப குரு + தனுசு சனி : வழக்கறிஞர்.  மகர குரு+ மீன சனி : பிறர் நகைகளைத்  தொலைத்து விடுவார்.: மகர குரு + தனுசு சனி: வங்கி கடைநிலை ஊழியர்.

**சனி:**

சனி உச்சமானால் இரும்பு, எஃகு தொழில் அமையும். சனி நீச்சமானால் மூளைப்பமுது உண்டாகும். கும்பத்தில் சனி ஆட்சிபெறும்போது தலைமைப் பொறியாளர் ஆவார். மகரத்தில் ஆட்சியானால் படகோட்டி ஆவார். சனி கும்பம், மகரத்தில் வர்கோத்தமம் ஆனால் கிராமத்தில் சொகுசு வீடு கட்டுவார்.

மேற்கண்ட பலன்கள் பொதுவானது. ஒவ்வொரு லக்னம் அதன் தன்மைகளைப் பொறுத்து பலன் மாறும்.

**ஒரே இராசியில் ஒரு கிரகம் உச்சம், ஒரு கிரகம் நீச்சம்**

ஒரே இராசியில் ஒரு கிரகம் உச்சம், ஒரு கிரகம் நீச்சமாவது உண்டு. அதன்பலன்கள்:

**மேஷம்**: சனி நீச்சம், சூரியன் உச்சம்: இராணுவப் பதவி, பாய்லர் தொழில், வெடி மருந்துகள் தொழில் அமையும்.

**கடகம்**: குரு உச்சம், செவ்வாய் நீச்சம்: இரட்டைக் குழந்தைப் பேறு  பாக்கியம். (எந்த இராசியிலும் இரு கிரகங்கள் உச்சம், நீச்சமானாலும் இரட்டைக்குழந்தை யோகமுண்டாகும்.) பர்மா தொடர்பு உண்டு. ஹீமோகுளோபின் குறையும்.

**கன்னி**: புதன் உச்சம், சுக்கிரன் நீச்சம்: தன்னைவிட தாழ்ந்த இனப் பெண்ணை மணக்க நேரும். சரக்கு வண்டி மூலம் விபத்து உண்டு. இரட்டைப் பல் முளைக்கும். வாழைக்காய், வெல்லமண்டி வாணிபம் சிறக்கும்.

**துலாம்:** சனி + சூரியன்: செட்டியார் பல்கலைக்கழகப் பணி கிட்டும். துளுவ, இந்திப் புலமை வரும்.

**மீனம்:** சுக்கிரன் + புதன்: ரஷ்யா, கனடா உறவு தொடர்பு வரும்.

சந்திரனுடன் இராகு, கேது சேர்ந்து ஒரேகாலில் நின்றாலும், சூரியனுடன் இராகு, கேது சேர்ந்து ஒரே இராசியில் இருந்தாலும் கிரகண தோஷமுண்டு. சுபகிரகப் பார்வை பட்டால் நலமுண்டு. அசுபக் கிரகப் பார்வை பட்டால் நலமில்லை என்பதெல்லாம் கிடையாது. அவற்றிற்குரிய பலனே உண்டாகும்

**கிரகங்களின் பார்வைகள்**

கிரகங்களின் பார்வைகளுக்கு உண்டான பலன்களைக் காணலாம்.

**எல்லாக் கிரகங்களும்** தான் இருக்கும் இடத்தில் இருந்து **ஏழாவது வீட்டைப் பார்க்கும்**. அந்தப் பார்வைக்கு அதிக மகத்துவம் உண்டு.

**குரு** தானிருக்கும் இடத்தில் இருந்து **5, 7, 9** ஆம் வீடுகளைப் பார்வையிடும்.

**செவ்வாய் 4, 7, 8** ஆம் வீடுகளைப் பார்வையிடும்.

**சனி 3, 7, 10** ஆம் வீடுகளைப் பார்வையிடும்.

குரு பார்வை செவ்வாய் மீது பட்டால், செவ்வாய் தோஷம் நிவர்த்தியாகும் என்பது தவறு. குரு எந்த வீட்டை எதைப் பார்க்கிறதோ அதன் சக்தி அதிகரிக்கும். செவ்வாய் தோஷம் இன்னும் அதிகரிக்கும் என்பதே உண்மை.

சனியின் 3 ஆம் பார்வை பட்ட இடம் செயலிந்து விடும். செவ்வாய் எதைப் பார்த்தாலும் நல்லது.

சனி உச்சமானால் தரக்கட்டுப்பாடு அதிகாரி. நீச்சமானால் பல்கலைக்கழகத்தில் முதல் மதிப்பெண் (துங்கப் பதக்கம்). சங்கீத வித்வான். வர்கோத்தமமானால் நீண்ட ஆயுள் உண்டு.

* * * * *

# அலகு I

## பாடம் 2 - தனி, கூட்டுக் கிரகம் பலன்கள்

எல்லா கிரகங்களுக்கும் மேலானது தெய்வ அனுக்கிரகம். அது கிட்டினால் எதையும் வெல்லாம். இனி கூட்டுக் கிரகபலன்களைக் காண்போம். அதற்குமுன் கிரகங்கள் தனித்திருந்தால் என்னபலன்கள் எனறு பார்ப்போம்.:

### 6.1 தனிக் கிரக பலன்கள்:

ஒன்பது கிரகங்களும் லக்னத்திலிருந்து எந்த வீட்டில் தனித்திருந்தாலும் கீழ்க்கண்ட பலன்களே உண்டு.

சூரியன்: உன்னத பதவி கிட்டும்.

சந்திரன்: மனமகிழ்ச்சி உண்டு.

செவ்வாய்: பூமி யோகம் உண்டு.

இராகு-கேது: இசையறிவு உண்டு.

புதன்: கல்வி அறிவு ஏற்படும்.

குரு: புத்திர பாக்கியம் கெடும்.

சனி: பணி மனையில் தொழில் கிட்டும்.

சுக்கிரன்: பணமுடை உண்டாகும்.

இவை பொதுவான பலன்கள். பிற கிரகப் பார்வை, உச்சம், நீச்சமானால், பரிவர்த்தனையானால், அவற்றைப் பொறுத்தும், லக்னத்தைப் பொறுத்தும் பலன்கள் மாறுபடும். ஒவ்வொரு லக்னத்துக்குமான பலன்களைப் பின்னர் காண்போம்.

### 6.2 இரு கிரகக் கூட்டு

சூரியன் சந்திரன் சேர்ந்தால்: அமாவாசை யோகம். மனஉறுதி, மறைபொருளைக் கண்டுபிடிக்கும் ஆற்றல் உண்டாகும் அனுமார் போல்.

சூரியன் + செவ்வாய் சேர்ந்தால் விதவையாவார். / மனைவியை இழப்பார். விவாக இரத்து ஆகும்.

சூரியன் + புதன் இணைந்தால் புதாத்தியயோகம். கல்வி மேன்மை உண்டாகும். நிர்வாகத்திறமை ஓங்கும். முதுகலை நிர்வாக இயல் படிப்பார்.

சூரியன் + குரு சேர்ந்தால் வழக்கறிஞராவார். இரயில்வே, மண்டல மேலாளர் ஆவார்.

சூரியன் + சுக்கிரன்: மாநிலப் பெயரிலான வங்கியில் (பரோடா வங்கி, ஹைத்ராபாத் வங்கி) பணியாற்றுவார்.

சூரியன் + சனி: கிரானைட் தொழில் மின்பொறியாளர். திட்டஅலுவலர் ஆவார். முடிதிருத்துவார்.

சூரியன் + இராகு: திருட்டுத் தொழிலைக் கண்டுபிடிப்பார். கள்ளக் கடத்தலைத் தவிர்ப்பார். பிடிப்பார். காவல்துறை கண்காணிப்பாளர். பிற இன முகமதிய மணம் கூடும்.

சூரியன் + கேது: சூரணம் செய்தல், மருந்து தயாரித்தல் செய்வார்.

சந்திரன் + செவ்வாய்: மதி மங்கள யோகம். வீடுவாசல் உண்டாகும். திரையரங்கு, கல்யாண மண்டபம் கட்டுவார் (இது மதிமங்கள் யோகம் அல்லது சந்திர மங்களயோகம் என்று பெயருறும்.) இது பெரிய யோகம்.

செவ்வாய் + புதன்: கால் நடை மருத்துவர். பரிசோதனைக் கூட பொறுப்பாளர், தீவனமிடுத் தொழில் அமையும். வேதியியல் படிப்பு அமையும்.

சந்திரன் + குரு: குருச் சந்திரயோகம். இது நல்ல யோகமல்ல. வாழ்வில் அடிபட்டு முன்னேறுவார்.

சந்திரன் + சுக்கிரன்: பெண்விரும்பிகள். காமுகர்கள். பெண்கள் எனில் தவறான தொழில் செய்வர்.

சந்திரன் + சனி: கட்டிட இயல் பொறியாளர். அணைக்கட்டு, அடுக்கு வீடு கட்டுவார்.

சந்திரன் + இராகு: எக்ஸ்ரே, கணினி, திரைப்படத் தொழில் அமையும். ஓவியர்.

சந்திரன் + கேது: இரத்தப் பரிசோதனை, குடல் மருத்துவம், சித்த மருத்துவம் செய்வார்.

செவ்வாய் + புதன்: மணவாழ்வு சுகமின்மை, நிலக்கரி சாம்பல், தலைமுடி சவுரி வாணிபம். இயற்பியல் படிக்கும் வாய்ப்பு வரும்.

செவ்வாய் + குரு: குரு மங்கள யோகம். அமோக செல்வாக்கு உண்டாகும். உடற்கல்விப் பாடம் படிப்பார். பெருஞ்செல்வர்.

செவ்வாய் + சனி: கல் குவாரியில் கல்லுடைத்தல், அலுவலக உதவியாளர் பணி, மருத்துவ வேதியியல் படிப்பு அமையும்.

செவ்வாய் + சுக்கிரன்: தைரியமற்றவர். வைர மோதிரம் அணிவார்.

செவ்வாய் + இராகு: பெருந் திரையரங்குகள் வைத்திருத்தல், நாடகம் எழுதுதல், பெட்டிக்கடை வைத்தல் போன்றவை அமையும்.

செவ்வாய்+கேது: நாட்டு மருந்துக்கடை, புளி வியாபாரம், தாய் மாமாவின் பூமியை உழுதல் போன்றவை உண்டு.

புதன் + குரு: வழக்கறிஞர். போட்டி வைத்து வெல்வார். சர்க்கரை ஆலையில் தனியார் கபள்ளியின் தாளாளராவார்.

புதன் + சுக்கிரன்: கிராமவங்கிப்பணி, சிலருக்கு புற்றுநோய் இடர் வரும்.

புதன் + சனி: அச்சுத்தொழில், இலண்டன், ஜெர்மனித் தொடர்பு. வெள்ளை நிற வீடு கட்டுதல். காவல் சீருடைப் பணியாளர்.

புதன் + இராகு: ஆண்களை ஆண்களே திருமணம் செய்து கொள்ளும் நிலை.

புதன் + கேது: பெணகளைப் பெண்களே திருமணம் செய்து கொள்ளும் நிலை. கோவிலுக்கு மின்சாதனம் வாங்கித் தருதல். கையில் பச்சை குத்துதல் ஆகியன. பல் மருத்துவராவார்.

குரு + சனி: வாகனப் பணிமனை வேலை. தங்கப் பதக்கம் பெறும் வாய்ப்பு உண்டு.

குரு + சுக்கிரன்: மாவட்ட ஆட்சியர், வட்டாட்சியர். சிலகாலம் பணி நீக்கம் செய்யப்படுவார்.

குரு + இராகு: குரு சண்டாள யோகம்: கீழோர் தொடர்பால் இடர். தொழிற்சங்கத் தலைவராவார். அரிசி விற்பனை செய்வார்.

குரு + கேது: கொள்ளையடிப்பவர். மத–மனோதத்துவ மருத்துவ ஆசிரியர். பங்குத் தொழில் சிறக்கும்.

சுக்கிரன் + சனி: கல்வெட்டு ஆய்வு. ஆயுர்வேத மருத்துவர். உருளைக்கிழங்கு, வெங்காயம் வாணிபம்.

சுக்கிரன்+இராகு: கதாசிரியர். வங்கிக் கணக்கு அதிகாரி.



.

சுக்கிரன் + கேது: மறைமுக அரசியல்வாதி. வாக்குப் பலிதமுள்ளவர். சமையல் வேலை செய்வார்.

சனி + இராகு: அரிசி அரவை ஆலை வைப்பார்.

சனி + கேது: சோம்பேறி.

### 6.3. மூன்று கிரகக் கூட்டுப் பலன்கள்

1. சூரியன் + சந்திரன் + செவ்வாய்: கல்வி அதிகாரி. கண் மருத்துவர். சிறு மூன்றடுக்கு வீடு உண்டு.

2. சூரியன்+ புதன் + செவ்வாய்: அல்லது சூரியன் + புதன் + குரு: வானியல் ஆய்வு.

3. சூரியன் + சுக்கிரன் + சனி: விலங்கியல், தாவரவியல் படிப்பு அமையும்.

4. சூரியன் + இராகு (அல்லது) கேது: கிரகண தோஷம்.

இதே போல் 4 கிரகங்கள் சேர்ந்தால் பெரிய விபத்து, குண்டு வெடித்து விபத்து, வாகன விபத்து, கொலை விபத்து ஆகியவற்றிற்கு ஆளாவார்.

5 கிரகங்கள் எப்போதாவது ஒருமுறை தான் சேரும். இந்த அமைப்பு உள்ளவர் பெரிய நிறுவனத்தில் தலைமை அதிகாரியாக இருப்பார் . 5 கிரகங்களுக்கு மேல் 6 அமைந்தால் வாழ்வு ஒரே மாதிரி அமையும்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு ஒருமுறை 8 கிரகங்களின் சேர்க்கை அமையும். லக்னத்துக்கு 5, 9, 11 இல் அமைந்தால் இராஜயோகம். 6, 8, 12 இல் அமைந்தால் சகட யோகம். 5-7-11 வீடுகளே மண்டலாதிபதி பதவி தரும். 6, 8, 12 அதிர்ஷ்ட மற்றவை, மறைவுஸ்தானம் என்பதால்.

* * * * *

# அலகு I

## பாடம் 3 –ஜாதகரின் பிறந்த மாதம், வருடம், கிழமை பலன்கள்

### 3.1. பிறந்த மாதம் பலன்கள்

ஒருவர் பிறந்த மாதத்தின் வாயிலாக ஜாதகர் நற்பலன்கள் அடையக் கூடும். அதன்படி மாத பலன்களைப் பார்ப்போம். ஜாதகர் எந்த மாதத்தில் பிறந்திருக்கிறாரோ அந்தப் பலனைச் சொல்ல வேண்டும்.

**1) சித்திரையில் பிறந்திருந்தால்**

தமிழில் முதல் மாதம் சித்திரை. இம்மாதம் பிறந்தவர் இயற்கையாக மருத்துவ நாட்டமுள்ளவர். தந்தையைத் திட்டுவார். குரங்கு, பசுவால் தாக்கப்படுவார். பிறருக்காகப் பிரார்த்தனை செய்யக்கூடியவர்.

**2) வைகாசி**

எதிலும் இரண்டாம் முறையே வெற்றி உண்டாகும். பட்டாடை அணிவார். மண்டைஓடு, குடல்புண் ஆய்வில் ஈடுபடுவார். சகோதர பாசம் உண்டு. மனைவி/கணவருக்கு அடங்கியவர். வங்கிப் பணி அமையும். மருந்து, தீப்பெட்டித்தொழில், மாவட்ட அலுவலகப்பணி அமையும். நிதி நிர்வாகம் தொழில் சிறக்கும்.

**3) ஆனி**

தனிமை விரும்பி. குழப்பமுள்ளவர் நாயுடு, பிள்ளைமார் இனமக்களால் இடருறுவார். முகம்மதியர் முலம் நலமுண்டு. பக்தி குறையும் என்றாலும் பாதகம் இருக்காது. கண், பல் மருத்துவர். அகில இந்தியா வானொலி, மென்பொருள் பணி, கோவில் அர்ச்சகர் பணி, விலங்குகள் சரணாலயம் போன்ற தொழில் அமையும்.

**4) ஆடி**

பாய்லர் தொழில் சிறக்கும். கடின வேலை செய்யமாட்டார். பயம் உளளவர். காற்றாலைகளில் பணியாற்றுவார். தனிமை விரும்பி.

**5) ஆவணி**

புனிதர், மத நூல் வித்தகர். சிங்கப்பூர் தொடர்பு உண்டு. தொழிலாளர் நல அதிகாரியாவார். கேந்திர வித்யாலயா தொடர்பு உண்டு. வர்மா போன்ற பெயரினரால் நலம் பெறுவார்.

**6) புரட்டாசி**

நடுநிலை தவறாதவர். ஆஸ்த்திரேலியத் தொடர்பு உண்டு. சௌமியா, கீதா, சங்கீதா என்பவரால் நலம் பெறுவார். வெள்ளை நிறப் பொருளில் அலாதியான பிரியமுள்ளவர். கிறித்தவ வழிபாடு நலம்.

**7) ஐப்பசி**

ஒளிமயமான காலமுண்டு. சந்தியா என்பவரால் நலம். நெருப்பு, மின்சாதனங்களால் இடருண்டு. இந்தி அறிவு உண்டு. சந்தியா, சித்ரா, வசந்தா, ராஜேஷ் முதலிய பெயரினரால் நலம் தரும்.

**8) கார்த்திகை**

திருமண விஷயத்தில் சுயமுடிவு எடுத்துத் தோற்பார். முகமதியராய் மதம் மாறும் வாய்ப்பு உண்டு. வாகன உதிரி பாகம் தொழில், பக்ஃரைன் தொடர்பு உண்டாகும். மணவாழ்வு 50% சுகம் தரும்.

**9) மார்கழி**

புனித சிந்தனை உள்ளவர். பஜனைப்பாடலில் பிரியம் இருக்கும். சிலநேரம் பிறர் மனம் நோகப் பேசுவார். அன்னதானம் செய்ய விழைவார். பெரும்பாலும் மாநில எல்லையோர ஊர்களில் வசிப்பார்.

**10) தை**

நல்லவர். சத்தியக்கட்டுப்பாடு உள்ளவர். பிறர் பொருளுக்கு ஆசைப்படாதவர். அநியாயத்தைக் கண்டு பொங்குவார். தைலாம்பாள் என்னும் கடவுள் அருளுண்டு. மலைவாழ் விரும்பி.

**11) மாசி**

மாசிலாமணி என்பவரால் நலம். தனிமை விரும்பி. இநத மாதம் பிறந்தவர்கள் பயந்த குணமுடையவர்கள். எடுபடாத கடின உழைப்பாளிகள். இந்த மாதத்தில் பிறந்த அனைவரும் மாடிவீட்டில் குடியிருப்பர். வன தேவதை வழிபாடு நலம் தரும். மாசி பெரியண்ணன் சுவாமி அருளுண்டு.

**12) பங்குனி**

ஒதுங்கியிருப்பார். எதிலும் கடைசியில் வெற்றி உண்டு. ஞாபக மறதியாளர். மந்திரம் ஜபிப்பார். கார் ஓட்டுவா

## 3.2. வருட பலன்கள்

தமிழாண்டுகள் மொத்தம் 60. சந்திரனின் பெயர்களும் 60. அறுபதாண்டுகளில் பிறந்தவர்கள் அவற்றிற்குரிய பொருளுக்கு ஒத்த குணமுள்ளவர். பலன்கள் தமிழில் முதல் வருடம் பிரபவ வருடம். 60 ஆவது வருடம் அக்ஷய வருடம். இதைப் பிரபவாதி வருடங்கள் என்பர். ஒருவருடைய பிறந்த தேதியைக் கொண்டு. பஞ்சாங்கத்தைப் பார்த்தால் அதன் மேற்பகுதியில் அவ்வருடத் தமிழ்ப் பெயர்கள் எழுதியிருக்கும். அந்தப் பெயருக்கான பலன் கூறலாம்.

60 வருடங்களுக்கும் ஓரிரு வரிகளுக்குமேல் பலன்கள் சொல்ல அவசியம் இல்லை.

1) பிரபவ: எங்கும் எதிலும் முதன்மையானவர். கவிஞராவார். மத்திய வயதில் நோய் காணுவார்.

2) விபவ: எதிலும் இரண்டாவது முறையே வெற்றி உண்டு. குடும்ப சுகம் சுபம் உள்ளவர்.

3) சுக்கில: வெள்ளை உள்ளம் உள்ளவர். கடனுள்ளவர்.

4) பிரமோதூத: முதன்மை தலையானவர். இளவயதில் பிணி உண்டு. சண்டை உள்ள இருவர் மத்தியில் சமரசஞ்செய்ய தூது போவார்.

5) பிரஜோத்பத்தி: குழந்தை பாக்கியமுள்வர். பெரும்தொழில் அதிபர்.

6) ஆங்கிரஸ: மனப்போராட்டம் அற்றவர். உடல் அழகுள்ளவர்.

7) ஸ்ரீமுக: கடின உழைப்பாளி. கடிதம் எழுதுவது வாயிலாய் நல்ல பெயர் எடுப்பார்.

8) பவ: அனைவருக்கும் ஆசி கூறுவார். புனிதர்.

9) யுவ: மனைவி / கணவர் வழி சுகமுண்டு. என்றும் இளையவர்.

10) தாது: அனைத்துக்கும் காரணமாவர். சுரங்கத் தொழில் நலம் தரும்.

11) ஈஸ்வர: ஐஸ்வர்யம் உள்ளவர். நவரத்தினமுள்ளவர். ஏதாவது ஒரு துறையில் தலைமைப் பதவியில் இருப்பார்.

12) வெகுதான்ய: நவதானிய யோகமுள்ளவர். அனைவருக்கும் நன்றியுடன் இருப்பார். பண பலமற்றவர்.

13) பிரமாதி: எங்கும் எதிலும் முதன்மையானவர். தாய்வழி சொத்து உள்ளவர்.

14) விக்கிரம: வரலாற்று ஆய்வில் ஆர்வமுள்ளவர். தனிமை விரும்பி.

15) விஷு: இவ்வருடம் பிறந்தவர்கள் விரதமிருந்து மன உறுதியுடன் காத்திருந்து எதையும் சாதிப்பார்.

16) சித்ரபானு: குடும்பச்சுமை திடீர் இழப்புக்களுக்கு ஆளாவார்.

17) சுபானு: கஷ்டத்தில் இருந்து திடீரென வெளியேறுவார். தப்பித்து விடுவார். பொருட்சேதம் உண்டு.

18) தாரண: இவ்வருடம் பிறந்தவர்கள் நண்பர்கள் உறவினருக்குச் சத்தியமாய் இருப்பார். சமயத்தில் உதவி செய்வார்.

19) பார்த்திப: கல்வித்துறை நிறுவனத்தில் பணியாற்றுவார். நிர்வாக பலம் இருந்தாலும் வேலை கிட்டாது.

20) விய: இவ்வருடம் பிறந்தவர்கள் பெரும்பதவி, வீடு வாசல் பெறுவர்.

21) ஸர்வஜித்து: இவ்வருடம் பிறந்தவர்கள் எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துவர்.

22) சர்வதாரி: இவ்வருடம் பிறந்தவர்கள் முடி சீர்திருத்த நிலயம் வைப்பார். மனித உடல் உறுப்புக்களை அறுவறுப்பின்றி தொட்டு சேவை செய்வார். பணமுடை உண்டு.

23) விரோதி: சஞ்சலம் சுய நலமின்றி இருப்பார். இவருக்கு வரும் சில இடர்கள் யாருக்குமே வரக்கூடாது.

24) விக்ருதி: இவர் எக்காரியத்தைச் செய்தாலும் திருத்தமுறச் செய்வார். இவர் செய்த செயல்களை (இவ்வருடம் பிறந்தவர்கள்) யாரும் திருத்த வேண்டிய அவசியம் இராது.

25) கர: இவ்வருடம் பிறந்தவர்கள் சுய நலமிகள். பணவிஷயத்தில் கண்டிப்பானவர்கள். உறவினரால் மதிக்கப் படமாட்டார்கள்.

26) நந்தன: தோட்டம் துரவொடு வீடு அமையும். நண்பர் அதிகம்.

27) விஜய: இவ்வருடம் பிறந்தவர்கள் அழகர். அற்ப ஆயுள் உள்ள மழலைச் செல்வம் உடையவர். திடீரென்று யார் வீட்டுக்கு வேண்டுமானாலும் செல்வார்கள்.

28) ஜய: இவ்வருடம் பிறந்தவர்கள் எல்லாவிதத்திலும் பற்றற்று இருப்பர். தோல்வியைவெற்றியாய் நினைப்பார்.

29) மன்மத: உடலழகு உள்ளவர். எனினும் யாரிடமும் பணம் வாங்காமல் ஏதும் செய்ய மாட்டார்கள்.

30) துர்முகி: விபரீத சிந்தைக்கு இடம் தராதவர். தனிமையில் ஆலோசனை செய்வார்கள்

31) ஹேவிளம்பி: இவ்வருடம் பிறநதவர்கள் சொல்லிக் காட்டுவர். தப்பைச் சுட்டிக்காட்டுவர்.

32) விளம்பி: அளவோடு பேசுவார் உளவில் இறங்குவார். கவனத் தடுமாற்றமுள்ளவர். வாய்த் தகராறு செய்வார்.

33) விகாரி: மன அழுத்தம் உள்ளவர். கோவில் கட்டுவார். பரிசு வாங்குவார்.

34) சார்வரி: இறையருளாளர். பொறியாளர். பிறரைப் பிரமிக்கச் செய்யும் ஆற்றலுள்ளவராய்த் திகழ்வார்.

35) பிலவ: கணவர்/ மனைவியை இழப்பார். சகோதரரால் காப்பாற்றப்படுவார். அண்ணியால் தூற்றப்படுவார்.

36) சுபகிருது: இவ்வருடம் பிறப்பவர்கள் ஆள் மயக்கிகள். அழகர். முள்ளற்ற ரோஜாக்கள்.

37) சோபகிருது: இவ்ருடம் பிறந்தவர்கள் மத்திய அரசுப் பணிகளில் இருப்பார். வீடு வாகனமுள்ளவர்.

38) குரோதி: இவ்வருடம் பிறந்தவர்கள் கடனாளியாவார். ஓவியம், நாட்டியம் என்று அலைவர். தொழிலற்றவர்.

39) விசுவாவசு: சாபமிடுவார். தன்னலமற்றவர். பயம், மனக்குமுறல் உள்ளவர்கள்,

40) பராபவ: தேவைக்கு மேல் சம்பாதிப்பவர்.

41) பிலவங்க: மாட்டு டாக்டர். மா, பலா, வாழை ஆய்வு செய்வர்.

42) கீலக: இவ்வருடம் பிறப்பவர் மேலான சிந்தனை உள்ளவர்.

43) சௌமிய: இவ்வருடம் பிறந்தவர்கள் பூமியோகமுள்ளவர். நாடாளும் யோகமுள்ளவர். நடுநிலையாளர் போல் நடிப்பார்.

44) சாதாரண: மதியூகமுள்ளவர். பேச்சாற்றலுள்ளவர். இரட்டை அர்த்த வார்த்தைகளை உதிர்ப்பார்.

45) விரோதிகிருது: வெளிநாடு சென்று சம்பாதிப்பார். நண்பர்கள் அதிகமுள்ளவர். பயமற்றவர். சண்டை இடுவார். சரணடையச் செய்வார்.

46) பரிதாபி: கிரிக்கட் வீரர். பெருஞ்செல்வம் சேர்ப்பர். சுபச்செலவு உண்டு.

47) பிரமாதீச: முதன்மையில் இருந்தாலும் கடைசியில் உள்ளவரைக் காப்பாற்றுவார். நலமுள்ளவர்.

48) ஆனந்த: அழகர். தாமத மணமுள்ளவர். மனத்தோரம் சோகமுண்டு.

49) ராக்ஷஸ: மனஉறுதி உள்ளவர். இளம் வயதில் கணவர்/ மனைவியை இழந்து திருமணமான ஆண்/ பெண்களோடு இணைவர்.

50) நள: நடுநிலை தவறாதவர். சமையல்கலை வல்லுநர்களாய் இருப்பர்.

51) பிங்கள: இராஜஸ்தான், டெல்லி தொடர்புள்ளவர்.

52) காளயுக்தி: தூது செல்வார். தந்திரசாலிகள்.

53) சித்தார்த்தி: புத்த / ஜைன மதம் பர்மிய, இலங்கைத் தொடர்பு உள்ளவர். பறவைகளிடம் அன்புள்ளவர்.

54) ரௌத்திரி: இவ்வருடம் பிறந்தர்கள் கபட சன்னியாசிகள். கோபமுள்ளவர்.

55) துன்மதி: சிறியன சிந்தியாதவர். மேலானவர்கள்.

56) துந்துபி: அழியாத புகழுள்ளவர். விரோதிகள் அற்றவர்.

57) ருத்ரோத்காரி: சண்டையிடுவார். கோபத்தால் உயிரிழப்பர்.

58) ரக்தாக்ஷி: இவ்வருடம் பிறப்பவர்கள் கொலை/ கொள்ளைகளுக்கு ஆளாவார். உடற்காயமடைவர்.

59) குரோதன: வெற்றி உள்ளவர்.

60) அக்ஷய: இவ்வருடம் பிறப்பவர் செல்வம், தொழில் செழிப்படைய வாழ்வர்.

மேற்கண்ட 60 வருடப் பலன்களையும் ஒருமுறை படித்தாலே புரிந்து விடும்.

### 3.3. பிறந்த கிழமை பலன்கள்

ஒரு ஜாதகர் பிறந்த கிழமைகளுக்குத் தக்க சில நன்மை தீமைகளைப் பெறுவர். அதன் பலன்களைப் பார்ப்பபோம். கிழவன் கிழவி என்றால் தமிழில் தலைவன், தலைவி என்று பொருள். சங்க இலக்கியங்களில் காதல் கிழவன், காதல் கிழவி என்று வரும். நக்கீரர் கூட தனது திருமுறுகாற்றுப்படையில்

முருகனைப் பழமுதிர்ச்சோலை மலைக் கிழவோனே (தலைவனே) என்று புகழ்ந்திருக்கிறார். அதன்படி பார்க்கையில் கிழமை என்றால் தலைமை என்று பொருள்படும். இன்று ஞாயிற்றுக்கிழமை என்றால் சூரியன் தலைமையில் உலகம் இயங்கும் என்றும், திங்கட்கிழமை என்றால் சந்திரனின் தலைமையில் உலகம் இயங்கும் என்றும் கிழமை வரிசைக்கிரமத்தில் பொருள் கொள்ள வேண்டும். அதன்படி ஒவ்வொரு கிழமையும் அவற்றிற்குரிய பலன்களைப் பெற்றுள்ளது. அவற்றைப் பார்ப்போம். கிழமை பலன்கள் இருபாலருக்கும் பொருந்தும்.

1. **ஞாயிறு**: இக்கிழமையில் பிறந்தவர்கள் பிறருக்காகப் பிரார்த்தனை செய்வார். ஓய்வற்றவர். பிடிவாத குணமுள்ளவர். சண்டையிட்டுக் காரியம் சாதிப்பார். முதன்மைப் பணியாற்றுவார். ( ருதுவான கிழமைக்கும் இதே பலன்தான்.)

2. **திங்கள்:** பக்தி நெறி மிக்கவர். இஷ்டதெய்வ அருளுடன் வாழ்வார். இரவு நேரம் குளுமையுடன் இருப்பார். தீர்க்க சுமங்கல்யம். மனைவி அரவணைப்பு உண்டு.

3. **செவ்வாய்:** பொறுமையுள்ளவர். பூமி இலாபமுண்டு. சிலம்பு / கரகாட்டம் ஆடுவார். எதிலும் இரண்டாம் முறையே வெற்றியுண்டு. நாய் வளர்ப்பார்.

4. **புதன்:** நடுநிலையாளர். அழகர். தினமும் மதியம் சோர்வடைவார்.

5. **வியாழன்:** நூலகர் ஆவார். இவர் வாழ்வே பிறருக்குப் பாடமாய் அமையும். மலையாள மொழி அறிஞர்.

6. **வெள்ளி:** கடின உழைப்பாளி. தோல்வி கண்டு துவண்டாலும் பீனிக்ஸ் பறவை போல துளிர்த்து எழுவார். கொஞ்சம் பொறாமை குணமுள்ளவர். வெள்ளிக்கிழமை பிறந்த குழந்தை (ஆண், பெண்) கொள்ளிக்கு உதவும் என்பது தவறான கருத்து. வெள்ளிக்கிழமை பிறப்பதற்கும் தாய் தந்.தை ஆயுள் பலத்துக்கும் சம்மந்தமில்லை. அதேபோல் இராகு காலத்தில் பிறந்தாலும் தவறில்லை.

7. **சனி:** புனிதர். பஜனைப் பாடலில் பிரியம் இருக்கும். தான தர்மத்தில் பிரியமுண்டு. ஞாபக சக்தி உள்ளவர்.

இவ்வாறு ஜாதகருக்கு அவரவர் பிறந்த கிழமைக்குரிய பலனைச் சொல்ல வேண்டும்.

* * * * *

## பாடம் 4 – இரு திரு நாகங்கள்

மனித வாழ்வில் இராகு, கேது என்னும் இருதிரு நாகங்கள் தனித்தமைந்தும் கிரகங்களோடு இணைந்தமைந்தும் சரியான பாதையில் இட்டுச் செல்கின்றன. சனி, இராகு, கேது ஆகியவை கொடிய கிரகங்கள் என்பது தவறான கருத்து. கடிகாரத்தில் பெரிய முள், சின்ன முள் போல் மனிதர்களின் வேகத்தைக் குறைத்து விவேகத்தை அளிக்கத்தக்கவை இத்திரு நாகங்கள். இனி இராகு கேது தனித்திருப்பதால் உண்டான பலன்களைப் பார்ப்போம்.

### 4.1. தனித்து இருக்க பலன்கள்

1. மேஷம் – துலாத்தில் முறையே இராகு – கேது அல்லது தனித்திருந்தால் குடல் வைத்தியர் ஆவர். ஞானி ஆவர்.
2. ரிஷபம் – விருச்சிகத்தில் உச்சம், நீச்சமுற்றால் மாமா, சிற்றப்பா வீட்டு வாசமுறுவார்.
3. மிதுனம்–தனுசு இராசியில் தனித்திருந்தால் தனியார் வங்கிப் பணி அமையும். அமைச்சராவார்.
4. கடகம்– மகரம் இராகு– கேது ஞான வடிவினராய், கவிஞர்களாய், இல்லறத்துறவிகளாய் இருக்க நேரும். எடுத்துக்காட்டு: வள்ளலார், இராகவேந்திரர். இந்தத் தனித்த அமைப்பு பத்து இலட்சம் பேர்களுக்கு ஒருவருக்கே அமையும்.
5. சிம்மம்–கும்பத்தில் தனித்திருந்தால் மிருதங்க வித்வான் ஆவர். திடீரெனக் கலைத்துறையில் பிரவேசித்து பெரும் செல்வம் சேர்ப்பார்.
6. கன்னி– மீனத்தில் (இராகு–கேது தனித்து இருந்தால் அலாஸ்கா முதல் ஆஸ்திரேலியா வரை பயணம் செய்து செல்வம் சம்பாதிப்பர்.

### 4.2. கிரகச் சேர்க்கை பலன்கள்

இனி இராகு–கேது மற்ற கிரகங்களுடன் சேர்ந்து இருக்கும்போது உண்டாகும் பலன்களைப் பார்ப்போம்.

1. **இராகு + சூரியன்** மேஷத்தில் சேர்ந்து இருந்தால் பெரிய அரிசி ஆலை அதிபர். துலாத்தில இருந்தால் தொழிற்சங்கத் தலைவர். சிம்மத்தில் இருந்தால் இரயில் ஓட்டுனர்.

மேஷத்தில் கேது + சூரியன் சேர்ந்தால் அக்குபஞ்சர். சிம்மத்தில் கேது + சூரியன் இருந்தால் மூலிகை மருத்துவர். துலாத்தில் கேது + சூரியன் இருந்தால் மாந்திரீகராய்த் திகழ்வர். மற்ற ஒன்பது வீடுகளைப் பற்றிப் பார்ப்போம்.

2. **இராகு + சந்திரன்** சேர்க்கை கடகத்தில் இருந்தால் கடல்சார் சிக்னல் அதிகாரி. கப்பற்படைத் தளபதி. ரிஷபத்தில் சந்திரன் இராகுவுடன் இருந்தால் துப்பறியும் நிபுணர். ரூபாய் நோட்டு அச்சடிக்கும் ரிஸர்வ் வங்கி ஆளுநர். விருச்சிகத்தில் இருந்தால் வாழை, தென்னை ஆய்வு மைய அதிகாரி. வன அலுவலர்.

ரிஷப கேது–சந்திரன் யுனானி மருத்துவர். கடகத்தில் கேது + சந்திரன் சேர்க்கை இசை வல்லுநர். விருச்சிகத்தில் கேது + சந்திரன் சேர்க்கை ஏற்றுமதியாளர். ஒருங்கிணைப்பாளர்.

3. **செவ்வாய் + இராகு**: மேஷத்தில் இருந்தால் இராணுவ தளபதி. விருச்சிகத்தில் இருந்தால் எல்லைப் பாதுகாப்பாளர். கடகத்தில் இருந்தால் காமிரா (திரைப்பட ஒளிப்பதிவாளர்). மகரத்தில் இருந்தால் காப்பி – தேயிலை – ஏலக்காய் பண்ணை உரிமையாளர்.

கேது மேஷத்தில் செவ்வாயுடன் இருந்தால் மூளை மருத்துவர். கடகத்தில் இருந்தால் எக்ஸ்ரே ஸ்கேன் அலுவலர். விருச்சிகத்தில் இருந்தால் நில அளவை அலுவலர். மகரத்தில் இருந்தால் தொலைபேசி, மின்வாரிய மண்டல அதிகாரி.

4. **புதனுடன் இராகு** சேர்ந்து மிதுனத்தில் இருந்தால் வங்கி மேலாளர். கன்னியில் இருந்தால் உப்பு, மீன் சேகரிப்பாளர். முத்து, உப்பு, மீன் சேகரிப்பாளர். மீனத்தில் இருந்தால் பல் மருத்துவர், ஓரினச் சேர்க்கையாளர்.

புதனுடன் கேது சேர்ந்து மிதுனத்தில் இருந்தால் சர்க்கரை ஆலைக்கழிவு ஆபிஸர். கன்னியில் இருந்தால் பெருமாள் கோவிலுக்கு மின்சாதனம் வாங்கித் தருவார். மீனத்தில் இருந்தால் கள்வர். கொலையாளி. (சுபகிரகம் பார்க்கின் மாறும்.)

நாகதோஷம், சர்ப்ப தோஷம் என்று பயப்படும் நாம் இந்த இரு திருநாகங்கள் பற்றி படிக்க வியக்கிறோம். பார்த்தீர்களா?

5. **குருவுடன் இராகு** சேர்ந்து தனுசில் இருந்தால் பங்குதாரர் ஆவார். கடகத்தில் இருந்தால் நிர்வாக அதிகாரியாவார். மகரத்தில் இருந்தால் கூலி வேலை. மனிதக்கழிவு நீக்கிகளாக இருப்பார்.

கேதுவுடன் குரு சேர்ந்து கடகத்தில் இருந்தால் மூளை வைத்தியர், பங்கு தாரர் ஆவார். தனுசில் இருந்தால் கோவில் பூசாரியாவார். மகரத்தில் இருந்தால் விஷக்கடி மருத்துவராவார்.

6. **சனியுடன் இராகு** சேர்ந்து மகரம், கும்பத்தில் இருந்தால் செய்தி சேகரிப்பவர். அரிசி ஆலை முதலாளியாவார். மேஷத்தில் இருந்தால் பிளாட்டின வியாபாரியாவார். துலாத்தில் இருந்தால் கட்டுமானப் பணி செய்வார். மகர – கும்பத்தில் கேது சனியுடன் இருந்தால் குடல் மருத்துவர். மேஷத்தில் இருந்தால் வெடிகுண்டு செய்பவர். துலாத்தில் இருந்தால் சித்த மருத்துவர். மற்ற கிரக இணைப்புகளை முன்னரே பார்த்தோம்.

7. **சுக்கிரனுடனும் இராகு** சேர்ந்து துலாம், ரிஷபத்தில் இருந்தால் பெண் போகர். கிரிமினல் வக்கீல் ஆவார். கன்னியில் இருந்தால் கீழ் ஜாதி மக்கள் ஒருங்கிணைப்பாளர். மீனத்தில் இருந்தால் கப்பலோட்டி கட்டுபாடு அதிகாரியாவார்.

சுக்கிரனுடன் கேது 12 வீடுகளில் எங்கு சேர்ந்து சேர்ந்து இருந்தாலும் மூலிகை மருத்துவராவார். அரசில் தொடர்புள்ளவர். பல்பொருள் அங்காடி வைப்பார்.

இது தவிர மற்றக் கிரகங்களுடன் இராகு–கேது ரிஷபத்திலோ அல்லது விருச்சிகத்திலோ இருந்தால் உச்சம், நீச்சத்துக்குத் தகுந்து வருமானமுண்டு.

கேது மருத்துவக்காரகன் எனபதால் ஒவ்வொரு கிரகக்துடன் சேரும் போது சித்தா, ஹோமியோ, அலோபதி என்றும், உறுப்பு மருத்துவர் என்றும் பிரியும். அதனைப் பின்னர் தொழில் பாவத்தில் பார்க்கலாம்.

இராகு இயந்திரக்காரகன் என்பதால், சூரியனுடன் சேர்ந்தால் ரோடு ரோலர் இயந்திரம், சந்திரனுடன் சேர்ந்தால் தண்ணீர் இறைக்கும் இயந்திரம், செவ்வாயுடன் இணைந்தால் பல்சக்கர இயந்திரம். புதனுடன் சேர்ந்தால் அச்சடிக்கும் இயந்திரம், குருவுடன் கேது சேர்ந்தால் மருத்துவ ஆசிரியர், இராகுவானால் பொறியியல் பேராசிரியர். தொடர்புத் தொழில் அமையும். சுக்கிரனுடன் சேர்ந்தால் சினிமாத் துறை, சனியுடன் சேர்ந்தால் பேரிரைச்சல், இராட்சத இயந்திரம் லோகோ, தொடர் வண்டி, சுரங்கத் தொழில். (செவ்வாயுடன் இருந்தாலும் ) வாழ்வு அமைத்துத் தரும். சந்திரன் + கேது சேர்ந்து லக்னத்திற்கு 6–இல் மறைந்தால் மனநோயாளி.

இராசி வாயிலான பலன்கள் பின்னர் பார்ப்போம். மருத்துவத்தில் பல வகை மருத்துவம் உள்ளதையும் பின்னர் காணலாம். இவ்விதம் இராகு, கேது இணைந்து செயல்பட்டு மற்ற கிரகங்களை வலுவுறச் செய்வதால் இராகு கேதுவை வணங்குவோம்.

சந்திரனில் இறங்கிய ஆம்ஸ்ட்ராங் உட்பட மூன்று விண்வெளி வீரர்களும் கடகம், விருச்சிகக்காரர்கள் (சந்திரன், ஆதிக்கம் – இராகு சேர்க்கை ) என்பது குறிப்பிடத்தக்கது. அதே போல் கடகம் – விருச்சிகம், மீன இராசிக்காரர்கள் மண், விண், தண் (கடல்) கடந்து பல சாதனைகளை அளித்ததும் நாம் அறிந்ததே.

முழுமையும் முதுமையும் பெற்ற இராகு, கேதுக்களின் சேவைகளை முழுமையாகச் சொல்ல இயலாது. அவை நிறைய இருப்பதால் விரிவஞ்சி ஓரளவு இவ்விடம் கூறப்படுகின்றது. இராகு, கேது உச்ச நீச்சமாகும் ரிஷப விருச்சிகத்தில் செவ்வாய் சந்திரன் சேர்ககை உச்ச பலமே தரும். குரு சனி சேர்ந்தால் தங்கப்பதக்கம் வாங்குவார் என்று முன்னர்ப் பார்த்தது போல் செவ்வாய் சந்திரனுடன் இணையும் இராகு கேது அமோகப் பலன்களை அள்ளித் தரும். எனவே, இருதிரு நாகங்கள் தூற்றப்படுபவை அல்ல. போற்றப்படுபவை; ஒதுக்கப்படுபவை அல்ல. துதிக்கப்படுபவை.

* * * * *

## அலகு II

# பாடம் 5 – பழமொழிகளும் விதிவிலக்குகளும்

பொதுவாக கிரகங்கள், இராசிகள், நட்சத்திரங்கள், கிழமைகள், திதிகளைப் பற்றி பழமொழிகள் தவறாகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன. அவற்றின் உண்மையான உட்பொருளை இங்கு காண்போம். ஒரு சோதிடர் இப்பழமொழிகளின் உண்மைப் பொருளை அறிந்து, வரும் ஜாதகர்களிடம் சொன்னால், அவர்களுக்கு மன ஆறுதலும் மனத் தெளிவும் நிம்மதியும் கிடைக்கும்.

### 5.1. பொது பழமொழிகள் (கிழமைச் சார்ந்த பழமொழிகள்)

#### 1. கண்கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்

பட்ட பின் அறிவு வரும் என்பதன் பொருள்படக் கூறும் இப்பழமொழியின் உண்மைப் பொருள்: கண்ணுக்குச் ,சூரியன் எட்டிய பிறகு சூரிய நமஸ்காரம் செய்ய வேண்டும். சூரியன் உதயமாவதற்கு முன் வணக்கம் பண்ணிப் பயனில்லை என்பதே, சூரியன் கண்ணுக்கு எட்டியப் பிறகு நமஸ்:காரம் என்று வந்தது.

#### 2. விதியை மதியால் வெல்லலாம்

விதியை மதியால் வெல்லலாம் என்றால் அறிவால் வெல்லலாம் என்றோ, தன் சமயோசித புத்தியால் வெல்லலாம் என்றோ பொருளல்ல. விதியை யாராலும் மாற்ற முடியாது என்பதே உண்மை. ஆனால் மதி என்றால் சந்திரன் என்று பொருள். இவ்விடம் அறிவைக் குறிக்காது. அப்படி நம் நட்சத்திரத்துக்குச் சந்திரன் சந்திராஷ்டம் நாள் இல்லாமல் 2, 3, 6 போன்ற சாதகமான இராசியில் பிரவேசிக்கும் போது திட்டமிட்டு செயலாற்றினால் செயல் வெல்லும் என்பதே பொருள். அதாவது, தடைபடும் விதியை மதி (சந்திரன்) சஞ்சரிக்கும் இராசியைக் கணக்கிட்டு செய்ய வேண்டும் என்பதே பொருள்.

#### 3. செவ்வாய் வெறுவாய்

செவ்வாய் அன்று செய்யும் காரியம் வெறுமனே வீணாகும் என்று தவறாகப் பயன்படுத்தப்படும் இப்பழமொழிக்கு உண்மையான இரு பொருள் உள்ளன. 1) செவ்வாய்க் கிழமை செய்யும் செயல் மூலம் வருவாய் அதிகம் என்பதாம். 2) மற்றொன்று நன்கு கற்றறிந்த மாந்தர்கள் செவ்விய வாய் உடையவர்கள். அதிகம் பேச மாட்டார்கள். அதுவே செவ்வாய் வெறு வாய் என்று ஆனது. சமயம் வரும் போது பேசி மற்ற நேரத்தில் மௌனமாய் இருப்பதே இதன் பொருள்.

**4. பொன் கிடைத்தாலும் புதன் கிடைக்காது**

புதன் கிழமை வாரா வாரம் வரும். பொன் கைக்கு வருவது அரிது. பிறகு ஏன் இப்படிக் கூறினர்? சோதிடவியல்படி பொன்– பொன்னவன் என்பது குருவைக் (ஆசிரியரைக்) குறிக்கும். புதன் வித்தையை, கல்வியைக் குறிக்கும். அதன் படி பார்த்தால் நல்ல ஆசிரியர் (பொன் கிடைத்தாலும் ஒருவருக்குக் கல்வியைக் கிரகிக்கும் ஆற்றல் கிடைப்பது (புதன்) அரிது என்பதையே இது குறிக்கும். ஆசிரி;யர் கிடைப்பது எளிது. கற்கும் மாணவர் கற்பது அரிது என்பதே உண்மைப் பொருளாகும்.

**5. மறைந்த புதன் நிறைந்த கல்வி**

புதன் 6 இல் மறைந்தால், அதிக வருமானம். அவர் பெற்ற கல்வியால் வரும் என்பதே இதன் பொருள். சனி–செவ்வாய்–இராகு–கேது–புதன்–சூரியன்–சந்திரன், அதாவது சுக்கிரன், குருவைத் தவிர மற்றவை 6 இல் மறைவது சிறப்பான பலன் தரும்.

**6. வெள்ளிக் கிழமை பிள்ளை கொள்ளிக்கு மட்டும்**

வெள்ளி– கொள்ளி என்று எதுகை மோனையாகப் பேசப்பட்டது. இதற்கு ஆதாரம் இல்லை. எத்தனையோ குழந்தைகள் வெள்ளிக் கிழமை பிறந்து பெற்றோர் நல்ல நிலையில் இருந்திருக்கின்றனர்.

**7. சனிப் பிணம் தனிப் போகாது**

சங்க காலத்தில் திணைப் புனம் நடுபவர்கள் சனிக்கிழமையன்று (புனம்= வயல்) புனத்தில் அறுவடை செய்து உடனுக்குடன் நாற்று நடுவர். மற்ற நாட்களை விட சனிக்கிழமை நாற்று நட்டால் பயிர் செழிக்கும் என்பது அவரது நம்பிக்கை. அதன்படி உடனுக்குடன் திணையைப் புனத்தில் நடுவதால் சனி புனம் தனி (த்து ) இருக்காது என்பதையே சனிப் புனம் தனிப்போகாது என்றனர். இது சனிப் பிணம் என்றானது.

இதுகாறும் கிழமைகளைப் பற்றிய பழமொழிகளின் சரியான பொருளை உணர்ந்து கொண்டோம். அதே போல் மாதங்களைப் பற்றியக் கூற்றுக்களைக் காண்போம்.

## 5.2. மாதப் பழமொழிகள்

### 1. சித்திரை அப்பன் தெருவிலே

பெரும்பாலும் பெருமாள் கோவில் மற்றும் சிவன் கோவில்களில் சித்திரை மாதம் தேர் பவனி நடக்கும். அப்பன் என்றால் தலைவன், தந்தை என்று பொருள். தந்தை அரியாகவும் அரனாகவும் இருக்கலாம் அல்லவா? தேர் வீதியில் வருவதால் சித்திரை மாதம் சிவன், விஷ்ணு இருவரும் மூலஸ்தானத்தை விட்டு தெருவில் வருவார்கள் என்பதையே நம்மவர்கள் சித்திரை மாதம் பிறந்த குழந்தையின் தந்தை தெருவில் நிற்பார் என்று தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். சித்திரை (மாதம்) அப்பன் தெருவில் தரிசனம் தருவார் என்பதே உண்மையான பொருள்.

### 2. கூனிக் குறுகினாலும் ஆனியில் குடி போகாதே

ஹானி என்றால் மன வருத்தம் என்று பொருள். வீடு எப்போது வேண்டுமானாலும் மாறலாம். ஆனால், மனவருத்தத்தோடு குடி மாறக்கூடாது. ஹானி என்பது தமிழில் ஆனி ஆனது. குடும்பத்தாருடன் மன வருத்தத்தில் வேற்றிடம் குடி ஹானியில், ஆனியில் போகக் கூடாது என்பதே உண்மையான பொருள். ஆனி மாதத்திற்கும் குடி போவதற்கும் சம்பந்தம் இல்லை.

### 3. புரட்டாசி காய்ச்சல்

புரட்டாசி மாதம் புளி, துவரை போன்றவற்றை வாசலில் காற்றாடக் காயப் போடுவர்கள். காய்ச்சல் என்பது நோயைக் குறிக்காது. இங்குத் தானியங்களைக் காயப் போடுவதைக் குறிக்கும்.

### 4. மார்கழி பீடை மாதம்

மார்கழி பீடு (பெருமை) உடைய மாதம். அதாவது ஆன்மீகம், மோட்சம் தர வல்ல மாதம். பீடுடைய (பீடை-பெருமையை உடைய) மாதம் என்பதே சரியானது.

### 5. தை பிறந்தால் வழி பிறக்கும்

தை மாதம் அறுவடையாகி, போகம் நல்விலைக்குப் போவதால், வருமானம் கூடி வீடு கட்ட, திருமணம் செய்து வைக்க வழி பிறக்கும் என்பதே சரியானது.

## 5.3. நட்சத்திரங்களுக்கான பழமொழிகள்

### 1. பரணி தரணி ஆளும்

பரணம் (மகுட ஆபரணம்) என்றால் முடிசூட்டுதல் என்று பொருள். மன்னர்கள் முடிசூட்டு நாள். பத்தாம் நாள் தசமி என்பது போல், முடிசூட்டு நாள் பரணி என்று பெயர் பெற்றது. அப்படிப் பட்டம் சூட்டிய நாள் முதல், தரணி (நாடு) ஆளும் தினம் என்பதே உண்மையானது. பரணி நட்சத்திரத்திற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை.

### 2. ரோகிணி மாமனை உருட்டும்

கிருஷ்ணர் ரோகிணி நட்சத்திரம். அதனல் ரோகிணியில் பிறந்தவர்கள் அனைவருமே மாமாவுக்கு விரோதிகள் அல்லர். கம்சன் தவறு செய்தான். கிருஷ்ணர் தண்டித்தார். எல்லா தாய் மாமன்களும் சகோதரி மகன், மகள் மீது பிரியமாய் இருப்பது கண்கூடு. தாய் மாமாவை அழிப்பதற்கில்லை ரோகிணி நட்சத்திரக்காரர், ஒரு குழந்தை தாய் மாமாவை அழிக்க வேண்டுமென்றால், கீழ்க்காணும் கோள் அமைப்பு பெற்றிருக்க வேண்டும்.

1. ஆவணி மாதம் கிருஷ்ண பக்ஷ அஷ்டமியில் இரவில் பிறந்திருக்க, அன்று அப்பெற்றோர் சிறையில் இருந்திருக்க வேணடும்.

2. இக்குழந்தை எட்டாவது குழந்தையாய் இருக்க வேண்டும். முதல் ஏழு குழந்தைகளும் இறந்திருக்க வேண்டும்.

3. குழந்தை அக்காவுக்குப் பிறக்காமல் தங்கைக்குப் பிறந்திருக்க வேண்டும்.

4. மாமன் நாடாளும் மன்னனாய் இருக்க வேண்டும்.

மேற்கண்டபடி பிறந்திருந்தாலே மாமனுக்கு ஆகாது. மேலும், ரோகிணி தட்சனின் மகள் என்பதும் தவறானது. தட்சன் தன் மகளுக்கு ரோகிணி என்று பெயர் சூட்டியிருக்கலாம். அவ்வளவுதான். எனவே, ரோகிணியில் பிறந்த குழந்தையைப் பழிக்க வேண்டாம். உரககணம் (உரகம்-பாம்பு), (உரக கணம் – பாம்புக் கூட்டு) மாமனை அழிக்கும் என்பதே சரியானது. உரோகணம் என்றாகி ரோகிணியானது. கம்ஸனுக்குச் சர்ப்ப தோஷம் இருந்ததால் இப்படி ஆனது.

**3. ஆயில்யம் மாமனாருக்கு ஆகாது**

இலக்குவன், ஊர்மிளை இவர்களின் திருமணநாள் அன்றே ஊர்மிளையின் தந்தை காலமானார். இலக்குவன் ஆயில்ய நட்சத்திரம் என்னும் கருத்து நிலவுவதால் இப்படி ஆனது. ஆனால், இது தவறான கருத்து. தற்போது ஆயில்யத்தைச் சேர்ந்தவர்கள் மாமனாருடன் தங்கியே இருக்கின்றனர்.

**4. மகம் ஜகம் ஆளும்**

மாசி மகத்தன்று ஜகந்நாத சுவாமி (சிவன்), மக்கள் அனைவரும் குடந்தையில் (கும்பகோணத்தில்) கூடியிருக்க, ஆசி கூறுவதையே மகம் ஜகம் ஆளும் என்றனர். அங்குள்ள ஜனம்–மக்கள்– (ஜகத்தைக் குறிக்கும்) சிவன் பேச்சுக்குக் கட்டுப்படுவதால் இந்தப் பழமொழி உண்டானது.

**5. கேட்டை கோட்டை கட்டும்**

ஜேஷ்ட்டன் என்றால் அண்ணன். ஜேஷ்ட்டான் நட்சத்திரம் (கேட்டை) ஜேஷ்ட்டப்ராத: பிதுர் சமான: ) ஒரு வீட்டில் ;மூத்த அண்ணன் தந்தைக்குச் சமமானவன். கூட்டுக் குடும்பத் தலைவன். அரசருக்கு நிகராய் விளங்குபவர் என்பதைக் கேட்டை கோட்டை கட்டி ஆளும் என்றனர். தம்பி. தங்கைகள் அண்ணனின் பேச்சைக் கேட்டு நடப்பதால் அரச வாழ்வு என்ற பொருளில் கூறப்படுகிறது.

**6. ஆண் மூலம் அரசாளும், பெண் மூலம் நிர்மூலம்**

ஒரு பெற்றோர், தான் பெற்ற மகன் (ஆண்) மூலம் வந்த சொத்தை உரிமை கொண்டாட முடியும். தான் பெற்ற மகள் (பெண்) மூலம் வந்த சம்பாத்தியத்தை உரிமை கொண்டாட முடியாது. அது அவள் கணவனுக்கே சொந்தம். அவளின் பெற்றோருக்கு இல்லை. எனவே, நிர்மூலம், வாரிசு சம்பாத்தியம் என்பதே இப்படி ஆனது. மூல நட்சத்திரத்துக்கும் அந்த நட்சத்திரத்தில் பிறந்த ஆண், பெண்களுக்கும் இப்பழமொழிக்கும் சம்பந்தமே இல்லை. எனவே, இது குறித்து கவலைப் பட வேண்டாம். இதனை ஒவ்வொரு சோதிடரும் நன்கு மனத்தில் வாங்கிக் கொண்டு, ஜாதகம் பார்ப்பவருக்குத் தெளிவை உண்டாக்க வேண்டும்.

அதேபோல், நதிமூலம் ரிஷிமூலம் பார்க்காதே என்பதற்கு வேறுபொருள் உண்டு. சாதாரணமாய் நடந்துசெல்லும் சாலையில் பணமோ நகையோ கிடந்தால் அதனை நாம் எடுத்துப் பயன்படுத்துவோம். அதேபோல், நதியில் குளிக்கும்போது காசு, நகை கிடைத்தால் எடுத்துப் பயன்படுத்தக்கூடாது. அது அபர (பெரிய) காரியங்களுக்குப் பயன்படுத்தப்பட்டவையாகவோ, தோஷங் கழிக்க விடப்பட்டவையாகவோ

இருக்கலாம் என்பதே உண்மைப் பொருள். முனிவர் ( ரிஷி) ஆசிர்வாதம் செய்தால் ஏற்கலாம். ஆனால், அவர் தவ வலிமையால் பெறப்படும் எந்தப் பொருளையும் பயன்படுத்த முடியாது. குசன், திரிசங்கு சொர்க்கமாகி, தற்பொழுது உலகில் இல்லாததைப் போல், அந்தப் பொருள் மறைந்துவிடும் என்பதையே நதிமூலம் ரிஷிமூலம் பார்க்காதே என்றனர்.

**7. பூராடம் நூலாடாது:**

எல்லாரும் பூராட நட்சத்திரக்காரருக்குத் தாலி நிலைக்காது என்று நினைக்கின்றனர். தாலி கயிற்றால் ஆனது. பூணல் நூலால் ஆனது. கயிற்றுக்கும் நூலுக்கும் வித்தியாசமுள்ளது. பூராடம் நட்சத்திரக்காரர்கள் அதிகம் பேசமாட்டார்கள். பூராடம் நுவல் ஆடாது. நுவலுதல் என்றால் பேசுதல் என்பதே உண்மையான பொருள், பூராடம் நுவல் ஆடாது ( வாயாடாது) என்பது மாறி நூல் ஆடாது என்றானது. எனவே, இதற்கும் நாம் அஞ்ச வேண்டாம்.

மாறிவரும் உலகம் 'ஜிகுஜிகு ஜிகு இதி ஜெகத்' என்று வடமொழிக்கூற்றுக்கு இணங்க எத்தனையோ நாகரிகங்கள் நிமிடத்திற்கு நிமிடம் மாறினாலும், எண், எழுத்து மற்றும் மூதாதையர்கள் கூற்று மாறாதது. நாம் மனிதர்கள், நரர்களாவோம். பாதி குரங்கினம், பாதி மனித இனம். மூலம், பூராடம் நட்சத்திரத்தைச் சேர்ந்த அனுமன், சுக்ரீவன், வால்நரம் ( வாலுள்ள நரம் வானரங்கள்) ஆனது.

**8. உத்திராடத்துக்கு ஊரோரத்தில் காணி**

உத்திரம், உத்திராடம், உத்திரட்டாதிக்கு ஊரோரத்தில் காணி நிலம் என்பது தவறு. இவை 12 இராசிகளில் ஓரத்து இராசியான (சிம்மம் கடைசி), கன்னி, (தனுசு கடைசி), மீனம் ஆகியவற்றில் அமைந்துள்ளதால் இப்பெயர். இது வெறும் கூற்றே. உண்மையல்ல.

**9. அவிட்ட நட்சத்திரத்துக்குத் தவிட்டுப்பானையெல்லாம் தங்கம்**

அவிட்டம் நட்சத்திரம் தங்கக்குடம் போன்றிருப்பதாலும் கும்பம் இராசியில் குரு (பொன்னவன்) நட்சத்திரம் இருப்பதாலும் இப்பெயர். இஃது உண்மைக்குப் புறம்பானது. (கும்பம்–குடம்) இந்த நட்சத்திரக் காரர்கள் சிலர் வறுமையிலும் இருந்திருக்கிறார்கள்.

## 10. ஆதிரைப் பெண்ணும் ஓணத்துப் பையனும் சொத்து

திருவாதிரை, திருவோணம் என்ற திருஅடைமொழிபெற்றதால் இப்படிக் கூறப்பட்டது. 27 நட்சத்திரங்களுமே நல்லவைகளே. கிரகங்கள், நட்சத்திரங்கள் யாவும் ஆசறு நல்லநல்ல, அவை நல்லநல்ல என்று திருஞான சம்பந்தர் கூறுகிறார்.

## 11. பரணி கார்த்திகை

பரணி, கார்த்திகையில் ஒன்றும் செய்யக்கூடாது. காரணம் கண்ணகி பரணி நட்சத்திரத்தில் பிறந்தவர். அவள் மதுரையை எரித்தது, எரியூட்டியது கார்த்திகை நட்சத்திரத்தன்று. எனவே, இப்படிக் கூறுவர்.

## பெயர் சூட்டல்

அஸ்வத், பரணி, கிருத்திகா, ரோகிணி, ஆதிரை, ருத்திரா, சுவாதி, அனுசா, ரேவதி என்றும், அமராவதி, கங்கா, காவேரி என்றும் குழந்தைகளுக்கு நட்சத்திரங்கள், நதிகள் பெயர்களை வைப்பதும் தவறில்லை.

அதேபோல், சந்திரா, மதி, வெண்ணிலா, ஆதித்யா, சூரியா, ரவி, பாஸ்கர், தினகர், திவாகர் என்று வான்வெளி ஒளியுமிழ் பெயர்களை வைப்பதும் தவறில்லை. கல்வி கற்று உயரிய நிலையில் இருப்பதற்கும் பெரும் செல்வராய் இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நாம் வழக்கில் பேசும்போது அதோ போகிறானே அவன் பெரும்பணக்காரன் என்போம். அதே நேரம் கற்றவரைப் பார்க்கும்போது அதோ போகிறாரே கற்றறிந்த புலவர் என்போம். இதுவே செல்வ நிலைக்கும் கல்வி நிலைக்கும் உள்ள வேறுபாடு.

செல்வம் என்றால் உழைக்காமல் இருந்தால் உன்னைவிட்டுச் செல்வோம் என்று எச்சரிக்கை செய்வது. கல்வி என்றால் கல் போன்று நம்மிடமே இருப்பது. யாரையாவது பார்த்து ஐந்நூறு ரூபாய் இருக்கிறதா? என்றால் கோபப்படமாட்டார். அதே நேரம், அறிவிருக்கிறதா? என்றால் கோபப்படுவார். இதுவும் கல்வி–செல்வத்துக்கு உள்ள வித்தியாசம். யாரையும் பார்த்து மூளை இருக்கிறதா? என்று கேட்கக் கூடாது. மூளை வேறு. அறிவு வேறு.

இதுகாறும் கிழமை, மாதம், நட்சத்திரங்கள் பெயரில் புழங்கி வந்தப் பழமொழிகளைப் பார்த்தோம். இனி சோதிடத்துக்குச் சம்பந்தப்பட்ட சில பழமொழிகளைக் காண்போம்.

### 5.4. சோதிடப் பழமொழிகள்

**1. ஆயிரம் பொய் சொல்லி ஒரு கல்யாணம்:**

தங்கத்துக்கு வராகன் (பன்றிமுகம்) என்றும், பொன், சுவர்ணம் என்றும் 60 பெயர்கள் உண்டு. தமிழாண்டுகளுக்கு 60 பெயர்கள் இருப்பது போல் தங்கத்துக்கு 60 பெயர்கள் உண்டு. அதில் தங்கத்துக்குப் பொய் என்றும் பெயர் உண்டு. நெய்யும் பொய்யும் பெய்வேள்வி என்று கூறும் பழம்இலக்கியம் மூலம் இதை அறியலாம். திருமண காலத்தில் புரோகிதர் இந்திரனையும் சந்திரனையும் அழைப்பார். மாமா சீர் இலட்சம் கட்டி வராகன், சிற்றப்பா இலட்சம்கட்டி வராகன் என்று ஓதிடுவார். இதையே ஆயிரம்பொய் சொல்லி ஒரு திருமணம் என்று வந்தது.

**2. காத்துக் கருப்பு**

ஜோதிடரிடம் பலபேர் கேட்பது செய்வினை சூனியம் உள்ளதா? காத்து கருப்பு உள்ளதா? என்பதே. பில்லி என்றால் பூனை என்றும், சூனியம் என்றால் (0) என்றும், ஒன்றுமில்லை என்றும், நம் முன்னேற்றத்தைப் பார்த்து பிறர் விடும்பெரும் மூச்சே காற்று என்றும், பொறாமையால் அவர் நம்மீது காட்டும் சினமே கருப்பு என்றும் உணரவேண்டும். இதை விளக்கமாய்ச் சொல்ல வேண்டும். இராகு– கேது இரண்டும் கடகம், மகரத்தில் தனியாய் இருந்தால் இந்தத் தோசம் அண்டாது. இது சன்னியாச யோகமாகும். வள்ளலார், மகான் இராகவேந்திரர் ஜாதகம் இப்படி அமைந்திருந்தது. இராகு கேது நீச்சமானால் மாமா, சிற்றப்பா பகை வரும். விரோதம் வராது.

**3. காத்திருந்தவன் பொண்டாட்டியை நேற்று வந்தவன் கொண்டு போனான்**

ஒருவர் தாலியை இன்னொருவர் கட்ட முடியாது. எத்தனை வருடங்கள் ஆனாலும், காத்து இருந்து, அவன் பொண்டாட்டியை நேற்று வந்து, அவன் கொண்டு போனான் என்பதே உண்மையான கருத்து.

இப்படி அனுபவத்தில் ஒரு ஜோதிடர் வருவோருக்குப் புராணக் கதைகள் கூறியும் பழமொழிகள் விளக்கம் கூறியும் தெளிய வைக்கலாம். நிறைய பழமொழிகள் இருப்பதால் விரிவஞ்சி விடப்படுகிறது.

* * * * *

# அலகு II

## பாடம் 6 – ஜாதீய மற்றும் பிற பழமொழிகள்

உலகமெங்கும் ஜாதி, இனம், மொழி, சமுதாய அமைப்புகளின் பெயரில் பலகெடுதல்களும் இழிவுகளும் செய்யப்பட்டுவருகின்றன. ஒரு ஜோதிடரும் மருத்துவரும் எல்லாவற்றையும் கடந்து அனைவருக்கும் பணியாற்றுதலும் மொழி, இனம், சாதீய எண்ணமின்றி கடமையாற்றுவதே தொழில் தர்மம். அதனால் வழங்கப்பட்டு வரும் பழமொழிகளில் உண்மைப் பொருளைத் தாமும் உணர்ந்து வருபவர்களுக்கும் போதித்து மகிழ்வதே ஜோதிடரின் கடமை. அதனால் யாரையும் தாக்கிப் பேசும் நோக்கத்தோடு அல்லாமல் உண்மைப் பொருளை விளக்கவே இப்பகுதி அமைக்கப்படுகிறது.

உலகில் கிருத்தவம், இந்து, முகம்மதியம், கிரேக்கம், சைனம் போன்ற மிகப் பெரிய சமுதாயங்கள் இருந்தும் இவை அனைத்தும் கண்டுபிடித்தவர் பெயரிலேயே, தொடங்கியவர் பெயரிலேயே அமைந்துள்ளதைக் காணலாம். புத்தர், புத்த மதத்தையும். கிறித்து, கிறித்துவ மதத்தையும். முகம்மது, நபி முகலாய மதத்தையும் தொடங்கினார். ஆனால், சனாதன இந்து மதம் சைவம், வைணவம் என்ற ஆறு பிரிவுகளாய் உள்ளன. இந்து மதத்திலிருந்து கிறித்தவராக மாறிய ஒருவர் கிறித்தவரே. முகம்மதிய மதத்துக்குப் போனவர் முகம்மதியரே. ஆனால், மற்ற மதத்திலிருந்து இந்துவாக மாறியவர் எந்த ஜாதியில் இணைக்கப்படுவார். இதற்குப் பதில் இல்லை. இந்த மத– மன மாற்றங்களை விடுத்து சில பழமொழிகளின் உண்மைப் பொருளை உணர்ந்தால் மன இறுக்கம் குறையும். இனி பழமொழிகளைக் காண்போம்.

**1. நாடறிந்த பார்ப்பானுக்கு பூணூல் எதற்கு?**

நாடு என்றால் ஊர் என்று பொருள். மைசூர் என்பது எருமை நாடு. ஒரு அரசன் குதிரையில் ஏறி ஒவ்வொரு ஊராய் அறிந்து பார்த்த பின் அவனுக்குப் பூணூல், அதாவது பூகோள அறிவு நூல் எதற்கு? அதாவது நேராக அனுபவம் உள்ளவருக்கு கருத்தியல் தேவையில்லை என்பதையே நாடறிந்த பார்ப்பானுக்கு பூநூல் எதற்கு என்று வந்தது. இதைக் குறிப்பிட்ட சமுதாயத்தினரை இழிவு படுத்த இயற்றப்பட்டது அன்று.

**2. ஆதாயம் இல்லாமல் செட்டி ஆற்றோடு போக மாட்டான்**

செட்டியார்கள் பணத்தை இலட்சுமியாய் போற்றி தர்மம் செய்து பெருக்குவர். அவர்கள் எதையும் நுணுகி ஆராய்ந்த பின்னரே அந்தத் தொழிலில் முதல் போடுவார்கள். ஆறு என்றால் வழி என்று பொருள். பூமியை அறுத்துச் செல்வதால் நதிக்கு ஆறு என்று பெயர். அதற்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை. செட்டியார் நட்டமில்லாத வழியில் தொழிலைச் செய்வார்கள் என்பதைக் குறிப்பதே இப்பழமொழி.

**3. வெள்ளாளன் உறவு வேலியோடு**

வெள்ளாளர்கள் எல்லைப் பாதுகாப்பு, வீட்டுப் பாதுகாப்பில் கைதேர்ந்தவர்கள். அவர்கள் காக்கும் இடத்தை விட்டு வேலியை விட்டு உள்ளேயோ வெளியேயோ செல்லமாட்டார்கள் என்பதைக் குறிப்பதே இப்பழமொழி.

**4. பொன்னுக்கு கால் மாத்து வெள்ளி**

சிவ பெருமான் பொன்னம்பலத்தில் ஒரு காலைத் தூக்கி வெள்ளியம்பலத்தில் மறு கால் தூக்கி மாற்றி ஆடுவதையே இப்பழமொழி கூறுகிறது.

**5. சோழியன் குடுமி சும்மா ஆடுமா?**

சோழியர் இனத்தவர் குடுமி பெரிதாய் இருக்கும். ஆனால், எதையும் சுமக்கப் பயன்படாது. எனவே, சோழியன் குடுமி சும்மாடு ஆகுமா? என்பதே உண்மையான பொருள். சும்மாடு என்பது பொதி சுமக்கும் துணி.

**6. விபூதி இட்டார் கெட்டார், இடாதார் வாழ்ந்தார்**

விபூதி இட்டு யார் கெட்டார்? இடாது யார் வாழ்ந்தார்? என்பதே பொருள்.

**7. ஊரு இரண்டுபட்டால் கூத்தாடிக்கு எளிது**

ஊரு (தொடை) இரண்டாய் விரிய ஆடினால்தான் பரத நடனம் சிறக்கும் என்பது கருத்து.

**8. கிணறு வெட்ட பூதம் கிளம்பியது**

கிணறு வெட்ட பஞ்சபூதங்களில் ஒன்றான தண்ணீர் வரும் என்பதே பொருள்.

**9. கப்பல் கவிழ்ந்தாலும்**

கப்பல் கவிழ்ந்தாலும் கன்னக் கோலில் கை வைக்கக் கூடாது என்பது எவ்வளவு துன்பம் வந்தாலும் திருடக் கூடாது என்பதே இதன் பொருள்.

**10. தெய்வம் மனுஷ்யரூபனே**

தெய்வங்களும் நம்மைப் போல் இரு கைகள், இரு கால்கள், இரு கண்கள், ஒரு தலையுடன் தான் இருக்கும். நாம் நினைப்பதைப் போல் பல கைகள், கால்களுடன் இருக்காது என்பதே இதன் பொருள்.

**11. தனக்கு மிஞ்சியது தர்மம்**

தானத்துக்கு மிஞ்சிய வலிமை மிக்கது தர்மம் என்பதே இக்கருத்து. தானம் தான் உய்யச் செய்வது. தர்மம் பிறர் உய்யத் தருவது.

**12. தையல் சொல் கேளேல்**

பிறர் நம் மனத்தைத் தைக்கும்படி பேச்சு வாங்கும் தொழில் செய்யக்கூடாது என்பதே இதன் பொருள்.

**13. ஆரியக் குத்து**

இதன் பொருள்: யார் எக்கூத்து ஆடினாலும் நாம் செய்யும் காரியத்தில் கண்ணாக இருக்க வேண்டும் என்பதே.

இப்படி நிறையக் கூறலாம். மனிதருக்குள் இனம், தொழில், மொழி வெறுப்பாலும் அழுக்காறாலும் எழுதப்பட்டவை இவை. எனவே, அனைவரும் இறைவனுடைய குழந்தைகள் என்று உணர்ந்து ஒரு ஜோதிடர் பணியாற்ற வேண்டும்.

* * * * *

### *அலகு III – பாவம், உச்சம், நீச்சம், வர்கோத்தமம், அதிபதி பலன்கள்*

## பாடம் 7 – பன்னிரு பாவம், உச்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம்

### பலன்களும் விவரங்களும்

பொதுவாக லக்னாதிபதிகள் அனைவரும் ஆட்சியுறுவர். அதே போல் வர்கோத்தம நிலையையும் பெறுவர். அதே போல் வாக்கு, சகோதரர், இலாபம் நஷ்டம் ஆகிய பூர்வபுண்ணியம், ரோகம், களத்திரம், ஆயுள், தந்தை, தொழில் பெறுவர். வர்கோத்தமம் பலனும் பெறுவர். ஆனால், நீச்சம், உச்சம், பரிவர்த்தனை மட்டும் மாறும்.

### 7.1. உச்ச கிரக பலன்கள்

1) லக்னத்தில் ஒரு கிரகம் உச்சமானால் பெரியபதவி பெறுவர்.

2) 2 இல் (குடும்பஸ்தானத்தில்) ஒரு கிரகம் உச்சமானால் பிற சாதியினருடன் திருமணம் உண்டு.

3) 3 இல் ஒரு கிரகம் உச்சமானால் (லக்னத்திலிருந்து) சகோதரர் பெரும் பதவியில் இருப்பர்.

4) லக்னத்தில் இருந்து 4 இல் ஒரு கிரகம் உச்சமானால் வீடு, வாகன யோகம் உண்டாகும்.

5) லக்னத்துக்கு 5 இல் ஒரு கிரகம் உச்சமானால் புத்திர பேறு உண்டு. ஆனால், சிம்மம், தனுசு, கும்பம், மிதுனத்தில் எந்தக் கிரகமும் உச்சம், நீச்சம் ஆகாது.

6) லக்னத்துக்கு 6 இல் ஒரு கிரகம் உச்சமானால் கடன் பெருகும்.

7) 7 இல் கிரகம் உச்சமானால் மணவாழ்வு சரியாக இருக்காது.

8) 8 இல் கிரகம் உச்சமானால் விஷ பயமுண்டாகும்.

9) லக்னத்துக்கு 9 இல் கிரகம் உச்சமானால் இவரது தந்தை இரண்டாவது மணம் செய்வார்.

10) 10 இல் ஒரு கிரகம் உச்சமானால் தொழிலேதுமின்றி சுகமாய் இருப்பர்.

11) 11 இல் கிரகம் உச்சமானால் இலாபம் உண்டாகும்.

12) 12 இல் உச்சமானால் வேற்று மாநிலம் வாசமும் உண்டாகும்.

### 7.2. நீச்ச பலன்கள்

1) லக்னத்தில் ஒரு கிரகம் நீச்சமானால் பைத்தியம் பிடிக்கும். குழப்பம் உண்டு.

2) லக்னத்துக்கு 2 இல் கிரகம் நீச்சமானால் டான்சில் உபாதை உண்டு. தாழ்ந்த மக்கள் நடுவில் வசிப்பர்.

3) 3 இல் கிரகம் நீச்சமானால் கணவர் / மனைவிக்குத் துரோகம் செய்வர். திருமணம் நிச்சயதார்த்தத்துடன் நின்றுவிடும். சகோதரப் பிரிவு உண்டு.

4) 4 இல் ஒரு கிரகம் நீச்சமானால் வாகன விபத்து 4 ஆம் தெசையில்) உண்டு. தாயார் பிரிவு உண்டு. (அம்சத்தில்) அதே கிரகம் உச்சம், வர்கோத்தமமானால் தாயாருக்கு நலமுண்டு.

5) 5 இல் ஒரு கிரகம் நீச்சமானால் புத்திர சோகமுண்டு.

6) லக்னத்துக்கு 6 இல் ஒரு கிரகம் நீச்சமானால் கடனுபாதை பெருகும். பேசினாலே சண்டை வரும்.

7) 7இல் ஒரு கிரகம் நீச்சமானல் காமுகர்களாய் இருப்பர். நீச்ச இன மக்களிடம் கலந்துறவாடுவார்.

8) 8 இல் ஒரு கிரகம் நீச்சமானால் சூரியன் இருந்தால் நெருப்பிலும், சந்திரன் இருந்தால் நீரிலும், செவ்வாயானால் ஆயுதத்திலும், புதனானால் பசியாலும், குருவானால் மலைமீது ஏறி விழுந்தும், சுக்கிரனானால் மனப்பிரமையாலும், சனியானால் கள்வராலும், இராகுவானால் மருந்தாலும், கேதுவானால் மாந்திரீகத்தாலும் உயிர் பிரியும்.

9) 9 இல் கிரகம் நீச்சமானல் தந்தைவழி சொத்து கிட்டாது. தந்தை தேசாந்திரியாக அலைவார்.

10) 10 இல் கிரகம் நீச்சமானால் தொழிற்சங்கத் தலைவர்.

11) லக்னத்துக்கு 11 இல் நீச்சமானால் பொருள் வரவும் உண்டு.

12) 12 இல் கிரக நீச்சம் வீண் அலைச்சல், கால் வீக்கம் தரும்.

13) லக்கினத்திற்கு 2 ஆம் அதிபதி, 6 இல் நீச்சமானால் பிறவி ஊமை. 2 இலேயே நீச்சமானால் திக்குவாய் உண்டாகும். 3 இல் நீச்சமானால் அதிர்ச்சியில் ஊமையாவார்.

இரு நீச்ச கிரகங்கள் பரஸ்பர பார்வை வீசினால் உச்ச பலனு ம், இரு உச்ச கிரகங்கள் பரஸ்பர பார்வை வீசினால் நீச்ச பலனும் உண்டு.

### 7.3. ஆட்சியுறும் பலன்கள், வர்கோத்தம பலன்கள்

லக்னாதிபதி ஆட்சியானால் நல்ல வாழ்வும், வர்கோத்தமமானால் திட்டமிட்ட காரியம் வெற்றியும் பெறும் பெரும் வாய்ப்பும் உண்டு.

இரண்டாம் அதிபதி குடும்பாதிபதி ஆட்சி வர்கோத்தமமானால் திட்டமிட்ட குடும்பக் குதூகலமுண்டு.

3 ஆம் அதிபதி, சகோதராதிபதி ஆட்சி உச்சம் வர்கோத்தமமானால் சகோதரர் உதவி உண்டு.

4 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானல் தாயார் அன்பு கிடைக்காது.

5 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானால் பூர்வீக சொத்து கிட்டாது. அபார்ஷன் ஆகும்.

6 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானால் கடன் உண்டாகாது.

7 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானல் மிக அழகான மனைவியாவாள்.

8 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானால் நீண்ட ஆயுள் பலம் தரும்.

9 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானால் தந்தைக்கு நீண்ட ஆயுள்.

10, 11 அதிபதிகள் ஆட்சி, வர்கோத்தமமானால் பொருளாதார மேன்மை.

12 ஆம் அதிபதி ஆட்சி, வர்கோத்தமமானால் செலவு உண்டாகாது.

ஆட்சி என்பது அந்தக் கிரகம் சொந்த வீட்டில் இருப்பதையும், வர்கோத்தமம் என்பது அம்சத்திலும் அதே இடத்தில் இருப்பதையும் குறிக்கும். இனி பரிவர்த்தனை பலன்களைப் பார்ப்போம்.

### 7.4. பரிவர்த்தனை பலன்கள்

1) லக்னாதிபதியும் 2 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், குடும்பத்தில் குழப்பம் உண்டாகும்.

2) 2 ஆம் அதிபதியும் 3 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், திக்கு வாய் உண்டாகும்.

3) 3 ஆம் அதிபதியும் (லக்னத்துக்கு) 4 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், தாயார் ஜாதகரது சகோதரருடன் தங்குவார்.

4) 4 ஆம் அதிபதியும் 5 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், தாயார் பெயரில் வீடு கட்டுவார்.

5) 5-6 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானால், வட்டிகட்டியே மாள்வார்.

6) 6-7 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானால், மனைவி / கணவர் நோய்வாய்ப்படுவார்.

7) லக்னத்துக்கு 7-8 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானால், மனைவி / கணவர் வங்கித் தொழில் செய்வார்.

8)  8-9 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானால், தந்தை உணவகம் வைப்பார்.

9)  9-10 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையானால், கோயில் கட்டுவார்.

10) 10-11 அதிபதிகள் பரிவர்த்தனையானால்,  விமானப் போக்குவரத்து ஒப்பந்தக்காரர்.

11) 11-12 அதிபதிகள் பரிவர்த்தனைகள்,  வங்கி இலாபம் உண்டு.

12)  லக்கினாதிபதியும் 3 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், சகோதர பாசம் உண்டு.

13)  லக்கினாதிபதியும் 4 ஆம் அதிபதியும் பரிவர்த்தனை அல்லது ஆட்சியானால், தாயார் நீண்ட ஆயுள் உள்ளவராவார்.

14)  லக்கினாதிபதியும் 5 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையனால், தாமத புத்திர பாக்கியம் உண்டு.

15)  லக்கினாதிபதியும் 6 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், புரோ நோட்டில் சாட்சி கையொப்பமிட்டு இடருறுவார்.

16)  லக்கினாதிபதியும் 7ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், மனைவி / கணவர் வயது / தகுதி / படிப்புக்கு ஒவ்வாதவராவார்.

17)  லக்கினாதிபதியும் 8 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், தந்தை தலைவராவார். நீண்ட ஆயுள் ஜாதகருக்கும் தந்தைக்கும் உண்டு.

18)  லக்கினாதிபதியும் 9 ஆம் அதிபதியும் பரிவர்த்தனையானால், பேராற்றல் மிக்க வன்செயல்கள் புரிபவர்.

19)  லக்கினாதிபதியும் தொழிலதிபர் (10 ஆம் அதிபதி) பரிவர்த்தனையானால், வங்கி மேலாளர் ஆவார்.

20)  லக்னாதிபதியும் 11 மற்றும் 12 ஆம் அதிபதிகள் பரிவர்த்தனையனால்,  விற்பனைப் பிரதிநிதி ஆவார்.

(லக்ன வாரியான பலன்களில் விரிவாய் பார்ப்போம்)

சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் என்று கிரகங்கள் ஒரே வீட்டில் இருந்தால் படுகொலை செய்யப்படுவார். சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் 6ல் இருந்தாலோ கடகம் அல்லது கன்னியில் இருந்தாலோ தோல் நோய் உண்டாகும்.

* * * * *

*அலகு III*

# பாடம் 8 – அதிபதிகள், அவை இருக்கும் வீடுகள், பலன்கள்

லக்னம் துவங்கி 12 ஆம் அதிபதிகள் வரை, லக்னம் முதல் 12 ஆம் வீடுகளில் தங்கும் பலன்களை இனி காண்போம். எந்த லக்னமாய் இருந்தாலும் அவை தங்கும் இடத்தைப் பொறுத்து பலன் அமையும். இதில் லக்ன மாறுபாடுகள் வேறுபாடுகள் கிடையாது. லக்னம் இரண்டாம் அதிபதி, 3 ஆம் அதிபதி என்பவை பழக்கத்திலேயே மனப்பாடமாகுமென்பதால் கஷ்டப்பட்டு மனப்பாடம் செய்ய வேண்டாம். ஆட்சி, உச்ச, நீச்சத்துக்குத் தகுந்தபடி பலன் கூற வேண்டும்.

12 வீடுகளின் அதிபதிகள் எந்த வீட்டிலும் வர்கோத்தமம் ஆனாலும் நல்ல பலன்களே கிடைக்கும்.

## (1) லக்னாதிபதி

1) இவர் லக்னத்தில் ஆட்சியுற்றால், ஜாதகர் பெரும் பதவி பெறுவார். நீச்சமுற்றால் குழப்பவாதியாய் இருப்பார். உச்சமுற்றால் தன்னை அதிமேதாவியாய் நினைத்துக் கொள்வார். வர்கோத்தமமானால் மன உறுதியுடன் இருப்பார். இரண்டாம் அதிபதியுடன் பரிவர்த்தனையானால் இவர்சொல்வது பொய்த்துவிடும். 3 ஆம் அதிபதியுடன் பரிவர்த்தனையானால் சகோதர பலம் கைகூடும்.

2) லக்னாதிபதி 2 இல் இருந்தால், எளிய குடும்பம் அமையும். 2 இல் நீச்சமானால் பள்ளமான இடத்தில் வீடு கட்டுவார். உச்சமானால் திருமணத்தடை நிச்சயதார்த்தத்துடன் நின்று விடும். வர்கோத்தமமானால் சுகவாழ்வு உண்டு.

3) லக்னாதிபதி 3 இல் இருந்தால், சகோதரன் சம்பாத்தியத்தில் இருப்பார். வாழ்வு நடத்துவார். நீச்சமானால் தீய நடத்தை உண்டாகும். உச்சமானால் கூட்டுக்குடும்பம் அமையும். லக்னத்தில் இருந்தால், என்ன பலன் கிடைக்குமோ அந்தப் பலன் உண்டு.

4) லக்னாதிபதி 4 இல் இருந்தால், தாயார் அன்பு கிட்டும். உச்சமானால் கொழுப்பு நோய் (கொலஸ்ட்ரால்) வரும். நீச்சமானால் வாகன விபத்தும், கண் ரோகமும் உண்டாகும். 4ஆம் அதிபதி லக்னாதிபதி பரிவர்த்தனையானால் தாயார் மாநில அரசில் பணியாற்றுவார். லக்னத்தில் 4ஆம் அதிபதி தாயன்பு உண்டு.

5) லக்னாதிபதி 5 இல் இருந்தால், தாமத புத்திரம். உச்சமானால் பெரிய வீடு உண்டு. நீச்சமானால் வீண் செலவு உண்டு. லக்னத்தில் 5 ஆம் அதிபதி இருந்தால் பெண் குழந்தை பாக்கியமுண்டு. லக்னத்தில் 3ஆம் அதிபதி இருந்தால் மாமா, சிற்றப்பா அல்லது உடன் பிறந்தவருக்கு துர்மரணம் உண்டு.

6) லக்னாதிபதி 6 இல் இருந்தால், தாமத வெற்றி. உச்சமானால் கட்டுமானப் பணி செய்வார். நீச்சமானால் வேலையாட்கள் இடருண்டு. 6-1 க்குரியவர் பரிவர்த்தனையானால் பண புரோநோட்டில் இழப்பு உண்டு.

7) லக்னாதிபதி 7 இல் இருந்தால், அதிகார தோரணை உள்ள கணவர் / மனைவி அமைவர். உச்சமானால் இருதார யோகமும், நீச்சமானால் பயமுறுத்தித் திருமணம் செய்வித்தலும் அமையும். பரிவர்த்தனையானால் பெண் கொடுத்து பெண் வாங்குவர். 7 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் வயது-தகுதி-அறிவுக்கு ஒவ்வாத துணை உண்டாகும்.

8) லக்னாதிபதி 8 இல் இருந்தால் 99 வயது ஆயுள் பலம் உண்டு. உச்சமானால் படுத்த படுக்கையில் இருப்பர். நீச்சமானால் சுறுசுறுப்புடன் வேலை செய்வர் பரிவர்த்தனையானால் வயிற்றுவலி - தலைவலி உண்டு. 8 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் துர்மரணமுண்டு.

9) லக்னாதிபதி 9 இல் இருந்தால் தந்தையை ஒட்டிய வாழ்வு உண்டு. உச்சமானால் தாயாருக்குப் பிற ஆடவரால் இடருண்டு. நீச்சமானால் வேலையாட்களால் தந்தைக்கு இடருண்டு. பரிவர்த்தனையானால் சொத்து கிட்டாது. 9 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் தந்தை பெருந்தலைவராவார்.

10) லக்னாதிபதி 10 இல் இருந்தால் மண்டலாதிபதி . உச்சமானால் போக்குவரத்துத் துறை அதிகாரி. நீச்சமானால் சாதாரணத் தொழிலாளி. பரிவர்த்தனையானால் சாலைப் பணி ஒப்பந்தக்காரர். 10 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் நூறுபேர்களுக்கு வேலை தருவார்.

11) லக்னாதிபதி 11 இல் இருந்தால் செல்வந்தர். நீச்சமானால் ஏழையாவார். உச்சமானால் வள்ளல். பரிவர்த்தனையானால் அறங்காவலர் (டிரஸ்ட்டி). 11 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் வங்கி ஏஜெண்ட்.

12) லக்னாதிபதி 12 இல் இருந்தால் தீர்த்த யாத்திரை போவார். தியானம் செய்வார். உச்சமானால் பள்ளத்தில் விழுந்து இறப்பார். பரிவர்த்தனையானால் சன்னியாசியாவார்.

## (2) குடும்பாதிபதி

லக்னத்துக்கு 2 ஆம் அதிபதி (எந்த லக்னமானாலும் சரி) ஜாதகரின் குடும்பம், தனம் மற்றும் வாக்குப் பலிதத்தை நிர்ணயிப்பார். எந்த லக்னத்திலும் இராகு அல்லது கேது இருந்தாலும் இளம்பிள்ளை வாதம் வரும்.

1) குடும்பாதிபதி 1 இல் இருந்தால் இவர் சொல்வன பொய்த்துவிடும். எனவே, புதிய செய்திகளைக் கேட்காமல் தொழில் செய்ய வேண்டாம்.

2) 2 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் நல்ல கணவர் / மனைவி அமைவர்.

3) 2 ஆம் அதிபதி 3 இல் இருந்தால் சகோதரருடன் வாக்குவாதம் உண்டு.

4) 2 ஆம் அதிபதி 4 இல் இருந்தால் தாய் சொன்னபடி குடும்பம் நடத்துவார். உச்சமானால் மாமா வழி இலாபமும், நீச்சமானால் மாமாவழி இடரும், பரிவர்த்தனையானால் வங்கிக் கடனும் (பேங்க் லோனும்) கிடைக்கும்.

5) 2 ஆம் அதிபதி 5 இல் இருந்தால் குழந்தைகள் சம்பாத்தியத்தில் குடும்பம் நடத்துவர். உச்சமானால் இரட்டைக் குழந்தை யோகமும், நீச்சமானால் பொய் கூறி வழக்குகளில் சிக்குதலும் நேரிடும். பரிவர்த்தனையானால் பெரிய பூர்வீக வீடும் கிடைக்கும். மின்சாரத்துறை தொடர்பு உண்டு.

6) 2 ஆம் அதிபதி 6 இல் இருப்பது கடன் உபாதை தோல்விகள் உண்டாகும். உச்சம், நீச்சம், பரிவர்த்தனைகள் செயல்படாது.

7) 2 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் திருமணத் தடைகள் உண்டு. உச்சம், நீச்சம், பரிவர்த்தனையாவும் தொல்லையே தரும்.

8) 2 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் பிறர் செய்யும் தவறுகளை எடுத்துரைப்பார். கல்லூரி பேராசிரியர், விரிவுரையாளர் ஆவார். ஆசிரியர், வக்கீல் ஆவார். உச்சம் நீச்சம் பரிவர்த்தனை சுமாரான பலனையேத் தரும்.

9) 2ஆம் அதிபதி 9 இல் இருந்தால் தந்தை சொல் தட்டாதவர். உச்சமானால் தந்தைக்குப் பிற பெண்டிருடன்தொடர்பு உண்டாகும். நீச்சமானால் அத்தை நாட்டாமை செய்வார், பரிவர்த்தனையானால்

தந்தையுடன் சேர்ந்து தொழில் செய்வார்.

10) 2 ஆம் அதிபதி 10 இல் இருந்தால் செய்முறைப் பயிற்சியாளர், வழக்கறிஞர்,விற்பனை பிரதிநிதி. புரோகிதர். உச்சம், நீச்சம், பரிவர்த்தனை அமோக இலாபம் தரும்.

11) 2 ஆம் அதிபதி 11 இல் இருந்தால் பிறருக்கு இலாபம் செய்வார். உச்சமானால் தர்மி. நீச்சமானால் கருமி. பரிவர்த்தனையால் கடன் வாங்க மாட்டார்.

12) 2 ஆம் அதிபதி 12 இல் இருந்தால் வீண் செலவீனம், சம்பந்தமில்லாமல் பேசுதல், பிறர் வெறுப்புக்கு ஆளாகுதல் உண்டு. உச்சமானால் வெளிமாநிலத் தொடர்பும், நீச்சமானால் வெளிநாட்டுத் தொடர்பும், பரிவர்த்தனையானால் பணவரவு இன்மையும் உண்டாகும்.

### (3) சகோதராதிபதி

1.) 3 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் துர்மரணம் சகோதரருக்கு உண்டு. உச்சமானால் காவல்துறை அதிகாரி. நீச்சமானால் தொழிலாளர் நலத்தலைவர். பரிவர்த்தனையானால் கிராம நிர்வாக அலுவலர்.

2) 3 ஆம் அதிபதி 2, 3, 4 இல் இருந்தால் உச்சமானால் நீச்சமானால் பரிவர்த்தனையானால் குடும்பம் சகோதரம் தாயாருக்கு மேன்மை உண்டு.

3) 3 ஆம் அதிபதி 5, 6 இல் இருப்பது சுமாரான பலனையே உண்டாக்கும். சகோதரர் குழந்தைகளைக் காப்பாற்றுவதால் கடன் உண்டாகும். உச்சம் நீச்சம் பரிவர்த்தனையானாலும் சுமாரான பலனே உண்டு.

4) 3 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் தம்பி மனைவி வேலைக்குப் போவார். சொந்தத் தமக்கையிடம் தவறாய் நடந்து கொள்வார்.

5) 3 ஆம் அதிபதி 8 இல் இருப்பது சகோதர சகோதரிகளுக்கு அற்ப ஆயுள். சுபகிரகம் பார்த்தால் நலம் உண்டு.

6) 3 ஆம் அதிபதி 9, 10, 11 இல் இருப்பது சகல நலனும் செல்வாக்கும் குதூகல மணவாழ்வும் உண்டு. ஆனால், சகோதரர் சொல் வில்லிருந்துப் புறப்பட்ட அம்பாய் மனத்தைத் தைக்கும். உச்சம் நீச்சமானாலும் நல்ல பலனே உண்டு. பரிவர்த்தனையானால் மாமா, அத்தைப் பெண்ணுடன் திருமணம் கூடும்.

7) 3 ஆம் அதிபதி 12 இல் இருந்தால் சகோதர / சகோதரியால் அவமானம் நிகழும். விஷ பயமுண்டாகும்.

## (4) தாயார்

லக்னத்துக்கு 4 ஆம் அதிபதி தாயார். தாயாரின் ஆயுள், உடல் நலனைக் குறிக்கும்.

1) 4 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் தாயார் மற்றும் அவருடைய தாயாரும் நிம்மதி. குழந்தைகள் சௌக்கியமாய் இருக்கும். ஜாதகரும் சௌக்கியம்.

2) 4 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் தாயார் ஆசிரியைக்கு நிகரானவர். ஆனால் குடும்பத் தலைவி.

3) 4 ஆம் அதிபதி 3 இல் இருந்தால் தாயார் அடுத்த சகோதரருடன் தங்குவார்.

4) 4 ஆம் அதிபதி 5, 6 இல் இருந்தால் சொந்த வீட்டில் தனித்து இருப்பார்.

5) 4 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் தாயார், பெண்-மாப்பிள்ளை வீட்டில் தங்குவார்.

6) 4 ஆம் அதிபதி 8 இல் இருப்பது நல்லதல்ல. உடலுபாதை உண்டு.

7) 4 ஆம் அதிபதி 9 இல் இருந்தாலோ 9 ஆம் அதிபதியுடன் இணைந்தாலோ சூரியனுடன் இருந்தாலோ ஜாதகரின் தாய் விதவை ஆவார்.

8) 4 ஆம் அதிபதி 10, 11 இல் இருப்பது தீர்க்கச் சுமங்கல்ய பலம், பணவரவு, செல்வாக்குடன் இருப்பார்.

9) 4 ஆம் அதிபதி 12 இல் இருந்தால் தாயார் வீட்டை விட்டு வெளியேறுவார்.

## (5) பூர்வ புண்ணியம்

சொந்த வீடு, கல்வி, புத்திரர்களையப் பற்றிக் குறிக்கும் இடம் லக்னத்துக்கு 5 ஆம் இடம்.

1) 5 ஆம் அதிபதி 1, 2, 3, 4 ஆகிய இடங்களில் இருந்தால் கூட்டுக் குடும்ப வாழ்வு உண்டு.

2) 5 ஆம் அதிபதி 5 இல் இருந்தால் சர்வாதிகாரியாய் இருப்பார்.

3) 5 ஆம் அதிபதி 6-8-12 இல் இருந்தால் கௌரவப் பழுது உண்டாகும்.

4) 5 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் மனைவி தர்ம சிந்தனை உள்ளவர்.

5)  5 ஆம் அதிபதி  8 இல் இருந்தால் சுகஜீவனம் உண்டு.

6)  5 ஆம் அதிபதி   9 இல் இருந்தால் தந்தைக்கு நலம் இல்லை.

7)  5 ஆம் அதிபதி 10, 11 இல் இருந்தால் வெற்றிகரமான வாழ்வு உண்டு.

**(6)   ரோக, ருணாதிபதி**

லக்னத்துக்கு 6 ஆம் அதிபதி  (மேஷம் லக்னத்துக்கு புதன், ரிஷபம் லக்னத்துக்குச் சுக்கிரன், மிதுனம் லக்னத்துக்குச் செவ்வாய், கடகம் லக்னத்துக்குக் குரு, சிம்மம் லக்னத்துக்குச் சனி, கன்னி லக்னத்துக்குச் சனி, துலாம் லக்னத்துக்குக் குரு, விருச்சிகம் லக்னத்துக்குச் செவ்வாய், தனுசு லக்னத்துக்குச் சுக்கிரன், மகரம் லக்னத்தக்குப் புதன், கும்பம் லக்னத்துக்குச் சந்திரன், மீனம் லக்னத்துக்குச் சூரியன் 6 ஆம் அதிபதிகள் ஆவர்.

1)  6 ஆம் அதிபதி  லக்னத்தில் இருந்தால் மனக்குழப்பம்.

2) 6 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் குடும்பக் கடன், கேதுவும் இருந்தால் ஊமையாவார்.

3) 6 ஆம் அதிபதி 3 இல் இருந்தால் காது செவிடாகும்.

4) 6 ஆம் அதிபதி 4 இல் இருந்தால் தாயார் விரோதம்.

5)  6 ஆம் அதிபதி 5 இல் இருந்தால் புத்திரமின்மை

6) 6 ஆம் அதிபதி 6 இல் இருந்தால் தாமத வெற்றி

7)  6 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் மனைவி / கணவர் உடல் நலமற்றவர்.

8)  6 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் வேலை இல்லை.

9)  6 ஆம் அதிபதி 9 இல் இருந்தால் தந்தைக்குக் கடன்.

10)  6 ஆம் அதிபதி  10-11 இல் இருந்தால் துப்பறியும் தொழில், பேராசிரியர்.

11) 6 ஆம் அதிபதி 6-12 இல் இருப்பது சிக்கன நடவடிக்கை எடுப்பார்.

## (7) மணவாழ்வு

1) 7 ஆம் அதிபதி லக்னத்தில் இருந்தால் வயது, தகுதி, அறிவுக்கு ஒவ்வாத துணை அமையும்.

2) 7 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் கால தாமத மணம்.

3) 7 ஆம் அதிபதி 3 இல் இருந்தால் மனம் ஏங்கித் தவித்தப் பின் நிச்சயமாகி திருமணம் நின்ற பெண்ணை மணப்பர்.

4) 7 ஆம் அதிபதி 4, 9 இல் இருந்தால் தந்தை முறையே தாய் வழியில் பெண் மாப்பிள்ளை அமையும்.

5) 7 ஆம் அதிபதி 5 இல் இருந்தால் உறவினர் அல்லாத அந்நியத்தில் ( ஒரே மதம், இனம்) துணை அமையும்.

6) 7 ஆம் அதிபதி 6 இல் இருந்தால் கணவர் / மனைவி பிறருடன் தகாத உறவு வைத்திருப்பர்.

7) 7 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் பண வரவு உள்ள மனைவி / கணவர் அமையும்.

8) 7 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் அடங்காத மனைவி / கணவர் அமையும்.

9) 7 ஆம் அதிபதி 10, 11 இல் இருந்தால் பண வரவு உள்ள தொழில் செய்யும் கணவர் / மனைவி அமையும்.

10) 7 ஆம் அதிபதி 12 இல் இருந்தால் உடல் நலமற்ற கணவர் / மனைவி அமைவார்.

## (8) ஆயுள்:

1) 8 ஆம் அதிபதி 1 இல் இருந்தால் நீண்ட ஆயுள். நீச்சமானால் அற்ப ஆயுள்.

2) 8 ஆம் அதிபதி 2, 7, 8, 12 இல் இருந்தால் நோய் உண்டு.

3) 8 அம் அதிபதி 3 இல் இருந்தால் சகோதரரால் இடர்.

4) 8 ஆம் அதிபதி 4 இல் இருந்தால் நெஞ்சு வலி வரும்.

5) 8 ஆம் அதிபதி 5, 9, 11 இல் இருந்தால் மிக உத்தமம்.

6) 8 ஆம் அதிபதி 6, 12 இல் இருப்பது கால்வலி, தலை மறைவு வாழ்வு தரும்.

7) 8 ஆம் அதிபதி 10 இல் இருந்தால் உணவுப் பொருள் ஒவ்வாமையால் மரணம்.

## (9,10,11) பாக்கியாதிபதி, கர்மாதிபதி, இலாபாதிபதி:

லக்னத்துக்கு 9 ஆம் அதிபதி பித்ரு பாக்கியாதிபதி என்றும், 10 ஆம் அதிபதி கர்மாதிபதி (தொழில்) என்றும், 11 ஆம் அதிபதி இலாபாதிபதி என்றும் கூறப்படும். இம்மூன்றும் சுபாதிபதிகள் ஆவர். 6, 8, 12 ஆம் அதிபதிகள் அசுபாதிபதிகள் ஆவர். அதாவது.

1, 5, 9 ஆம் அதிபதிகள் திரிகோணாதிபதிகள்.

2, 3, 4, 7 ஆம் அதிபதிகள் தர்மாதிபதிகள்

6, 8, 12 ஆம் அதிபதிகள் அசுபாதிபதிகள்

9, 10, 11 ஆம் அதிபதிகள் சுபாதிபதிகள் ஆவர்.

1. 4. 10 ஆம் அதிபதிகள் கேந்திராதிபதிகள்

இதில் 9, 10, 11 க்கு உரியவர்கள் 6, 8, 12 ஆம் வீடுகளில் மறைந்தால் துரதிர்ஷ்டபலன்களே உண்டாகும். மற்ற இடங்களில் இருந்தால் நல்ல பலன்களே அமையும்.

சூரியன் இலக்கினத்துக்க 4. 9 ம் அதிபதிகளுடன் சேர்ந்தால் தந்தையின் மரண காலத்தில் ஜாதகரின் தந்தை முகமுழி கிடைக்காது.அதேபோல் சந்திரன் இலக்கினத்துக்கு 4, 9 ஆம் அதிபதிகளுடன் சேர்ந்தால் தாயாரின் மரண காலத்தில் ஜாதகருக்கு தாயாரின் முகமுழி கிடைக்காது.

**(12) விரயம், அயன சயன ஸ்தானம் அதிபதி**

1) 12 ஆம் அதிபதி லக்னம் ஏறினால் வாகன ஓட்டுனராவார்.

2) 12 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் பொய்ச் சாட்சி சொல்வார்.

3) 12 ஆம் அதிபதி 3 இல் இருந்தால் சகோதரனைப் பிரிவார்.

4) 12 ஆம் அதிபதி 4 இல் இருந்தால் தாயாருக்கு நோய் உண்டு.

5) 12 ஆம் அதிபதி 5 இல் இருந்தால் ஊதாரியாவார்.

6) 12 ஆம் அதிபதி 6, 8, 12 இல் இருந்தால் கஞ்சர்களாவார்.

7) 12 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் காமுகராவார்.

8) 12 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் பெருந்தீனிக்காரர்.

9) 12 ஆம் அதிபதி 9, 10, 11 இல் இருப்பது மிக உன்னத பலன் தரும்.

10) 12 ஆம் அதிபதி 12 இல் இருந்தால் நல்ல உறக்கத்தைத் தருவார்.

இதுகாறும் 12 இராசிகளில் கிரகங்கள் அமைந்த பலன்களைப் பார்த்தோம். ஒவ்வொரு லக்னத்துக்கும் சிறு மாறுதலுடன் கூடிய பலன்கள் சொல்ல வேண்டும். ஜோதிடர்கள் இதனை மனப்பாடம் செய்ய வேண்டியது இல்லை. பழக்கத்தில் கிரகங்களின் உச்சம், நீச்சம், வர்கோத்தமம் பார்வை (சுபர், அசுபர்) கிரகச் சேர்க்கை நிலையறிந்து பலன் கூற வேண்டும். மேலும் ஒரு விஷயம். லக்னாதிபதி முதல் 12 வீடான பலன்கள் பின்னர் காணலாம்.

ஒரு ஜாதகத்தில் இராசி, நவாம்சம் இருந்தாலே பலன்கள் போதும். மற்ற 11 அம்ச (திரேகானகம் – அட்டவர்கம்) தேவையில்லை. கிரக தெசாபுத்தி பார்க்கலாம். ஆனால், அந்தரம் பலன்கள் மற்ற பரல்கள்

பலன்கள் தேவை இருந்தால் பார்க்கலாம்.

ஒரு கிரகத்துடன் இராகு, கேது இணைந்திருந்தால் அதனை ஒட்டியே பலன் கூற வேண்டும். அதாவது புதனுடன் இராகு அல்லது கேது சேர்ந்து, 1 இல் இருந்தால் ஜாதகருக்கும், 2 இல் இருந்தால் அவர்தம் குடும்பத்துக்கும், 3 இல் இருந்தால் சகோதரருக்கும் இப்படி வரிசைக்கிரம பலன்கள் சற்று கூட்டியோ குறைத்தோ கிரகநிலையைப் பொறுத்து சொல்ல வேண்டும்.

லக்னமும் இராசியும் 6, 8, 12 வீடுகளுக்குள் ஒன்றாய் இருந்தால், உதாரணத்துக்கு, மேஷம் லக்னம் கன்னி இராசி; மேஷம் லக்னம், விருச்சிகம் இராசி (விதிவிலக்கு); மேஷம் லக்னம், மீனம் இராசி என்று இருந்தால் ஜாதகருக்குக் கேடு விளைவித்துக் கொள்வார். தனக்குத்தானே சுயவிரோதியாவார்.

லக்னம் இராசி 11, 10 இல் இருப்பவர் வெற்றிகரமான வாழ்வு வாழ்வர்.

* * * * *

## அலகு III

# பாடம் 9 – இராசி அம்சம் லக்னம் பலன்

1. ஒருவர் ஜாதகத்தில் லக்னத்திலேயே சந்திரன் இருந்தால் அல்லது இராசி அம்சத்தில் வர்கோத்தமமானால் நூறாண்டு வாழ்வர்.

எடுத்துக்காட்டு 1: மேஷம் லக்னம், மேஷம் இராசி; ரிஷபம் லக்னம், ரிஷபம் இராசி; ..... மீனம் லக்னம், மீனம் இராசி.

எ.கா. 2. ரிஷபம் லக்னம் அசுபதி 1 ஆம் பாதம் சந்திரன் மேஷம் இராசி, மேஷம் அம்சத்தில் இருந்தால் 100 ஆண்டுகள் வாழ்வார்.

2. லக்னத்துக்கு 2 ஆம் வீட்டில் சந்திரன் இருந்தால் குளுமையான சூழலில் குடும்பம் அமையும்.

(எ–டு) மேஷம் லக்னம், ரிஷபம் இராசி; ரிஷபம் லக்னம், மிதுனம் இராசி; .... கும்பம் லக்னம், மீனம் இராசி.

3. லக்னமும் இராசியும் 4 வீடு வித்தியாசத்தில் இருந்தால் தாயார் அன்பு கிட்டாது. லக்னத்திற்கு 5 இல் சந்திரன் இருந்தால் (5 ஆவது இராசி) பெண்மகவு உண்டாகும்.

4. லக்னமும் இராசியும் 6, 8, 12 வீடுகள் தள்ளி இருந்தால் சுயபட்சாதாபிகள், தாழ்வு மனப்பான்மை உள்ளவர்கள். பிறரால் மதிக்கப்படாதவர்கள். (எ–டு) மேஷம் – கன்னி, சிம்மம் – மீனம். ரிஷபம் – தனுசு, மிதுனம் – மகரம். கும்பம்–மகரம் இராசிகள், மேஷம் – விருச்சிகம் இராசிகள், துலாம் – ரிஷபம் இராசிகள் விதிவிலக்கு.

5. லக்னத்திலிருந்து 7, 9, 10, 11 ஆம் வீடுகளில் இராசி சந்திரன் அமைவது நல்ல வெற்றிகர வாழ்வுதரும்.

6. எ.கா. அதே போல் மேஷ லக்னம் சிம்மம் இராசி, மேஷம் லக்னம் விருச்சிகம் இராசி என்று ஒருவருக்கு அமைந்தால் அவர்கள் தன்னம்பிக்கை உள்ளவராய் இருப்பர்.

7. ரிஷபம் லக்னக்காரருக்கு கடகம் அல்லது துலாம் இராசியில் அவருடைய ஜென்மநட்சத்திரம் அமைந்தால் அவர்கள் தன்னம்பிக்கை உள்ளவராய் இருப்பர்.

8. மிதுனம் லக்னம் கன்னி இராசிக்காரருக்கு மணவாழ்வு சுகம்தராது. ஆனால், பெண் / ஆண் அழகராவார். அதிகத் தன்னம்பிக்கை ஆபத்தை உண்டாக்கும்.

9. கடகம் லக்னக்காரர் விருச்சிகம் இராசியாய் இருந்தால் சுகம் உண்டு. சிம்மம் லக்னக்காரருக்கு துலாம் இராசியில் சந்திரன் இருப்பது வெற்றிதரும்.

10. கன்னி லக்னக்காரர்கள் மிதுனம்- மீனம் இராசிக்காரரானால் ஒளிமய வாழ்வு உண்டு. ஒருவருக்கு துலாம் லக்னம்- மகரம் இராசியாகவும் விருச்சிகம் லக்னம் கடகம் இராசியாகவும் தனுசு லக்னம்-மீனம் இராசியாகவும் அமைவது அவருக்கு நல்லது.

11. மகர லக்னக்காரர்கள் மேஷம் அல்லது கும்பராசியில் பிறந்திருந்தால் பெருந்தலைவராவார்.

12. கும்ப லக்னக்காரருக்கு மேஷராசியில் சந்திரன் அமைவதாலும் மீன லக்னக்காரருக்கு மகர இராசியில் சந்திரன் இருந்தாலும் சந்தோஷம் பெருகும்.

இராசி அல்லது அம்சத்தில் சந்திரன் ஆட்சியாவதும் சிறப்பு. வர்கோத்தமமாவதும் சிறப்பு.

ஜோதிடர் முதலில் லக்னத்துக்கும் சந்திரனுக்கும் உள்ள இடைவெளியைக் கணக்கிட்டாலே பலன் சொல்வது எளிதாகும். அம்சத்தில் லக்னமும் சந்திரன் ஒரேவீட்டில் அமைவதால் 120 வருடம் வாழ்வர்.

ஒருவர் ஜாதகத்தில் லக்னம், இராசி ஒன்றுக்கொன்று 6, 8, 12 வீடுகளில் மறைந்திருந்தாலோ, அல்லது லக்னம், இராசி பகை யோனி நட்சத்திரக் காலில் (அவிட்டம் 1 இல் லக்னம் ரேவதி 4 இல் சந்திரன் ) (யானை - சிங்கம் பகை) இருந்தாலோ தன்னிறக்கம். தாழ்வு மனப்பான்மை உள்ளவராவார்.

* * * * *

## *அலகு IV – கோள்சாரம், தெசா புத்தி பலன்கள்*

## பாடம் 10 – சோதிடவியலும் சமூகவியலும்

இந்தப் பூமி நெபுலாவில் இருந்து விழுந்த ஒரு துகள் என்றும், பூமி தட்டையானது என்றும், உருண்டையானது என்றும், கோளவடிவமுள்ளது என்றும், பலவிதமான சர்ச்சைகளுக்குப் பின் ஒரு ஒருமித்தமான கருத்துக்கு இவ்வுலகம் வந்தது. கடவுள் உருவுடையவன், அருவமானவன், கடவுள் என்பவன் இல்லை, உண்டு என்றும் பல்வேறுபட்ட கருத்துக்கள் இன்றளவும் நிலவுகின்றன. இதில் கிரகங்களைப் பார்க்கும்போது கடவுளும் அவரவர் மனநினைவுக்கேற்ப உள்ளார் என்ற கருத்துக்கு வருவோம். சூரியன், சந்திரன் நீங்கலாய் மற்ற கிரகங்கள் கண்ணுக்குப் புலப்படாததுபோல் கடவுளும் புலப்படவில்லை என்று கொள்ளலாம். கிரகங்கள் பால் வெளியில் உள்ளன என்பதற்கு நம் கண்களுக்குத் தெரியும் சூரியன், சந்திரனே சாட்சி.

எங்கும் நில்லாது நகரும் தன்மை உடையதால் சந்திரனுக்கு நிலா என்ற பெயர் வந்தது போல் உலகம் தனக்குத்தானே சுழன்று உலா வருவதால் உலகம் என்றும் ஒவ்வொரு நொடியும் ‘ஜிகுஜிகு இது ஜெகத்’ என்று மாறுவதால் ஜகம் என்றும், ஈரேழு அண்டங்களில் நடுவில் உள்ளதால் 18 மெய்யெழுத்துக்களில் நடுவான பூ (பூமி) என்றும் காரணப்பெயருடன் பலபெயர்கள் பெற்று விளங்குகிறது.

மனித இனம் தோன்றியதிலிருந்து அவனுடைய நாகரிகமும் அவனுடைய உணவு, உடை, உறைவிடத்துக்கு தக்கபடி அமைந்துள்ளது கண்கூடு. உலகத்தில் ஒரு மூலையில் முறையற்ற செயலாய் கருதப்படும் ஒரு செயல் மறுபக்கம் முறையுள்ள செயலாய் காணப்படுகிறது. எடுத்துக்காட்டாக, இஸ்லாமிய வழக்கப்படி சிற்றப்பா பெண்ணை மணக்கலாம். இந்து முறைப்படி தங்கை உறவு கூடாது.

ஜாதகத்தைப் பாதகமாய்ச் சொல்லாமல் சாதகமாய்ச் சொல்ல வேண்டும் என்பது தவறானது. நம்பி வருபவருக்கு அதிலுள்ள உண்மைநிலையைப் பயமுறுத்தாமல் சொல்வதே ஒரு சோதிடரின் கடமை.

**1. கண்டங்கள்**

பிறந்த உடனோ அல்லது ஓராண்டு கழித்தோ எழுதப்படும் ஒருவரது ஜாதகம் பூத பௌதீகங்களுடன் இணைந்திருப்பதைக் கீழே காணலாம்.

உலகில் ஏழு கண்டங்கள் உள்ளன. அவற்றிற்கும் கிரகங்களுக்கும் சம்பந்தம் உண்டு.

1. சூரியன்: கிழக்காசியா (ஜப்பான்), ஆஸ்திரேலியா – எரிமலைகள் உள்ளது சூரிய சாட்சி.
2. சந்திரன்: மத்திய கிழக்காசியா (பஃக்ரைன், அபுதாபி) – எண்ணெய் வளம் பெற்றிருப்பது சாட்சி.
3. செவ்வாய்: சீனா, ரஷ்யா – வெடிமருந்து உற்பத்தி சாட்சி.
4. புதன்: ஐரோப்பா – வெள்ளை மனிதர்கள் – மிதமான குணம் சாட்சி.

5. குரு: அமெரிக்கா – அனைத்தையும் (வானியல், அரசியல் போன்று) கற்றளிப்பது உலகத்துக்கே. பாடம் புகட்டுவது.

6. சுக்கிரன்: ஆப்பிரிக்கா – வைரச் சுரங்கம் சாட்சி.

7. சனி : தென் அமெரிக்கா – கருப்பர் இனம், செவ்வந்தியர் இனம் மக்கள் சாட்சி.

புதன் இமம் என்னும் பனிக்கு அதிபதி, அண்டார்ட்டிக்காவில் பனி இருப்பது வெள்ளை நிறம் சாட்சி. ஒருவர் ஜாதகத்தில் எந்தக் கிரகம் வலுப்பெறுகிறதோ, அந்த ஊருக்குப் போவதைப் பார்க்கிறோம். இதிலிருந்து ஜோதிடக் கலை புவியியலுடன் சம்பந்தப்படுவதைப் பார்க்கிறோம்.

**2. சோதிடமும் மண்ணியலும்**

புதன் ஜிப்சத்தையும், குரு பொன்னையும், சுக்கிரன் வெள்ளியையும், சனி + சுக்கிரன் வைரத்தையும், சனி நிலக்கரியையும் இரும்பையும், சூரியன் மண் வளத்தையும், சந்திரன் பெட்ரோல், டீசலையும், செவ்வாய் பாதரசத்தையும், இராகு, கேது அமோனியா, மீத்தேன் போன்ற பூமியில் இருந்து வரும் தாதுப் பொருட்களையும் குறிப்பதால், மண்ணியலுடன் சோதிடம் கைக் கோக்கிறது.

**3. சோதிடமும் வேதியியலும்**

மேற்சொன்ன 108 கனிமங்களும் கிரகங்களுடன் சம்பந்தப்பட்டவை.

1. சனி + சுக்கிரன் இணைவு = வைரம், ரேடியம்

2. சூரியன் + இராகு இணைவு = ஹீலியம்.

3. சந்திரன் + செவ்வாய் இணைவு = பெட்ரோல்.

4. குரு + சுக்கிரன் இணைவு = பிளாட்டினம்.

இவ்விதம் திடப் பொருள், திரவப் பொருள், வாயுப் பொருட்களுடன் இணைவதால் சோதிடம் வேதியியலுடன் கை கோக்கிறது. இது பற்றி விளக்கமாய் தொழில் காண்டத்தில் காணலாம்.

**4. சோதிடமும் இயற்பியலும்**

1. புதன் மெர்குரி விளக்கையும், சூரியன் சோலார் மின் உற்பத்தியையும், செவ்வாய் அனல் மின்சாரத்தையும், சந்திரன் நீர் மின்சாரத்தையும், குரு இடி மின்னலையும், சனி + இராகு வானொலியையும், சந்திரன் + செவ்வாய் தொலைக்காட்சியையும் இயக்க வைப்பது கண்கூடு. இவ்விதம் சோதிடம் இயற்பியலுடன் இணைகிறது.

**5. சோதிடமும், இயற்பியலும், மருத்துவமும்**

சூரியன் வெப்ப நோயையும், சந்திரன் குளிர் நோயையும், புதன் மனநோயையும், செவ்வாய் இரத்த நோயையும், சுக்கிரன் சர்க்கரை நோயையும், சனி குன்ம நோயையும், குரு மனப்பிரமையையும், இராகு–கேது வெண் – கருங் குஷ்டத்தையும் குறிக்க வல்லது. இராகுவின் 3 ஆம் பார்வை பெற்ற ஜாதகர்

தொப்புள் கொடி மாலை சுற்றிப் பிறப்பார்.  கேதுவின் 3 ஆம் பார்வை பெற்ற ஒருவர் தொப்புளில் கொடி சுற்றிப் பிறப்பார். சூரியன் உச்சமானால் வெப்ப நோய் வரும். (இது குறித்து ருண, ரோக காண்டத்தில் விரிவாய்ப் பார்க்கலாம்.) கேது மருத்துவக்காரகன். கேது சூரியனுடன் சேர மூளை மருத்துவராவார். இவ்விதம் சோதிடமும் உயிரியலும், மருத்துவமும் இணைகின்றன.

**6. சோதிடமும் கணக்கியலும் பொறியியலும்**

ஹாரஸ்கோப்பும், ஸ்டெதஸ்கோப்பும் ஒன்று என்பதற்கிணங்க மேல் கண்ட எடுத்துக்காட்டுகளைப் பார்த்தோம். ஜாதகமே கணக்காலானது. செவ்வாய் + சனி சேரின் வேதியியல் பொறியாளர், செவ்வாய் + இராகு சேரின் மின்னியல் பொறியாளர், கேது + சனி சேரின் மின்னியல் பொறியாளர் மற்றும் எக்ஸ்ரே தொழில் அமையும், சூரியன் + செவ்வாய் பரிவர்த்தனை இன்சுரன்ஸ் (எல்.ஐ.சி.) வேலை அமையும் என்பதிலிருந்து சோதிடம், கணிதம் பொறியியல் தொடர்புள்ளது தெரிய வரும்.

**7. சோதிடமும் மனோதத்துவமும்**

திறமை வாய்ந்த சோதிடர் வருபவர் முகம் – மனக்குறிப்பறிந்து சோதிடபலன் சொல்வதால் சோதிடம் மனோ தத்துவத்துடன் (உளவியலுடன்) தொடர்பு என்று அறியலாம்.

**8. சோதிடமும் மொழி இயலும்**

சோதிடத்தில் முக்கிய விஷயமே மனோதத்துவம்தான். ஒருவர் ஜாதகம் பார்க்க வரும்போது தந்தையாய், தாயாய், சகோதரராய் வருவார்கள். அவர்கள் வட்டாரம் வழக்கப்படி பலன்கூறல் வேண்டும். மனித வாழ்வு அவர் கற்ற கல்வியை ஒட்டி அமைவதால் மாநில மொழி இயல் அடிப்படையில் அமைவதால் அதை ஒட்டி பலன் கூறுதல் அவசியம்.

சூரியன் : ஆங்கிலம், கிரேக்கம், இத்தாலி, பிரஞ்ச், ஜப்பான் மொழிகளையும்,

சந்திரன் : தமிழ், ஒரியா, ஸ்பானிஷ், ஆப்பிரிக்கா மொழிகளையும்,

செவ்வாய் : துளு, இந்தி, ஐரோப்பிய மொழிகளையும்,

புதன் : லாக்ருதம், குஜராத்தி, ஆப்கான், கொரிய, சீன மொழிகளையும்,

குரு : சமஸ்க்ருதம் மற்றும் ரஷ்ய மொழிகளையும்,

சனி : துளு, மலையாள மொழிகளையும்,

சுக்கிரன் : கன்னடம், தெலுங்கு மொழிகளையும்,

இராகு–கேது : குழூஉக்குறி மொழியையும் (ஒரு குழுவினருக்குள் குறியீடாக வழுங்கும் சொற்கள். எ.கா. கள்ளக் கடத்தல்காரர்கள்) குறிக்கும்.

கிரகங்கள் வலுவாய் அமைவதைப் பொறுத்து அந்தந்த மொழி வல்லமை உண்டாவதால் மொழி இயலும் சோதிடமும் ஒன்றாகிறது.

### 9. சோதிடமும் விவசாயமும் உலோகவியலும்:

சூரியன் முதல் கேது ஈறாய் ஒன்பது கிரகங்களும் பயிரினங்கள் வேளாண்மையோடு பின்னியுள்ளன.

சூரியன் கதிர் எனப்படும் நெற்கதிர் விளைவிக்க வல்லது. கோதுமை பயிர் செய்ய உதவுவது. செந்தாமரை வாணிபம் செய்ய வைப்பது. சூரியன் உச்சம் நீச்சமானால் அதற்குத் தகுந்த விவசாயம் பலிதமாகும்.

சந்திரன்: நீர்ப்பாசனம், பரங்கி, பூசணி, பால், நெற்பயிருக்கு உதவும்.

செவ்வாய்: மோட்டார் பம்ப் தொழில் (வயல்) வெங்காயம், தக்காளி, பீட்ரூட், துவரை போன்ற பயிர் விளைய உதவுவது. செம்மண் செங்கல்லுக்கு உரியது.

புதன் : பால், பருத்தி, பச்சை பயிரினம், கத்தரி, வெண்டை பயரிட உதவுவது.

குரு : கரிசல் மண் கடலை, மஞ்சள் முதலியன விளைய வைப்பது.

சுக்கிரன் : மொச்சை, வெள்ளை உளுந்து, பயிருக்கும் உரியது.

சனி : எள், இரும்பு, தலைமுடி (கருப்பு டைமண்ட்) வாணிபம் தர வல்லது.

இராகு கேது : கொள்ளு : உளுந்துக்கும் உரியது.

அதே போல் மாணிக்கம், முத்து, பவழம், மரகதம், புஷ்பராகம் போன்ற நவரத்தின வியாபாரத்துக்கும் உதவுவதால் சோதிடம்–கிரகங்கள் வேளாண்மை மற்றும் உலோகவியலுடன் சம்பந்தப்படுகிறது.

### 10. சோதிடமும் வாகனவியலும் (ஆட்டோ மொபைல்)

சூரியன் நீராவி எஞ்சினுக்கும், சந்திரன் மெரீன் தொடர்பு கப்பல் துறைக்கும், செவ்வாய், இராகு கேது இவை ராக்கெட் துறைக்கும், புதன் ஆகாய விமானத்துக்கும், குரு பஸ், டிராம்களுக்கும், சனி கார்கோவுக்கும் உடையதால் ஜாதக – சோதிடத்துக்கும் வாகனவியலுக்கும் சம்பந்தமுள்ளது. வாகனவியல் சூரியனுடன் இணைந்தது.

இவ்விதம் எல்லாத் துறைகளுடனும் ஜாதகம் இணைந்துள்ளதால் கற்பவர் சகலகலா வல்லுநராவார். அதுமட்டுமின்றி கீழ்க்காணும் துறைகளிலும் சோதிடவியல் சம்பந்தப்படுகிறது.

### 11. வரலாறு

கல்வெட்டுக்கள் அந்தக் காலத்தில் அரசர்களால் வெட்டப்பட்டன. இப்போது டைரி பயன்படுத்துவது போல். அக்காலத்தில் நீர் நெருப்பு போன்ற இயற்கை சீற்றங்களுக்கு உட்படாமல் வருங்கால சந்ததியினருக்கும் உலகத்துக்கும் தங்களது சாதனைகளைக் கோயில் கல்வெட்டுக்களில் எழுதி வைத்தனர் (செதுக்கும்) ஒருவர் ஜாதகத்தில் சனி + சூரியன் சேர்ந்து குருவால் பார்க்கப்பட்டால் அவர் கல்வெட்டாய்வு, தொல் பொருள் ஆய்வு செய்ய நேரும். ஜாதகம் பார்க்கும் போது முந்தைய கால முனிவர்கள், மகான்கள் சித்த

புருடர்கள் மன்னர்கள் பற்றித் தெரிந்திருத்தலும் அவர்கள் நட்சத்திரங்கள் பற்றி அறிந்திருத்தலும் நலமல்லவா? அதே போல் முந்தைய தமிழ் அறுபதாண்டுகளில் நடந்த நிகழ்வை தற்போது நடக்கும் நிகழ்வுகளுடன் தொடர்புபடுத்துதல் மூலம் வரலாறும் சோதிடத்துடன் இணைகின்றது.

**12. விளையாட்டு**

அசுபதி 1 இல் பிறந்தவர்கள் பளுதூக்கிகள். 10 ஆம் அதிபதி 12 இல் மறைந்து சுக்கிரனால் பார்க்கப்பட்டால் ஓட்டப்பந்தய வீரர். கார்த்திகை நட்சத்திரக்காரர்கள் பேட்மிண்ட்டன் ஆட்டக்காரர். உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்கள் சடுகுடு. கபடி, தாயம் ஆடுவதில் வல்லவர். ரோகிணி நட்சத்திரக்காரர்கள் செஸ் – கேரம் விளையாட்டு வீரர்கள் என வருவதால் விளையாட்டுத்துறையும் ஜோதிடத்துடன் இணைகிறது. இது போல் சங்கீதம் உட்பட நாடகம், சினிமா போன்ற செவ்வாய் + இராகு இணைப்புள்ள கிரக அமைப்பு மனமகிழ் பொழுது போக்கு அம்ஸத்துடன் இணைவது குறிப்பிடத்தக்கது.

**13. தட்பவெப்ப நிலை**

சூரியன் உச்சமானால் அனல் காற்று வீசும் செவ்வாய் நீச்சமாய் சனியால் பார்க்கப்படின் பூகம்பம், இயற்கை சீற்றங்கள் குறித்தும் ஜோதிடம் சொல்வதால் தட்பவெப்ப நிலையுடன் சங்கமமாகிறது. அதுபோல் சுக்கிரன் ஆதிக்கமுள்ளவர் தாவரவியலும் (பாட்டனி) , சனி ஆதிக்கமுள்ளவர் விலங்கியலும் (சுவாலஜி) கவனம் செலுத்துவர். சுக்கிரன் ஆதிக்கமுள்ளவர் தோட்டக்கலை பராமரிப்பு செய்வர்.

அசுபதி–சதயக்காரர் குதிரை வளர்ப்பிலும், மூலம், திருவாதிரைக்காரர்கள் நாய் பராமரப்பிலும் உத்திரம், சித்திரை நட்சத்திரக்காரர்கள் கால்நடை வைத்தியத்திலும் சிறப்புறுவர்.

சுக்கிரன் நீச்சமானால் வெள்ளி விலை குறையும். உச்சமானால் வெள்ளி விலை குடும். அதே போல், குரு உச்சம், நீச்சமானால் தங்கம் விலை ஏறி, இறங்கும். செவ்வாய் உச்சம், நீச்சமானால் வீடு, நிலம் ஏறி, இறங்கும்.

**14. காய்–கனி–மலர்கள்:**

மேஷ இராசிக்காரர்கள் பால் வாணிபம், ரிஷப இராசிக்காரர்கள் வைர வாணிபம் என்று (எல்லாம் 10 காண்டத்தில் வரும்) 12 இராசிக்காரர்களும் வணிகவியலுடன் தொடர்புள்ளவர்களாவர். சுக்கிரன் மற்றும் குரு ஆதிக்கம் உள்ளவர்கள் சாமந்தி, துளசி வியாபாரிகளாகவும், சந்திரன் ஆதிக்கமுள்ளவர்கள் ரோஜா, மல்லிகை வாணிபம் செய்பவராயும், சனி–இராகு–கேது ஆதிக்கமுள்ளவர் ஆப்பிள், மாதுளை, தக்காளிப்பழ வியாபாரிகளாகவும், குரு ஆதிக்கமுள்ளவர்கள் வாழைப்பழம் வியாபாரிகளாகவும் இருப்பர். துலாம் இராசிக்காரர்கள் திருவோணம் நட்சத்திரக்காரர்கள் கீரை வாணிபம் செய்வர். (விளக்கம் தொழில் காண்டம்) இப்படி பஞ்சபூதம் மற்றும் மனித இல்லறங்களில் அணுஅணுவாய்க் கலந்திருக்கும் ஜோதிடம் சமுதாயத்தை நல்ல நிலைக்குக் கொண்டுவரும் என்பதில் ஐயமில்லை.

* * * * *

## அலகு IV

## பாடம் 11 – கோச்சார பலன்கள்

கோள் என்றால் கிரகம். சாரம் என்றால் பயணவழி என்று பொருள். அதன்படி நவக்கிரகங்களும் அடுத்தடுத்த வீடுகளில் பயணம் செய்யும் போது அவற்றிற்குரிய பலன்களை இராசிகளுக்குத் தக்கவாறு அளிக்கும். இதனைக் கைதேர்ந்த சோதிடர் தன்னை நாடிவரும் ஜாதகர்களுக்கு அவர்கள் எதிர்பார்க்கும் பதிலைக் குறிப்பறிந்து அவருக்குத் தற்போது நடக்கும் தெசா புக்திகளை, கிரக நிலைகளை அறிந்து, கோள் சார பலன்கள் நம்பிக்கை ஊட்டும்படி சொல்ல வேண்டும். அதில் எதிர்மறையான பலன்கள் தென்பட்டால் கவனம் தேவை. நிதானமாய்ப் பேசவும் என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தவேண்டும்.

குறிப்பாய் எல்லாகிரகங்களும் இடமிருந்து வலமாய் சுற்றி வரும். அதனால் தான் கோவிலைச் சுற்றி வருவதை வலம் என்றும் நடை பயில்வதை (செல்வதை) ஊர்வலம் என்றும் கூறுகிறோம். மாப்பிள்ளை அழைப்போ அல்லது கோயில் சுவாமி புறப்பாடோ எதுவானாலும் இடமிருந்து வலமாய்ச் சுற்றி வரும். இராகு–கேது மட்டும் வலமிருந்து இடமாய்ச் சுற்றும்.

இப்படி இடமிருந்து வலமாய் பவனி வரும் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன், சனி இவை தரும் பலன்கள் அபரிமிதமானவை. இதில் சூரியன், புதன், சுக்கிரன் இம்மூன்று கிரகங்களும் மாதாமாதம் பெயர்ச்சியாகும். இவற்றிற்கு மாதக் கோள் என்று பெயர்.

செவ்வாய் 1–1/2 மாதத்துக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும். சந்திரன் தினமும் பெயர்ச்சியாவதால் இதை நில்லாது என்னும் பொருள்பட நிலா, நிலவு என்றனர்.

குரு வருடா வருடம் பெயர்ச்சியாகும். இதற்கு வருடக்கோள் என்று பெயர். இராகுவும், கேதுவும் ஒன்றரை வருடத்துக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும். சனியோ இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும்.

பொதுவாய், சூரியன், புதன், சுக்கிரன் பெயர்ச்சிக்கு யாரும் முக்கியத்துவம் தருவதில்லை. ஆனால், அவைதாம் அதிக பலன்களைத் தருகின்றன. சந்திரனின் பெயர்ச்சியில் சந்திராஷ்டமத்தைத் தவிர மற்ற நாட்களுக்கு முக்கியத்துவம் தருவதில்லை. செவ்வாய் பெயர்ச்சி அவ்வப்போது கணக்கிடப்படுகிறது.

ஆனால், சனி, இராகு – கேது, குருப் பெயர்ச்சியைக் கண்டு அஞ்சாதவர்களே கிடையாது. எனவே, இதற்கு அதிக முக்கியத்துவம் தருகின்றனர். பார்க்கப் போனால் சனி, இராகு–கேதுக்களே அதிக நன்மைகள் தர வல்லவை. குருவை விட சனி நல்லவராவார். கிரகங்களுக்குள் வேறுபாடு காட்டும் நோக்கத்துடன் சொல்லப்படுவதல்ல. இது சனி தெசையில் சுகம் பெற்றவர் பல பேர்கள் உண்டு. குரு நீச்சமாகி மனித

மலத்தை நீக்கும். தொழில் செய்தவர் உண்டு. சனி நீச்சமாகி குடியரசுத்தலைவரிடமிருந்து விருது வாங்கினவர் உண்டு.

மனித வாழ்வில் குரு ஒருவருக்கு அதிகபட்சம் 8 முறை 12 வீடுகளைக் கடந்து வருவார். சனி அதிக பட்சம் 3 முறை கடப்பார் இப்படி குரு 8 முறையும் சனி 3 முறையும் வலம் வர 90 வயதாகிவிடும். இனி கோட்சாரப் பலன்களைக் காண்போம்.

கோள்சாரப் பலனை இராசி பலன் என்றும் கூறுவர். இது சந்திரனை அடிப்படையாய் வைத்துப் பார்க்கப்படுவது. இது சந்திரன் வழி முறை (Lunar system). இது இந்திய முறை. இந்த இந்திய முறையில் நட்சத்திரத்தைப் பொறுத்து பலன்கள் சொல்லப்படும். வெளிநாட்டில் பிறந்த மாதத்தைக்கொண்டு சூரியன் உள்ள இடத்தை அடிப்படையாய் வைத்திருப்பது மற்றொரு முறை. அது சூரியன் வழி முறை (Solar system). நாம் சந்திரன் வழி முறையில் பார்ப்பதே சரியானது. சந்திரனை அடிப்படையாய் வைத்து பார்ப்பது சாந்திரமானசனம். சௌரவம் என்றால் சூரியன், சௌராஸ்ட்டினரைச் சூரிய வழிப்பாட்டினர் என்று கூறுவர் சூரியனை அடிப்படையாய் வைத்துப் பார்ப்பதைப் பின்னர் பார்ப்பது சௌரம் மானசம்.

**1) சூரியப் பெயர்ச்சி**

மேஷம் முதல் மீனம் ஈறாக 12 இராசிகளுக்கும் சூரியன் இராசியில் இருந்து 3, 6, 10, 11 ஆம் வீடுகளில் சஞ்சரிக்கும்போது நல்ல பலனைத் தருகிறார். எடுத்துக்காட்டாக அதாவது மேஷம் இராசிக்கரரருக்கு சூரியன் மிதுனம், கன்னி, மகரம், கும்பம் ஆகிய இராசிகளில் இருக்கும்போது, நல்ல பலன்களைத் தருகிறார். ஜோதிடர்கள் இந்தப் பகுதி விரிவஞ்சி விடப்படுவதால் ஜாதகம் பார்க்க வருபவர்கள் இராசியிலிருந்து கணக்கிட்டுப்பலன் கூற இருந்தால் இரண்டு மூன்று வார்த்தைகள் பேசி பலன் கூற வேண்டும்.

**2) சந்திரப் பெயர்ச்சி**

சந்திரன் இராசிக்கு (இராசிக் கட்டத்தில்) 1, 3, 5, 6, 7, 10, 11 ஆம் வீடுகளில் சஞ்சரிக்கும் போது ஜாதகருக்குப் பணவரவு, கல்வி, தொழில் வெற்றியைத் தருவார்.

அர்த்தாஷ்டமச் சந்திரன், அஷ்டமச் சந்திரன் இராசிக்கு 4 மற்றும் 8 வீடுகளில் சஞ்சரிக்கும் 2-1/2 நாட்கள் காரியத் தாமதம் உண்டாகும். இவ்விரண்டும் வளர்பிறையில் வந்தால் சுப பலன் தரும்.

**3) செவ்வாய் பெயர்ச்சி**

செவ்வாய் இராசிக்கு 6, 11 வீடுகளில் சஞ்சரிக்கும்போது 100% இலாபத்தையும் 3 இல் சஞ்சரிக்கும் போது 80% லாபத்தையும் தரும். செவ்வாய் 4, 8 ஆம் வீடுகளில் இருப்பது நல்லதல்ல. நீச்சமானால்

இக்காலத்தில் விபத்து உண்டாகும்.

பொதுவாய் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், இராகு, கேது ஆகியவை இராசிக்கு 6 இல் இருந்தால் நல்ல பலன்களே தரும். ஆனால், குரு, சுக்கிரன் இரண்டும் 6 இல் இருந்தா;ல் பெரும் இடருண்டாகும். எனினும் கோள் சாரம் என்பது தற்காலிகமானது என்பதால் நலமுண்டு.

செவ்வாய் மகரத்தில் இருந்தால் பீட்ரூட், தக்காளி, வெங்காயம் விலை ஏறும். செவ்வாய் கடகத்தில் இருந்தால் மேற்கண்ட மூன்று காய்கறிகள் தண்ணீரில் மூழ்கும்.

**4) புதன் பெயர்ச்சி**

புதன் இராசிக்கு 1, 3, 9 ஆகிய 3 வீடுகளில் இருந்தால் பயணமுடை , மறதி, பயமுண்டாகும். எனவே, ஒரு ஜோதிடர் இந்த 3 வீடுகளைத் தவிர மற்ற இடங்களில் புதன் இருந்தால் நல்ல பலன்களையே கூறலாம்.

**5) குரு பெயர்ச்சி பலன்கள்**

முக்கியமான பெயர்ச்சி இது. குரு பகவான் இருக்கும் இடத்தைவிட பார்க்கும் இடத்திற்கே அதிக சக்தியுண்டு. குரு பகவான் 2, 5, 7, 9, 11 ஆகிய வீடுகளில் சஞ்சரிக்கும்போது அமோக பலன் தருவார். வெற்றி மகிழ்ச்சியைச் சலிக்கும் அளவுக்குத் தருவார். அதே நேரம் 6 ஆம் வீட்டில் இருக்கும் போது மனத்துயரம், இருண்ட சூழ்நிலையைத் தருவார். 8 இல் இருக்கும்போது மரண பயத்தையும் விபத்தையும் உண்டாக்குவார். ஆபத்து என்பது பிறரால் வருவது. விபத்து என்பது தானே தேடிக்கொள்வது. குரு 1 மற்றும் 12 இல் இருக்கும்போது 60 % சந்தோசம், சுபவிரயம், சகோதரருக்கு மேன்மை உண்டாகும். இனி இராசிக்கு 1 இலிருந்து 12 வீடுகளில் குரு இருக்கும் பலனைப் பார்ப்போம்.

**இராசியில் குரு**

1. குரு பார்வை 5, 7, 9 இல் படுவதால் ஜாதகரின் குழந்தை, கணவர் / மனைவி, தந்தைக்கு யோகம் உண்டு என்று சொல்ல வேண்டும்.

2. இராசிக்கு இரண்டில் குரு இருந்தால் குடும்பக் குதூகலம் ருீச்சம், உச்சமானாலும், கிரகப் பார்வை பட்டாலும் சுப காரியம் தடைபடாது. குடும்பக் கடன் அடையும். சுகஜீவனம், தொழில் இலாபமுண்டு.

3. குரு 3 இல் இருந்தால் சுமாரான பலனே உண்டு. கணவர், மனைவி நலம். தந்தை நலம் சிறு இலாபமுண்டு. இருக்கும் இடத்தில் இருந்து மேற்கு திசை அனுகூலம் தரும்.

4. 4 இல் குரு இது அர்த்தாட்டம குரு. வாகன விபத்து. சுகாதார ஆகாரமின்மை. தொழில் மந்தம். தூக்கமின்மை. உண்டு.

5. 5 இல் குரு சந்தோசம், சாதனை, அலுவலகப் பணி முக்கிய பதவி, புத்திர இலாபம் முதலியன உண்டு.

தந்தை நலம். பொருள்வரவு. குடும்ப இலாபமுண்டு. கடந்த 4 ஆண்டுகள் போராட்டம் முடிவுக்கு வரும். அம்மை போன்ற வெப்ப நோய் வரும்.

6, 6 இல் குரு இருண்ட சூழல் உண்டு. ஆனால், 12 மாதங்களில் 3 மாதத்திற்க ஒரு முறை ஏதாவது நல்லது ஆறுதலாய் நிகழும். சிறு முதலீடுகள், குளிர் சாதனப் பெட்டி, துணி துவைக்கும் இயந்திரம் ( பிரிட்ஜ் வாசிங் மிசின்) வாங்குதல் உண்டு. தொழில் இலாபம். நல்ல உறக்கம். சகோதரர் மேன்மை, நலம் தரும்.

7. 7 இல் குரு சுப காரியம், திருமணம், புத்திரப் பேறு உண்டு. ஆனால், ஒருவர் வாழ்வில் 5 ஆவது முறை வரும் 7 ஆம் வீட்டு குரு 48 – 60 வயது இடைப்பட்டது. சுமாரான பலனே தரும்.

8. 8 இல் குரு உஷ்ண நோய், ;உடல் அசதி, வேதாந்த எண்ணம் தரும்.

9. 9, 10, 11, 12 இல் குரு சஞ்சரிக்கும் காலம் பொன்னானவை. சுயதொழில், இடமாற்ற மேன்மை உண்டாகும்.

ஒரு வேண்டுகோள் ஜோதிடர் தற்காலக் கிரகம் தெசாபுத்தியைக் கோள்சாரத்துடன் ஒப்பிட்டு பதில் சொல்ல, பலன் சொல்ல வேண்டாம்.

**6) சுக்கிரன் பெயர்ச்சி.**

சுக்கிரன் 5, 6, 7, 10 வீடுகளில் சஞ்சரிக்கும்போது அசுப பலன் (தீய பலன்) உண்டு. மற்ற இடங்களில் சுக்கிரன் ஏதாவது ஒரு நல்லது செய்வார்.

**7) சனி பெயர்ச்சி**:

சனி, 3, 6, 11ஆம் வீடுகளில் இருக்கும்போது நல்ல பலன்களையும் மற்ற இடங்களில் சுமாரான பலன்களையும் தரும். இராசிக்கு 7இல் சனி வந்தால் கண்டகச் சனி என்று பொருள். இதைச் சிலர் கண்டச் சனி என்பர். கண்டம் என்றால் கழுத்து. எனவே கழுத்து சனி என்று பொருள். இங்கு கண்டம் என்றால் ஆபத்தைக் குறிக்காது. சனி இராசிக்கு 7இல் இருந்தால் சிறை பயம் உண்டாகும். எல்லாராலும் அச்சம் கலந்த ஆர்வத்துடன் எதிர்பார்க்கப்படும் இஃது இரண்டரை வருடங்களுக்கு ஒரு முறை நிகழும். இந்தச் சனி பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களையும் மகரம், கும்பம் லக்னக்காரர்களையும் ஒன்றும் பண்ணாது. ஏனெனில், பூசம், அனுஷம், உத்திரட்டாதி சனியின் நட்சத்திரங்கள். அதேபோல் மகரம், கும்பம் லக்னங்கள் சனியின் வீடுகள். ஒருமுக்கிய விஷயம் மகரம், கும்பம் இராசிக்காரர்களை சனி சும்மா விடுவதில்லை. அங்குள்ள உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், பூரட்டாதி ஆகிய நட்சத்திரங்களுக்கு ஏற்ப பலன்களைத் தரும்.

ஏழரைச் சனி அட்டமச்சனி, அர்தாட்டமச் சனி, சனி புக்தி, சனி தெசை என்பன நடைபெறுங்காலம் இடம், பொருள், ஏவலுக்கு வேறுபட்டவை. சனி தெசை பத்தொன்பது வருடம் நடக்கும். அதிலுள்ள சனி முதல்

புக்தி 3 வருடம் 3 நாட்கள் நடக்கும். அர்த்தாட்டம சனி 2 வருடம் 6 மாதம் நடக்கும். ஆனால், ஏழரைச் சனி ஏழரை வருடம் நடக்கும் என்று தவறாய் கூறப்படுகிறது. அஷ்டமச் சனியும் இரண்டரை வருடங்கள் நடக்கும். இதில் அர்த்தாட்டமச் சனி, அட்டமச் சனி, ஏழரைச் சனி ஒருவர் வாழ்நாளில் 3 முறை, அதாவது 22 வருடங்கள் 6 மாதங்களுக்கு ஒரு முறை வரும். இவை முறையே

(1) மங்கு சனி, (2) பொங்கு சனி, (3) மரண சனி என்று கூறுவர். மரணம் என்றால் உயிர் பிரியும் நிலை அல்ல. இனி அவர் வாழ்வில் சனி வராது என்றே பொருள். பொதுவாய் ஆறு தெசைகள் கடந்தவர் எவரும் 3 சனி தாண்டிய எவரும் உயிருடன் இருப்பதில்லை என்ற தவறான கருத்து உலவுகிறது.

அப்படிப் பார்த்தால் கார்த்திகை நட்சத்திரக்காரர்கள் சூரிய தெசையில் பிறந்து 17 ஆண்டுகளுக்கு 3 தெசைகளைக் கடந்து சிறுவயதில் இறைவனடி சேருவதில்லை.

அதே போல், முதல் ஏழரைச் சனியை முழுவதும் அனுபவித்தவர் அறுபது வயதில் மரணம் அடைவதுமில்லை. இதெல்லாம் கிரக அமைப்பு பொறுத்தே அமைகிறது ( ஆயுள் காண்டம்). அதே போல் சந்திராட்டமம் இரண்டரை நாட்கள் கிடையாது. ஜன்ம நட்சத்திரம் தொடங்கி 16 ஆவது நட்சத்திரத்தில் சந்திரன் இருக்கும் போது அன்றைய பொழுது மட்டும் சந்திராட்டமம் ஆகும்.

அதன்படி அசுபதிக்கு 16 ஆவது நட்கத்திரம் விசாகம், பரணிக்கு அனுஷம் என்று 16 ஆவது நட்சத்திரத்தன்று மட்டும் கவனமுடன் இருக்க வேண்டும். அதே போல் ஏழரைச் சனி ஏழரை வருடங்களுக்கு நடக்காது. ஜென்ம நட்சத்திரம், முன் நட்சத்திரம், பின் நட்சத்திரம். உதாரணத்துக்கு, பரணி நட்சத்திரக்காரருக்கு அசுபதி, பரணி 4ஆம் பாதம் முதல், கார்த்திகை 1ஆம் பாதம் வரை சனி சஞ்சரிக்கும் போது மட்டும் ஏழரைச் சனியாகும். பிறகு ஏன் ஏழரை வருடம் என்று சொன்னார்கள்? அதனை இங்குக் காண்போம்.

அதாவது ஜென்ம இராசிக்கு 16 ஆவது நட்சத்திரத்தில் சந்திரன் இருந்தால் அந்த 1 நாள் மட்டுமே சந்திராட்டமம். அதே போல் முன், தன், பின் நட்சத்திரங்களில் சனி இருப்பதே ஏழரைச் சனி என்றுணர்க.

**ஏழரைச்சனி காரணப்பெயர்:**

முந்தைய காலத்தில் இராமேஸ்வரம் முதல் இலங்கைவரை 49 சிறிய தீவுகள் (திட்டுக்கள்) இருந்தன. அவைகளில் ஏழரைத் தீவுகளை நளமகாராஜன் ஆண்டு வந்தான். அந்த 49 தீவு – திட்டுக்களும் ஏழேழ் தீவுகள் (7 X 7= 49) என்று அழைக்கப்பட்டன. ஏழேழ் தீவே மருவி ஈழத்தீவு ஆனது. அந்தத் திட்டுக்களில் நின்று மீன்பிடித்தவர்கள் ஈழவர்களானார்கள். அந்த 49 தீவுகளைத்தான் அனுமான் நீளம் தாண்டுதல் (லாங் ஜம்ப்) செய்து இலங்கையை அடைந்தான். அதே போல் இராமருக்கும் இலங்கை தீவு வரை பாலம் அமைக்க

வசதியாய் இருந்தது. அந்த 49 தீவுகளில் வில் முனை, கல் முனை நீங்கலாக தனுஷ்கோடி உட்பட 48 தீவுகளும் நீரில் மூழ்கின. அதில் ஏழரைத் தீவை நளன் ஆண்டதால், நளனுக்கு ஏழரை நாட்டான் என்று பெயர். இது ஒரு கல்லூரிக்கு அமெரிக்கன் கல்லூரி என்று பெயர் வைப்பது போல் உள்ளது. அவனைச் சனி பிடித்ததால் அவன் பெயரை ஞாபகமாய் வைத்து விட்டனர். அதனால் ஏழரை நாட்டான் சனி என்று பெயர் வந்தது.

இன்றும் அரசியல் பிரமுகர் பெயரில் நகர்கள் எழுவது போல் அன்றைய அரசியல் தலைவன் நளன் ஆனதால் அவன் பெயரில் ஏழரை நாட்டான் சனி என்று பெயர் வைக்கப்பட்டது. இலங்கை நீங்கலாய் மற்ற 48 தீவுகள் மறைந்தாலும்ஏழரை என்ற பெயர் மறையவில்லை. ஏழரை நாட்டான்சனி என்றார்களே தவிர ஏழரை வருடச் சனி என்று சொல்லவில்லையே.

சனி ஏழரை வருடங்கள் நடக்கும் என்று அஞ்ச வேண்டாம். ஏழரைச் சனியின் காலம் சுமாராக 1 வருடம் 9 மாதங்களே. நளன் குளித்து சனி விட்டதால் அக்குளம் திருநளஆறு என்பது திருநள்ளாறு என்று ஆனது. இனி ஏழரைச் சனியின் வகைகளைக் காண்போம்.

1. மங்கு சனி: இது முதல் சுற்று. இந்தக் காலம் கடினமாய் இருக்கும். வீண்செலவு இருக்கும்.
2. பொங்கு சனி : இது இரண்டாம் சுற்று. செல்வம் செழித்துக் கொழிக்கும். உறவுகள் இனிக்கும்.
3. மரணச் சனி: இது மூன்றாம் சுற்று. உடல் உபாதை, பிணி கூடும்.

அதே போல் முதல் அர்த்தாட்டமச் சனியில் உடல் அசதியும், இரண்டாவது அர்த்தாட்டமச் சனியில் செல்வாக்கும் மகப்பேறும், மூன்றாம் அர்த்தாட்டமச் சனியில் கண் ரோகமும் உண்டாகும். ஜென்ம இராசிக்கு கோச்சாரப்படி சனி 4 இல் இருப்பது அர்த்தாட்டமச் சனி. அர்த்தம் பாதி அட்டமம். அட்டமம் என்றால் எட்டு. அர்த்தாட்டமம் என்றால் எட்டில் பாதி, அதாவது நான்கு என்று பொருள். மேஷம் இராசிக்குக் கடகத்திலும், ரிஷபம் இராசிக்குச் சிம்மத்திலும் சனி கோட்சார ரீதியாய் வருவது அர்த்தாட்டம சனி. இப்படியே எல்லா இராசிகளுக்கும் அர்த்தாட்டமச்சனி பார்க்கவும். மகரம் இராசிக்கு அர்த்தாட்டமச் சனி வாகன யோகம் தரும் (நீச்சமானால்). சனி 4 இல் வர அம்மை நோய் உஷ்ண நோய் மகரம் இராசிக்கு வரும்.

ஆனால், மூன்று அட்டமச்சனிகளுமே தொல்லை தரும்.

இதில் மீனம் இராசிக்கு அட்டமச் சனி துலாத்தில் (சனி உச்சமாவதால்) யோக பலன் தரும், கன்னி இராசிக்கு (சனி மேஷத்தில் நீச்சமாவதால்) அட்டமச்சனி கொடிய பலனை தரும்.

தற்போது எஞ்சிய இலங்கையும் ஏழரைச்சனி என்று எஞ்சிய பெயருமே உள்ளது. மேலும் பர்மா (இரங்கூன்), சென்னை, பெங்களூர், மங்களூர் என்ற வரிசையில் நடுநாயகமாய் இருப்பதால் நளன் ஆறு

நள்ளாறு (நடுஆறு) (நள்ளிரவு என்பது போல்) ஆனது. புவி இயல் சான்று.

**8) இராகு, கேது பெயர்ச்சி பலன்கன்:**

18 முதல் 19 மாதங்களுக்கு ஒரு முறை பெயர்ச்சியாகும் இராகு கேதுக்கள் அபரிமிதமான பலன்களைத் தரும். இவை இராசியிலிருந்து 1, 7 இல் இருக்க, (இராகு 1 இல் கேது 7 இல் இருந்தாலும் அல்லது கேது 1 இல் இராகு 7 இல் இருந்தாலும்) ஒரே பலன் தான்: கனவுத் தொல்லை வரும். வேலைப்பளு உண்டு.

2-8 இல் இருக்க, மஞ்சட்காமாலை வரும். அவசரப் பேச்சால் இடர் வரும்.

3-9 இல் இருக்க, திரவிய இலாபம் உண்டு. கல்விச் சாதனை குடும்ப இலாபம்.

4-10 இல் இருக்க, இடமாற்றம், சிறுகடன்கள்.

5-11 இல் இருக்க, தோல் அலர்ஜி, பணமுடை, பெரும் புகழ். உண்டாகும்.

6-12 இல் இருக்க, செல்வம், செல்வாக்கு கூடும்.

இப்படிப்பட்ட சனி ஜென்மராசிக்கு 3, 5, 6, 10, 11 ஆம் வீடுகளில் சஞ்சரிக்கும்போது நல்ல பலன்களைத் தரும். சனி வர்கோத்தமமாகி, அதாவது அசுபதி 1, பூரம் 1, சித்திரை 3 போன்ற இடத்தில் இருக்க ஏழரைச் சனி, அட்டமச் சனி, அர்த்தாட்டமச் சனி நடப்பது சாலச்சிறந்தது.

அதே போல், இராகு-கேது: உச்சம், நீச்சமானால் நலமுண்டு. 3, 6, 9 12 இல் சஞ்சரிக்கும்போது (இராசியிலிருந்து) நலமுண்டாகும்.

ஏழரைச் சனி நடக்கும் காலங்களில் அல்லது அட்டமச் சனி அல்லது அர்த்தாட்டமச் சனி நடக்கும் காலங்களில், கோட்சாரத்ரீதியாய் செவ்வாய், சூரியன், சந்திரன் இவை 6 ஆம் வீட்டில் இருக்கும் காலம் சுகமானவையாகும். சனி தெசையும் ஏழரைச் சனியும் அல்லது சனி தெசை காலத்தில் (எக்காலத்தில்) அர்த்தாட்டமச்சனியும் அட்டமச்சனியும் நடந்தால், ஏழரைச் சனியால் பாதகம் இருக்காது. அட்டமச் சனி அர்த்தாட்டமச் சனி நல்லவையே நிகழும்.

மிதுனம் கடகம் இராசிகளுக்கு அட்டமச்சனி நடந்தால், நல்ல பலன்கள் உண்டாகும். அட்டமச்சனி நடக்கும் போது, பூசம் நட்சத்திரம் வரும் போதெல்லாம் கடகம் இராசிக்காரர்களுக்கு நல்லவை நிகழும். (30 பூசம் வரும்.)

இதுகாறும் கோச்சாரப் பலன்களைப் பார்த்தோம். இனி தெசா,புக்தி பலன்களைப் பார்ப்போம்.

* * * * *

## *அலகு IV*

# பாடம் 11 – தெசாபுக்திப் பலன்கள்

கோள்சாரப் பலன்கள் ஒரே மாதிரியானவை. ஆனால், தெசா புக்தி பலன்களோ ஜென்ம நட்சத்திரத்தைப் பொறுத்து பலன் அமையும்.

1. அசுபதி, மகம், மூலம் நட்சத்திரக்காரர்களுக்குக் கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு–கேது– குரு என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
2. பரணி, பூரம், பூராடம் நட்சத்திரக்கரர்களுக்குச் சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
3. கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரக்காரருக்கு: சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன் என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
4. ரோகிணி, ஹஸ்தம், திருவோணத்தில் பிறந்தவர்களுக்கு சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
5. மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டத்துக்குச் (ஜாதகருக்கு) செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
6. திருவாதிரை, ஸ்வாதி, சதயக்காரர்களுக்கு இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன் என்ற வரிசையில் தெசைகள் அமையும்.
7. புனர்பூசம், விசாகம், பூரட்டாதிக்கு குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் என்ற வரிசையில் தெசா புக்தி அமையும்.
8. பூசம், அனுஷம், உத்திரட்டாதிக்கு சனி புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் என்ற வரிசையில் தெசா புக்தி அமையும். ஏழரைச் சனியில் முதல் இரண்டரை வருடப்பகுதி, தலைச்சனி, நடுப்பகுதி, உடல்சனி, கடைசிப் பகுதி பாதச் சனி என்பது போல் தெசையில் கிடையாது.
9. ஆயில்யம், கேட்டை, ரேவதிக்கு புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் என்ற வரிகையில் தெசைகள் அமையும் என்று முன்னர்ப் பார்த்தோம்.

அப்தம் என்றால் 10 ஆண்டுகள் என்று பொருள். சஷ்டியப்தம் என்றால் 60 ஆண்டுகள் என்று பொருள். ஒருவரது பூரண ஆயுள் என்பது இரண்டு சஷ்டி அப்தங்கள் ஆகும். ஆனால், 80 வயது வரையில்தான் வாழ்கிறார்கள்.

**1. சூரியன் தெசை:**

சூரியன் சிம்மம், மேஷத்தில் இருக்க, அந்தத் தெசை நடந்தால் அரசாங்க ஆதரவு பெருகும். தந்தை வழி நலம் சிறக்கும். நீச்சமாய் இந்தத் தெசை நடந்தால் வெப்ப நோய், தீ விபத்து உண்டாகும். சூரியன்

லக்னத்துக்கு 3, 6 ஆகிய இடங்களில் இருக்க, அந்தத் தெசை நடந்தால் பண வருமானம் பெருகும். சூரியன் தெசையில் மட்டுமின்றி, எல்லாத் தெசைகளிலும் சுயபுத்தி, அதாவது சூரியன் தெசை சூரியன் புத்தி, சந்திரன் தெசை சந்திரன் புத்தி... சனி தெசை சனி புத்தி இக்காலங்கள் நல்லதாய் இருக்கக் கூடாது. நல்ல பலன் நிகழ்ந்தால் மீதியுள்ள தெசா புக்திகள் நலம் தராது. தெசா நாதனுக்கும் புத்தி நாதனுக்கும் இடைப்பட்ட வீடுகளை வைத்து பலன் சொல்ல ேண்டும். பொதுவாய் சூரியன் தெசை சந்திரன் புக்தி என்று உதாரணத்துக்குப் பார்த்தால், சூரியன் உள்ள வீட்டுக்கு 7 ஆம் வீட்டில் சந்திரன் இருந்தால் மனைவிக்கு நல்லது என்று கூறவேண்டும்.

**2. சந்திரன் தெசை**

சந்திரன் உச்சமானால் வடிகால் வாரியப்பணி அமையும். நீச்சமானால் தாயார் உடல் உபாதை உண்டாகும். ஆட்சியானால் சுயதொழில், ஏற்றுமதி (எக்ஸ்ப்போர்ட்) இலாபம் உண்டாகும். சந்திரன் மற்றும் சுக்கிர தெசையில் வரும் புத்திகளுக்கு வருடம், மாதம் வருமே தவிர, நாள் கணக்கு வராது. ஏனெனில் சந்திரன் 10 வருடங்கள், சுக்கிரன் 20 வருடங்கள் என முழுமையாக இருப்பதால் நாள் கணக்கு வராது.

**3. செவ்வாய் தெசை**

3, 6, 11 இல் செவ்வாய் இருக்க அந்தத் தெசை நடந்தால், உச்சமாக அந்தத் தெசை நடந்தால், பூமியோகம் உண்டாகும். செல்வம் உண்டு. இரத்த சுத்தி உண்டாகும் என்றும், நீச்சமாய் அந்தத் தெசை நடந்தால், பெண் / ஆண்களால் இடருண்டாகும் என்றும் கூற வேண்டும்.

**4. புதன் தெசை**

புதன் நீச்சமாய் அந்தத் தெசை நடந்தால், வருமான வரித் துறை பயம் உண்டாகும். பல்வலி உண்டாகும். உச்சமானால் கணக்கு தணிக்கையாளர் ஆவார். ஆட்சியானால் நில விற்பனை செய்வார்கள் என்று கூற வேண்டும்.

**5. குரு தெசை**

நீச்ச குரு தெசை மலை உச்சியில் இருந்து கீழே விழ வைக்கும் என்று கூற வேண்டும். கண்டம் உண்டு. உச்சமானால் பைத்தியம் பிடிக்கம். குரு எந்த இராசியிலும் தனித்திருந்தால் கெடுதி. குரு தனித்திராமல் வேறு கிரகங்களுடன் இருந்தாலே நல்லது..

**6. சுக்கிரன் தெசை**

கலைத்துறை மூலம் வருமானம் வரும். சுக்கிரன் நீச்சமானால் வாகன விபத்து உண்டாகும். உச்சமானால் இரண்டாவது திருமணம் நடக்கும்.

**7. சனி தெசை**

சனி உச்சமானால் பொறியியல் வல்லுநர் என்றும், நீச்சமானால் லக்னத்துக்கு ஏற்ப பலன் கூற வேண்டும். பொதுவாய் கும்பம், மகரம் இராசியில் சனியிருக்க, அந்தத் தெசை நடந்தால் பலவழிகளில் உத்தியோக இலாபங்கள் உண்டு.

## 8. இராகு தெசை

இராகு தெசையில் காமாலை போன்ற நோயுண்டாகும். இராகு 6 இல் மறைந்தால் வாகனத்தில் இருந்து தவறி விழுவார். என்று கூறலாம் இராகு கும்பத்தில் இருக்க அந்தத் தெசை நடந்தால் பரிசுகள் விழும். நீச்சமானால் பாம்பு தீண்டும் என்று கூறவேண்டும்.

## 9. கேது தெசை

உணவுக்குப் பஞ்சம் இருக்காது. ஓட்டு வீட்டு வாசல் உண்டாகும் என்று கூறலாம். மேஷத்தில் கேது இருந்து அந்தத் தெசைகள் நடந்தால் பசு, எருமைகள் அழியும். கும்பத்தில் இருந்தால் பொருள் அபிவிருத்தி உண்டு என்றும் சொல்ல வேண்டும். லக்னத்துக்கு 2 இல் இருந்தால் உணவு விஷம் (ஃபுட்பாய்ஸன்) ஆகும் என்றும் கூறலாம்.

## 10. புக்தி பலன்கள்

1. எல்லா தெசைகளிலும் முதல் புக்தி நன்றாய் இருக்கக் கூடாது.
2. எல்லா தெசைகளிலும் புதன், குரு, சுக்கிரன் புக்திகள் நீச்சமானாலும் உச்சமானாலும் நல்ல பலன்களையே நல்கும்.
3. சூரியன், செவ்வாய் நீச்சமானால் நெருப்பு, ஆயுத அபாயம் உண்டாகும். (அதாவது சூரியன், செவ்வாய் புக்திகளில்)
4. சந்திரன், இராகு, கேது புக்திகள் மரண பயம், கள்வர் பயத்தை உண்டாக்கும்.
5. சனிபுக்தி எல்லாத் தெசைகளிலும் நல்லதே செய்யும்.

**கண்டங்கள்**

சூரியன் நீச்சமானால் நெருப்பிலும், சந்திரன் நீச்சமானால் நீரிலும், செவ்வாய் நீச்சமானால் மின்சாரத்திலும், புதன் நீச்சமானால் பேய் பயத்தாலும் கண்டமுண்டாகும். குரு நீச்சமானால் உயரமான இடத்தில் இருந்து விழுவார். சுக்கிரன் நீச்சமானால் தாழ்த்தப்பட்டவரால் இடர், வாகன இடர், பசியால் மரணமுண்டு. சனி நீச்சமானால் உடற்பகுதி (லக்னமானால் தலை, 12 ஆவது வீடு என்றால் கால் உறுப்பு பலன் கூறுக.) துண்டிக்கப்படும்.

லக்கினம் தலையையும் லக்கினத்திலிருந்து 2ஆம் வீடு வாக்கையும், 3 ஆம் வீடு காதையும், 4 ஆம் வீடு நெஞ்சையும், 5 ஆம் வீடு கைகளையும், 6 ஆவது வீடு இடுப்பையும், 7ஆவது வீடு பால்குறிகளையும், 8 ஆவது வீடு வயிறையும், 9 ஆவது வீடு தொடையையும், 10 ஆவது வீடு காலையும் 11 ஆவது வீடு கணுக்காலையும், 12 ஆவது வீடு பாதத்தையும் குறிக்கும். அதன்படி பலன் கூறவும்.

இராகு-கேது சாதாரண தொல்லைகளைத் தருவார். ஆட்சி கிரகமாய் இந்தத் தெசை நடந்தால் யோகபலன் உண்டு. (விளக்கங்கள் பன்னிருபாவ பலன்களில் பார்க்கலாம்.)

* * * * *

## அலகு IV

# பாடம் 13 – சோதிடமும் இறைத்தன்மையும்

உலகம் தோன்றி இதுநாள்வரை படிப்படியாய் முன்னேறி, பல்வேறு துறைகள் பல்கிப் பெருகியதைக் காண்கிறோம். எல்லாத் துறைகளிலும் தெய்வ மறுப்புக் கொள்கை உடையவர் இருக்கலாம். அது அவரவர் விருப்பம். ஆனால், சோதிடத்துறை முழுக்க முழுக்க தெய்வீக சம்பந்தமானது என்று யாவரும் அறிந்ததே. எனவே, ஒரு சோதிடர் இறை நம்பிக்கை உடையவராய் உடல், உள்ளம் சுத்தம் உள்ளவராய் இருப்பதுவே அவருக்கு உண்டான முதற் தகுதி.

தம்மை நாடிவரும் அன்பர்கள் (இவர்கள் வாடிக்கையாளர்கள் அல்லர்.) அனைவருக்கும் உண்மை நிலையை ஜாதகத்தில் உள்ளதை உள்ளவாறு பக்குவமாய் எடுத்தியம்புதலும், சற்று நேரம் சரியில்லாத கால கட்டம் நடக்கும் பட்சத்தில் மென்மையாய் எடுத்துரைக்கும் ஆற்றல் உள்ளவராயும் இருப்பது இரண்டாவது தகுதி.

வரும் அன்பர்கள் எவ்வளவோ பிரச்சினையுடனும் ஜாதகம் பார்க்கும் சோதிடர் எப்படி இருப்பாரோ? என்ற ஆர்வத்துடனும் வரலாம். சோதிடர்களைக் கடவுளாய் நினைத்துத் தங்கள் பிரச்சினைகளைக் கூற வரலாம். அப்போது மௌனப் புன்னகையுடன் அவர்கள் கூறுவதை அவர்கள் முகத்தை நேரே பார்த்து முழுவதும் கேட்டு அறிதல் 3 ஆவது தகுதி.

சோதிடர்கள் ஆசிரியருக்குச் சமமானவர். அவர் எப்போதும் தம்மைப் பிறருடன் வேறுபடுத்திக்காட்ட காவியுடை தரித்திருத்தலும், கைவிரல்களில் மோதிரங்கள் அணிந்திருத்தலும், நெற்றி நிறைய விபூதி, சந்தனம் பூசியிருத்தலும்தவிர்த்து, சாதாரணமாய் மற்றத் தொழில்கள் செய்பவர் போல் எளிய ஆடை அணிந்திருப்பது நான்காவது தகுதி. இவ்விதம் இருப்பதையே ஜாதகம் பார்க்க வருபவர்கள் விரும்புவர். அத்தோடல்லாமல் பயமின்றி சகஜமாய்ப் பேசித் தனது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்வர்.

இறைத்தன்மை வேறு. இறையாண்மை வேறு என்பதை ஒரு சோதிடர் புரிந்திருக்க வேண்டும். இறைத்தன்மை என்பது அனைவரையும் எல்லா இன மதத்தவரையும் ஒன்றுபோல் நடத்துவது. ஏழை, பணக்காரர் என்று வித்தியாசம் பாராமல் ஜாதகம் பார்ப்பது, தனக்களிக்கும் கட்டணங்களுக்கு ஆட்படாமல் இன்முகத்துடன் ஜாதகம் பார்ப்பது. முகத்தில் களைப்பு, சோர்வு, வெறுப்பு காட்டாதிருப்பது ஆகும். இறையாண்மை என்பது நமது தேசத்துக்கு எதிராய் செயல்படாமை. இந்த இரண்டு (இறைத்தன்மை இறையாண்மை) சொற்களின் பொருள் வேறுபாடு அறிந்தும் விருப்பு வெறுப்பின்றி ஜாதகம் பார்ப்பது ஐந்தாவது தகுதி.

மொழி, இனக்கலப்பிற்குப் பின்னர் கல்வி, செல்வச் சூழல் சமமாக அனைவருக்கும் ஆன பட்சத்தில் அந்தனர், பிராமணர், ஆரியர் கலாச்சார வேறுபாடுகளும் திராவிடர்கள் மற்றும் இப்போதுள்ள பிராமணர் அல்லாதவர்களும் ஒன்றுபட்ட கலாசாரமும், முன்பு பரவலாக இருந்த புத்த ஜைனமத சம்பிரதாயங்களை வழிபடுபவர், வழி நிற்பவர்கள் மனமறிந்தும், தற்போது யூதம், கிரேக்கம், இசுலாமியம், கிறித்துவக் கோட்பாடுகள் கல்வி அடிப்படையில் ஒருங்கிணைந்த நிலை அறிந்தும், விருப்பு வெறுப்பின்றி ஜாதகம் பார்ப்பது ஆறாவது தகுதி.

பதினெட்டாம் நூற்றாண்டு வரை இருந்த பேதங்களை எண்ணாமல் ஆரியர் வேறு, பிராமணர்கள் வேறு, வடஇந்தியர், தென்னிந்தியர் வேறுபாடற்றவர் என்ற உண்மையை உணர்ந்திருத்தல் நல்லது.

எப்படி ஒரு இஞ்சினியர் தனக்குரிய பெயருக்கு முன்னாள் ஈ.ஆர். (Er.) .என்றும் ஒரு டாக்டர் தனது பெயருக்கு முன்னால் டி.ஆர். (Dr.) என்றும் போட்டுக்கொள்வது போல், ஒரு சோதிடர் தனது பெயருக்கு முன்னால் ஏ.ஆர். (Ar.)என்று போட்டுக் கொள்ளாதிருப்பது ஏழாவது தகுதி. ஜோதிடத்தில் கரை கண்டவர் யாரும் இல்லை.

தன்னை நாடி வரும் அன்பர்களிடம் இது வேண்டும் அது வேண்டும் என்று எதையும் கேட்காமல், அடுத்த முறை வரும் போது இதை அதை வாங்கி வாருங்கள் என்று கூறாதிருப்பது எட்டாவது தகுதி.

சோதிடர்களில் இருவகை உண்டு. (1) ஜாதகத்தைப் பார்த்த உடனோ, அல்லது ஜாதகம் பார்க்க வரும் அன்பர்கள் முகத்தைப் பார்த்த உடனோ, அவர்கள் எதற்கு வந்திருக்கிறார்கள் என்றறிந்து பலன் கூறுபவர். (2) 2 ஆவது ஒரு டாக்டர் (மருத்துவர்) தன்னை நாடி வருகிறவர்கள் சொல்லும் பிரச்சினைக்கு ஏற்ப மருந்து தருவது போல், ஜாதகம் பார்க்க வருபவர்கள் பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து பலன் கூறுவர். இந்த இரண்டில் முதலாவதாய்ச் சொன்ன சோதிடராய் இருப்பது 9 ஆவது தகுதி.

தன்னை நாடிவருபவர்களை அனாவசியமாய் கௌரவப்படுத்திப் பேசுதல், எழுந்து சென்று வழியனுப்புதல் முதலியவை செய்யாதிருப்பது பத்தாவது தகுதி.

நான் இதைச் சொன்னேன். அது அவருக்கு நடந்துவிட்டது. நான் அதைச் சொன்னேன், அது அவருக்கு நடந்துவிட்டது, இப்போதுதான் எம்.எல்.ஏ. வந்துவிட்டுப் போகிறார். அடுத்த வாரம் டெல்லி போகிறேன் என்று தன் செயல்பாடுகளைக் கூறாதிருத்தலும், வரும் அன்பர்கள் நண்பர்களைப் பற்றிப் பேசாதிருத்தலும், அவர்களைப் பற்றி விசாரிக்காது இருத்தலும் பதினோராவது தகுதி.

நிறைய புராணக் கதைகளைத் தெரிந்து கொண்டு சூழ்நிலைக்கு ஏற்ப அவர்களுக்குக் கதைகள் கூறி ஆறுதல் அளிப்பது 12 ஆவது தகுதி.

யாராவது வரும்போது "நிட்டையில் இருக்கிறேன், இன்று வெள்ளிக்கிழமை ஜாதகம் பார்ப்பதில்லை" என்று கூறாமலும், ஜாதகம் பார்க்க ஆரம்பிக்கும் முன்பு நெடுநேரம் ஆழ்ந்த சிந்தனையிலோ தியானத்திலோ இல்லாது, உடனுக்குடன் ஜாதகம் பார்க்க ஆரம்பிப்பது வருபவர்களுக்கு மன தைரியம் ஆறுதல் தருவதாக இருக்கும் என்பதால் இது 13 ஆவது தகுதி.

ஜாதகம் பார்க்க ஒன்றுக்கு மேற்பட்ட (ஒரே குடும்பத்து ) அன்பர்கள் வரும்போது ஒருவரை மட்டும் பார்த்தபடி பலன் சொல்லாமல், இருவரையும் மாற்றி மாற்றி பார்த்துப் பலன் சொல்வதும், ஒரே நேரத்தில் வெவ்வேறு குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அறையில் அனுமதிக்காமல் இருப்பதும் 14 ஆவது தகுதி.

புகையிலையோ வெற்றிலையோ மென்று கொண்டு ஜாதகம் பார்ப்பதையும், வெகு நேரம் விரல் விட்டு எண்ணுவதையும் தவிர்ப்பது 15 ஆவது தகுதி.

ஜாதகம் பார்க்க வருபவரிடமிருந்து பெறும் அன்பளிப்புத் தொகையை அவர் எதிரிலேயே எண்ணாதிருப்பதும் 16 ஆவது தகுதி.

பழக்கப்பட்டவருடன் உணவு விடுதிக்குச் சென்று பால், காப்பி அருந்துவதோ, ஜாதகம் பார்க்கும் இடத்துக்கு ஹோட்டலில் இருந்து பலகாரங்கள் வரவழைத்து அவர்களுடன் உண்ட வண்ணம் ஜாதகம் பார்ப்பதைத் தவிர்ப்பது 17 ஆவது தகுதி.

கைரேகை, எண் கணிதத்தை விட ஜாதகமே மெய்யானது என்று கூறலும், இந்தக் காரியம் இத்தனை நாளுக்குள் நடக்கவில்லையெள்றால் என் தொழிலையே விட்டு விடுகிறேன் என்று சூளுரைத்துக் கூறுதலையும், யார் இந்த ஜாதகத்தை எழுதியது என்று கேட்டலையும் தவிர்ப்பது 18 ஆவது தகுதி.

நல்ல வேளை இந்தப் பெண்ணுக்கு இதற்கு முன்பு கல்யாணமாகி இருந்தால் விவாகரத்து ஆகியிருக்கும் என்று கூறாதிருத்தலும் 19 ஆவது தகுதி.

இந்த ஜாதகருக்குத் தோஷம் உண்டு, இல்லையென்று வெறுமனே ஜாதக விளக்கத்துடன் சொல்வது 20 ஆவது தகுதி.

நண்பர் அல்லது உறவினர் அல்லது யாருடைய ஜாதகத்தையும் தன்னுடன் வைத்துக் கொள்ளக் கூடாது. இது 21 ஆவது தகுதி.

இந்தத் தகுதிகளைக் கடைப்பிடிப்பது இறையருள் பெற்ற ஜாதகப்பலன் கூறும் சோதிடருக்கே வாய்க்கும்.

ஜாதகம் பார்க்க வருபவர்கள் பெரும்பாலானோர் பரிகாரங்கள் செய்ய விரும்புவதில்லை. எனவே, சோதிடர்கள் யாகம், ஹோமம் செய்ய இவ்வளவு ஆகும், அவ்வளவு ஆகும் என்று கூறாமல், பலன்களை

மட்டும் சொல்லி அவரவர்கள் குலதெய்வத்தை வழிபடச் சொல்லலாம்.

சுற்றுப்புறச்சூழல், மாசுக்கட்டுப்பாட்டுக்கு இணங்க அவரவர் நட்சத்திரங்களுக்கு ஏற்ற மரவகைகள், காய், கனி, செடிவகைகள் நடுவதற்குச் சிபாரிசு செய்யலாம். (எந்த நட்சத்திரத்துக்கு எந்த மரம், காய், கனி, மலர்கள் என்று பின்னர் விளக்கப்படும்.)

ஜாதகம் பார்த்துவிட்டு எழுத்து செல்லும்போது அவர்களுக்குக் கைகுலக்கல் செய்வதோ, தட்டிக் கொடுப்பதோ கூடாது. ஒரு சோதிடர் பிறரைத் தொடுவதால் தனது தெய்வீக சக்தியைக் கொஞ்சம் இழக்கக்கூடும். அதே போல் அவர்கள் வணக்கம் செய்ய (நமஸ்கரிக்க) விரும்பினால் அவர்கள் ஜோதிடரை விட சிறியவரா? என்று அறிந்து அனுமதிக்க வேண்டும். பெரியவர்கள் என்றால் வணக்கம் செய்ய (நமஸ்கரிக்க) அனுமதிக்கக் கூடாது அல்லவா?

பழக்கப்பட்டவராய் இருந்தாலும் அவசியம் அவசரம் ஏற்பட்டாலொழிய சாதாரணமாய்த் தொலைபேசியில் பலன் சொல்லக்கூடாது. யாருடைய தொலைபேசி எண்களையும் கேட்டுவாங்கக் கூடாது.

சோதிடர்கள் கொஞ்சம் பொதுஅறிவு உடையவராய் இருத்தல் வேண்டும். ஜாதகம் பார்த்துக்கொண்டு இருக்கும்போது நடுவில் எழுந்து செல்வதோ போனில் பேசுவதோ கூடாது. சம்பந்தமில்லாமல் திடீரென்று ஆங்கிலத்திலோ பிறமொழியிலோ பேசக் கூடாது.

ஜாதகம் பார்க்கும்போது தலையில் அடித்தக் கொள்வதோ, கைகளை அசைப்பதோ கூடாது. யாரையும் தொடாது பேச வேண்டும். தன்னைப் பற்றிய வயது. வருமானம் முந்தைய அனுபவங்கள் பற்றிப் பேசக்கூடாது.

சோதிடர்கள் பலன் சொல்லும் போது குரு–சனியைப் பார்ப்பதால், சனி செவ்வாயைப் பார்ப்பதால் என்று கூறாமல் பலன்களை மட்டும் கூறவேண்டும். அன்பர்கள் காரணம் கேட்டால் குருபார்வை சனி மற்றும் பிற கிரகப் பார்வையைப் பற்றிப் பேசலாம். ஜாதகம் பார்க்கும்போது பாடல்கள் பாடி சோதிடம் சொல்வதை அவசர உலகத்தினர் விரும்புவதில்லை. அதன் உட்பொருட்களை அறிந்தவரல்லர் என்பதால் பாட்டுப்பாடாமல் பலன்கள் சொல்வது நல்லது.

தொலைதூரத்து ஊர்களுக்குச் சென்று வழிபட வலியுறுத்தாமல், எல்லா அஞ்சல் பெட்டியும் ஒன்றுதான் என்று கூறி, அருகிலுள்ள கோவிலுக்குச் சென்று வழிபடச் சொல்வதே சிறந்த பரிகாரமாகும்.

கோவில்களில் மின்விளக்குகள் வந்துவிட்டதால் கோவிலுக்குச் சென்று விளக்குகள் போட வலியுறுத்த வேண்டாம். வெறும் பிரார்த்தனையே காரியம் நிறைவேற்றித் தரும் என்று கூறலாம்.

பரிகாரங்கள் செய்வதால் முழுப்பிரச்சினையும் தீராது என்றும் சோதிடர்கள் தெய்வத்திடம் பிறருக்காக

வழக்காடும் வக்கீல்களல்ல என்பதையும் உணர்ந்து செயல்பட்டால் புகழ்பெற்ற ஜோதிடராய்த் திகழ்வர் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை. ஒருவருடைய வீட்டிற்குச் சென்று ஜாதகம் பார்ப்பது, திருமண நிகழ்வுகளில் கலந்து கொள்வது இரண்டும் அவசியம் ஏற்பட்டால் தவிர செய்யக் கூடாது. மற்றவரைக் குறை கூறுவதோ கூடாது. எதையும் மிகைப்படுத்தியோ குறைகூறியோ பேசக் கூடாது. அரசியல் தலைவர்கள் பிற பிரமுகர்களுக்குச் சாதகமாய்ப் பேசக் கூடாது.

சோதிடர்கள் முதலில் தன் ஜாதகப் பலன்களையும் குடும்பத்தார்கள் ஜாதகப் பலன்களையும் தெரிந்து கொண்டு அதையொத்த நட்சத்திரக்காரர்கள் வரும்போது அதற்குரிய பலன்களைச் சொல்லலாம். பயன் தரும். மனிதர்களை உற்றுக் கவனித்தலாலும் பல விஷயங்கள் அனுபவத்தில் தெரிந்து கொள்ளலாம். பின்னர் மிகச்சிறந்த சோதிடராய்த் திகழலாம்.

* * * * *

## அலகு V

## பாடம் 14 – பன்னிரு பாவங்கள் – பலன்கள் – 1, 2, 3, 4 வீடுகள்

இதுகாறும் கிரகங்கள் அவற்றின் குணநலன்கள், இயக்கப்பயன்கள், ஜாதகம் கற்கும் முறை மற்றும் பொருத்தம் பார்ப்பது எப்படி என்று பல பயிற்சி பாடங்களைப் பார்த்தோம். இனி பன்னிரு பாவ பலன்களைப் பார்ப்போம்.

ஜாதகம் பார்க்க ஆரம்பிக்கும் போது இராசி, அம்ஸக் கட்டங்களைப் பார்த்து, இக்குழந்தை (ஜாதகர்) இந்த மாதம், இத்தனை மணிக்கு, இந்த வருடம் பிறந்தார் என்று கண்டுபிடிக்கலாம். ஜாதகத்தின் முற்பகுதியைப் பார்க்காமலேயே சோதிடர் இராசி – அம்ஸத்தைப் பார்த்து, குழந்தை இந்த மாதம், இத்தனை மணிக்கு, இந்த வருடம் பிறந்ததா? என்று கேட்க வேண்டும். அவர்கள் ஆம் என்று சொன்ன பின்னர் ஜாதகம் பார்க்கப் புக வேண்டும். சில நேரம் குழந்தை காலை 7 மணிக்குப் பிறந்திருக்கும். வந்தவர் இரவு 7 மணி என்று சொன்னால் முதலில் ஜாதகத்தை ஆராய வேண்டும். சில பேர் வெளிநாட்டுக்குத் தகுந்தாற்போல் ஜாதகம் (பிறந்த நேரம்) எழுதியிருப்பர். அதனைக் கவனிக்க வேண்டும்.

சிசேரியனில் குழந்தை பிறந்திருந்தால் சற்றுப் பலன்கள், ஏன்? முழுமையாகவே மாறிவிடும். குழந்தை சிசேரியனில் பிறந்துள்ளதா என்று விசாரிக்கலாம். ஆனால், இறைத்தன்மையும் அனுபவமும் மிக்க ஜோதிடர் இதனைப் பார்த்தவுடனேயே கண்டுபிடித்துவிடுவார்.

ஜாதகருடைய ஜாதகத்தில் லக்னம் அல்லது இராசி அல்லது சுக்கிரன் உள்ள வீட்டிலிருந்து செவ்வாய் 10 இல் இருந்தால், கண்டிப்பாக அது சிசேரியனில் பிறந்த ஜாதகம் ஆகும். மற்றொரு விஷயம். செவ்வாயை இராகு பார்க்க பிறந்த குழந்தை கொடிசுற்றியும், கேது பார்க்க பிறந்த குழந்தை மாலை போட்டும் பிறந்திருக்கும்.

இனி பன்னிரு பாவங்களைப் பற்றிப் பார்ப்போம்.

லக்னம் (முதல் வீடு) என்பது ஜாதகரின் வாழ்வாதாரத்தையும், 2 ஆம் வீடு குடும்ப நிலவரத்தையும்,

3 ஆம் வீடு சகோதரத்தையும், 4 ஆம் வீடு தாயாரையும்,

5 ஆம் வீடு வீடு, மனை, கல்வியையும், 6 ஆம் வீடு கடன் உபாதை– நோயையும்,

7 ஆம் வீடு மண வாழ்வையும் அதன் நிலையையும், 8 ஆம் வீடு ஆயுள், மரண நிலையயையும்,

9 ஆம் வீடு தந்தை நிலையையும், 10 ஆம் வீடு தொழிலையும்,

11 ஆம் வீடு இலாபத்தையும், 12 ஆம் வீடு விரயம், படுக்கை சுகத்தையும் காட்டும்.

அந்தந்தக் கிரகங்களைக் கொண்டு பலன் கூற வேண்டும்.

ஜாதகத்தில் ஒரு வயது முதல்30 வயது வரை10 –11– ஆம் அதிபதி தெசைகள் நடப்பது முன்யோக ஜாதகம். 30 – 60 வயது வரை நடப்பது பின் யோக ஜாதகம்.

இராகு – கேதுகளுக்கு இடைப்பட்ட தெசைகள் (இராகு–குரு–சனி–புதன்) சுமாரானவை. அதேபோல் கேது – சுக்கிரன்– சூரியன்– சந்திரன்– செவ்வாய்–இராகு தெசை நடப்பின் வாழ்வு முழுவதும் இடருண்டு.

## லக்னம், 1 ஆம் வீடு : வாழ்வு.

முதலாம் வீடு லக்னம். லக்னத்தையும் சந்திரன் உள்ள வீட்டையும் வைத்துப் பல வகைகளில் பலன் கூறலாம். பிறந்த நேரம் லக்னத்தையும், சந்திரன் நட்சத்திர அடிப்படையில் உள்ள வீடு. இராசியையும் குறிக்கும்.

லக்னமும் இராசியும், அதாவது லக்னத்திலேயே சந்திரன் இருந்தால் நீண்ட ஆயுள் உண்டு. லக்னத்திலிருந்து சந்திரன் 2, 5, 7, 9, 10, 11 ஆகிய வீடுகளில் இருந்தால், குடும்பம், புத்திரம், மணவாழ்வு, பாக்கியம், தொழில், இலாபங்கள் பெருக அமோகமாய் இருப்பர்

லக்னத்திலுருந்து சந்திரன் 6, 8, 12 இல் இருந்தால் 60 % நன்மைகளே நடக்கும்.

லக்னத்திலிருந்து சந்திரன் 3, 4 வீடுகளில் இருந்தால் தாயார் சகோதர வழி ஆதரவு உண்டு. இதை முதலில் கவனித்து விட்டு பலன்கள் கூற வேண்டும்.

லக்னத்தில் சந்திரன் ஆட்சியுற்றால் நீண்ட ஆயுளுடன் இருப்பார். எப்படி ஒரு கடிகாரத்தில் மணி 12 ஆனதும் சின்னமுள் – பெரிய முள் 12 எண்கள் கடந்து சேருகிறதோ அப்படி 120, 100, 80 வயதுகள் வாழ்வார். அதே சந்திரன் லக்னத்தில் நீச்சமுற்றால் (விருச்சிகம் லக்கினம்– விருச்சிகம் இராசி) மன பயம், பைத்திய மனநிலை, மறதி உண்டாகும். லக்னத்தில் சந்திரன் ஆட்சியுறுவது கடக லக்கினம்–கடக இராசியில் மட்டுமே. அதே சந்திரன் லக்னத்தில் உச்சமானால் (ரிஷப லக்கினம்ரிஷப இராசி) அழகராவார். அனைவருக்கும் தலைவர் ஆவார். எனவே கடகம், விருச்சிகம், ரிஷபம் ஆகிய லக்னம் – இராசியாய் கொண்டவர்கள் பாக்கியவான்கள்.

மற்றவர்களுக்கு அம்சத்தில் லக்னம் – இராசி ஒரே வீட்டில் இருந்தால் மேற்சொன்ன நீண்ட ஆயுள் பலமுண்டு.

பொதுவாய் எல்லா லக்னாதிபதிகளும் லக்னத்தில் ஆட்சி பெறுவர்.

**1. மேஷ லக்னம்:**

மேஷ லக்னத்திற்கு லக்னாதிபதி செவ்வாய். எனவே இவர் வாழ்வு மின்னியல், வேதியியல் (எலக்ட்ரிக்கல், கெமிக்கல்), வெடிமருந்துகள் மருத்துவயியல் (மெடிக்கல்) சம்பந்தமாய் அமையும்.

லக்னத்தில் செவ்வாய் இருந்தால், தலைமை மின்பொறியாளர். இராணுவ அதிகாரி (டிஃபன்ஸ் ஆபிஸர்), சபாநாயகர் போன்ற பதவி வகிப்பார். சனி பார்த்தால், இராணுவம். குரு பார்த்தால் பேராசிரியர். புதன் பார்த்தால் சபாநாயகர் ஆவார். புதன் துலாம் இராசியில் இருக்க, செவ்வாய் மேஷத்தில் இருந்தால் சபாநாயகர்.

அந்தச் செவ்வாய் 8 இல் விருச்சிகத்தில் இருந்தால் வெங்காயம், பீட்ரூட், தக்காளி பயிர் செய்வார். தீவில் வசிப்பார். வங்கி (பேங்க்) ஆதாயம் உண்டு.

மேஷ லக்னத்தில் அசுபதி நட்சத்திரக்காரரானால் ஓவியராவார்.

செவ்வாய் 4 இல் கடகத்தில் நீச்சமானால் கண், நெஞ்சு ரோகம் உண்டாகும். வாகன விபத்து உண்டாகும். கடலோர தெய்வங்களான திருச்செந்தூர் முருகன், வேளாங்கன்னி மாதா, நாகூர் ஆண்டவர்.அருள் உண்டாகும்.

செவ்வாய் 12 இல் மறைந்தால் கோவிலில் திருமணம் ஆகும்.

செவ்வாய் மேஷ லக்னத்துக்கு 5, 10, 11 இல் இருந்தால் நெய்வேலி, பாரத மிகுமின் தொழிலகம் (பெல்) போன்ற பெரு நிறுவனங்களில் வேலை உண்டு.

2 இல் செவ்வாய் இருந்தால் புகையிலை போடுவார். சந்திரன் இருந்தால் குடிப்பழக்கம் இருக்கும்.

3, 4 ஆம் வீடுகளில் செவ்வாய் இருந்தால், சகோதரர், தாயார் பலம் கூடும்.

6, 7, 8 இல் செவ்வாய் இருந்தால் மணவாழ்வில் சிக்கல், போராட்டத்தில் முடியும்.

9 இல் செவ்வாய் வீட்டில் இருந்தால் வேதியியல் பேராசிரியர். மலையாளம் மொழி அறிஞர். உருக்காலை (இரும்பு) அதிகாரியாவார்.

இவை யாவும் செவ்வாய் தெசையில் நல்லனவாய் நடக்கும். செவ்வாய் தெசை வராதவர்களுக்குச் (புனர்பூசம், விசாகம், திருவாதிரை, ஸ்வாதி, சதயம் போன்றவர்கள்) செவ்வாய் புத்தியில் அதற்குண்டான பலனுண்டு.

இவர்கள் வாழ்வு பயிர், கால் நடை வளர்ப்பு, சீனத்தொடர்பு முதலியவற்றுடன் இயங்கும். மீனத்தில் சுக்கிரன் இருந்தால் அமெரிக்கா (யு.எஸ்.) தொடர்பும், கன்னியில் புதன் இருந்தால் ஆஸ்திரேலியாத் தொடர்பும் பெறுவர்.

### 1.1. மேஷ லக்னமும் அசுபதி, மகம், மூலம் நட்சத்திரத்தவரும்

இவர்களுக்குக் **கேது,** சுக்கிரன், சூரியன், சந்திரன், செவ்வாய், இராகு, குரு என்ற வரிசையில் தெசைகள் அமையும். கேது–இராகுவுக்கு இடைப்பட்ட காலங்களைவிட குருதெசை நலம் தரும்.

இவர்கள் வாழ்வு கேது லக்னத்தில் இருந்தால் வெற்றிகரமாயும், 2 இல் இருந்தால் நஞ்சு உணவு (ஃபுட்பாய்ஸன்) மற்றும் மருந்துண்பதால் இடரும், 3 இல் இருந்தால் கல்வி மேன்மையும், 4, 8 இல் இருந்தால் மதியூகமும் வயிற்றுவலியும், சனி 3 ஆம் பார்வை பார்த்தால் மரணமும் உண்டாகும்.

5, 7 இல் கேது இருந்தால் தடைபட்ட திருமணம் வீட்டில் நடக்கம். 6, 12 இல் இருந்தால் லட்சுமிகரமுண்டு. மறுபிறப்பின்மை உண்டு. 7, 9 இல் இருந்தால் உறவினர் பகை உண்டு. 10–11 இல் இருந்தால் மாமாவழி இலாபமுண்டு.

அதே போல் அடுத்த தெசை **சுக்கிர தெசை**, குடும்ப–களத்திராதிபதி தெசை. இது சுக்கிரன் லக்கினத்தில் இருந்தால் தியானம் செய்வார். தன்னை விட வயது, தகுதி, அறிவில் மேம்பட்டவரை மணப்பார். 3. 4, 6 ஆம் வீடுகளில் இருந்தால் சுக்கிர தெசை முழுவதும் பயணத்தில் கழியும்.

2, 5, 7 இல் சுக்கிரன் இருந்தால் மாமா வீட்டில் பணிவிடை செய்வார். தாய் மாமன் மகளை மணப்பார். 8, 12 இல் இருந்தால் அதிருப்தி வருமானம். இலங்கைத் தொடர்பால் நலமுண்டு. 9, 10, 11 வீடுகளில் (10) செல்வாக்கு, செல்வம், பேரெழில் ஆகியன உண்டு. பால்ய சுக்கிர தோஷம் கிடையாது.

அடுத்து 3 ஆவது தெசை **சூரியன் தெசை**. புத்திராதிபதி. நடக்கையில் இலட்சம் புரளும். 1, 5, 7–இல் இருந்தால் தாமத புத்திர இலாபம், புத்திரர் பிரிவு (வெளிநாட்டு வாசம்) உண்டு. 2, 4, 9 இல் இருந்தால் குடும்ப சுகம், தாயார் சுகமுண்டு. குரங்கு, பசுவால் இடருண்டு. புகை பிடிக்கும் பழக்கம் உண்டாகும். 6, 8, 12 இல் இருப்பது பலவகைக் கடனை உண்டாக்கும். 9, 10, 11 வீடுகள் வெற்றி உண்டாகும். பொதுவாய் எந்தத் தெசாநாதனும் 5, 10, 11 வீடுகளில் நல்லதே செய்வர். 9 ஆம் வீட்டில் குரு, புதன் இருந்தால் சற்று பலன் குறைந்து காணப்படும். 3 இல் சூரியன் இருக்க அந்தத் தெசை நடக்கும்போது கொரியா தொடர்பு உண்டு. சர்க்கரை ஆலை நடத்துவார்.

அடுத்து **சந்திரன் தெசை**. 12 வீடுகளில் சந்திரன் எங்கு இருந்தாலும் பத்தாண்டுகளுக்கு நலம் தரும்.

செவ்வாய் லக்னாதிபதி என்பதால் **செவ்வாய்தெசை** முழுவதும் நலம்தரும். (ஒருவருக்கு லக்கினாதிபதி தெசை நடக்கும்போது 6, 8, 12இல் மறைவு தெசை புக்தி நல்ல பலன் தரும்.)

**இராகுதெசை**யில் இராகு 6 இல் மறைந்திருந்தால் விபத்தில் பல்லோரெதிரில் கார் வாகனம் ஏறி கை, கால்கள் உடையும். புடலங்காய் உண்பதைத் தவிர்த்தால் இராகுதெசை நலம் தரும்.

**குருதெசையில்** 1 இல் குரு இருந்தால் மனபயம் வரும். 2, 8, 12 இல் இருந்தால் உயரமான இடத்தில் அபாயம். 3, 5, 7 இல் இருந்தால் மணவாழ்வு இடர். 4, 6, 9 இல் இருந்தால் பொருள் வரவு உண்டு. இதுவே மேஷ லக்னம், அசுபதி, மகம், மூலம் நட்சத்திரத்தார்களின் வாழ்வு வசதி ஆகும்.

இதே பலன்களே பரணி, பூரம், பூராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கும் அமையும்.

மேஷம் இராசி கார்த்திகை, சிம்மம் இராசி உத்திரம், தனுர் இராசி உத்திராடத்தில் பிறந்தவர்களுக்கும் இதே பலன்கள்தாம் அமையும்.

அடுத்து **சனி தெசை**. பரணி நட்சத்திரத்துக்குச் சனி தெசை காலத்தில் சனி மேஷத்தில் இருந்தால் தலையில் அடிபடும். 2 இல் இருந்தால் வாகன இலாபமுண்டு. 3, 4, 5, 6 இல் இருந்தால் பணவரவும், 7, 8, 9 இல் இருந்தால் பணமுடையும், 10, 11 இல் இருந்தால் மேற்குதிசை இலாபமடையும், கண்ணன் என்பவரால் நலமும் உண்டாகும். 12 இல் சனி இருந்தால் 4 வீடுகள் மாற நேரும்.

அடுத்து கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குக் குரு+சனி தெசையில் குழந்தைகளால் மேன்மை உண்டு.

இதில் ஒரு விஷயம். மேஷம் லக்னம் (மேஷம், சிம்மம், தனுர் இராசிக்கு) அசுபதி, பரணி, கார்த்திகை, பரணி, பூரம், பூராடத்துக்கு மேற்கண்டவாறு வாழ்வு அமையும். பரணி நட்சத்திரக்காரர் கொசுவலை செய்வார். இரசிகர் மன்றம் அமைப்பார். கார்த்திகை நட்சத்திரக்காரர்கள் கணவர்/மனைவி உத்தியோகரீதியாய் அடிக்கடி வீடு மாறுவர்.

### 1.2. மேஷ லக்னமும் ரிஷப இராசியும் : கார்த்திகை, உத்திரம், உத்திராடமும் – ரோகிணி, ஹஸ்தம், திருவோணமும் – மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டமும் கன்னி மகரம்:

2 இல் சந்திரன் உச்சமாவதால் மணவாழ்வில் சிறுசலனமுண்டாகும்.

இதில் கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் **சூரியன்,** சந்திரன், செவ்வாய், இராகு, குரு, சனி, புதன் என்ற வரிசையில் தெசைகள் அமையும்.

ரோகிணி, ஹஸ்தம், திருவோணம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் **சந்திரன்,** செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது என்ற வரிசையில் தெசைகள் அமையும்.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் **செவ்வாய்,** இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன் என்ற வரிசையில் தெசைகள் அமையும்.

சந்திரன் முதல் சனி தெசை வரை மேற்சொன்னபடியே மேஷம் லக்கினத்துக்கு நடக்கும்.

அதன் பின் **புதன் தெசை**. புதன் மேஷத்தில் இருந்தால் மன பயம். 2 இல் இருந்தால் பெருமாள் கோவில் பக்கம் வீடு அமையும். 3, 4, 5, 6–இல் புதன் இருந்தால் சகோதரம், தாயார் வழிக் கடன் அடையும். சிங்கப்பூர் வாய்ப்பு வரும். 7 இல் இருந்தால் நர்ஸ், விதவைகளால் இடருண்டு. புதன் தெசையில் ஆண்மை/ பெண்மை சக்தி குறையும். 8, 9, 10, 11 இல் இருந்தால் பணபலம். பால், பேப்பர், முத்து, உப்பு, பருத்தி (காட்டன்) போன்ற பொருள் இலாபமுண்டு. 12 இல் இருந்தால் அலாஸ்கா தொடர்பு உண்டு. ஹேமா என்பவரால் நலம். மேஷ லக்கினத்துக்கு 12 இல் புதன் நீச்சமாவதால் சகோதரியால் அந்தத் தெசையில் இடருண்டு. லக்னாதிபதி நீச்சமானால் தாழ்வு மனப்பான்மை உண்டாகும்.

## 1.3. மேஷ லக்னமும் மிதுன இராசியும் துலாம் மற்றும் கும்ப இராசியும்

மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம் – மிதுனம் இராசி; சித்திரை, சுவாதி, விசாகம் – துலாம் இராசி; அவிட்டம், சதயம், பூரட்டாதி – கும்பம் இராசி:

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குச் செவ்வாய், இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன் தெசை என்ற வரிசையில் தெசைகள் வரும். திருவாதிரை, ஸ்வாதி, சதயம் நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்கு இராகு, குரு, சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் தெசை என்ற வரிசையில் தெசைகள் வரும். புனர்பூசம், விசாகம், பூரட்டாதி நட்சத்திரத்தில் பிறந்தவர்களுக்குக் :குரு, சனி, புதன், கேது, சுக்கிரன், சூரியன், சந்திரன் என்ற வரிசையில் தெசைகள் வரும். மேற்கண்டபடி வாழ்வு அமையும்.

இதேபோல் ரிஷபம் முதல் மீனம் வரை உள்ள எல்லா இராசிகளிலும் 27 நட்சத்திரங்களையும் கிரகங்களையும் கொண்டு பலன் சொல்ல வேண்டும்.

ரிஷப லக்னக்காரர்கள் மருத்துவர், டெக்ஸ்டைல் மேலாளராய் வாழ்வைத் துவங்குவர். எல்லா லக்னக்காரருக்கும் கடகம், விருச்சிகம், மீனம் லக்னத்தில் சந்திரன் அமைந்தால் வெளிநாட்டுத் தொடர்பு உண்டாகும்.

மிதுன லக்னக்கரர்கள் ஆடிட்டர்வாழ்வு. கடகம் லக்னக்காரர்கள் தொழிலாளர் நல அதிகாரி, ஆசிரியர். சிம்மம் லக்னக்காரர்கள் கலெக்டர், குடியரசுத் தலைவர், அலுவலக ஊழியர். கன்னி லக்னக்காரர்கள் சாட்டர்டு அக்கவுண்டன்ட். துலாம் லக்னக்காரர்கள் ஷிப்பிங், ரியல் எஸ்டேட், வக்கீல்கள் என்று வாழ்வு முறை கொள்வர். விருச்சிகம், தனுசு, மகரம் லக்னத்தார் வெளியுறவுத் துறையிலும், கும்பம் லக்னத்தார் சிமெண்ட், கன்ஸ்யூமர் புராடக்ட் தொழிலிலும், மீனம் லக்னக்காரர்கள் வாகனம் ஓட்டுநராயும் வாழ்வு பெறுவர். இதைக்கொண்டு பலன் கூறுதல் நலம்.

OOOOO

## 2 ஆம் பாவம் – குடும்பம்

பன்னிரண்டு பாவங்களில் எதற்குப் பலன் சொன்னாலும் அந்தக் கிரகம் உச்சம், நீச்சம், வர்கோத்தமம், ஆட்சி நிலையைக் கொண்டே பலன் சொல்ல வேண்டும். எந்த அதிபதி ஆட்சி, உச்சம், வர்கோத்தமமாகிறதோ அவை நல்ல பலனைத்தரும். நீச்சம் பகைவீட்டில் இருந்தால் சுமாரான பலனைத் தரும். இனி ஜாதகத்தில் 2 ஆம் வீடு, அதன் அமைப்புப் பற்றிப் பார்ப்போம்.

**1. மேஷ லக்னத்துக்கு 2 ஆம் அதிபதி சுக்கிரன்**

இவர் மேஷத்தில் இருந்தால் அழகராய் இருப்பார். மூன்றாவது மாடியில் குடியிருப்பார். 2 இல் இருந்தால் தனி வீட்டிலும், 3 இல் இருந்தால் சகோதரர் வீட்டிலும், 4 இல் இருந்தால் தாயாருடைய வீட்டிலும், 5 இல் இருந்தால் வாடகை வீட்டிலும் இருப்பார். (சுக்கிரன் 6 இல் இருந்தால் தாழ்த்தப்பட்ட மக்களுடன் வசிப்பார்.) அக்கம்பக்கம் சண்டை வரும். 7 இல் இருந்தால் மனைவி வீட்டிலும் இருப்பார். 8 இல் இருந்தால் வீடு போக்கியத்தில் (ஒத்தியில்) இருக்கும். 9 இல் இருந்தால் தந்தை வீட்டிலும், 10 இல் இருந்தால் அப்பார்ட்மெண்ட் கட்டி வாடகை வசூலித்தும் இருப்பார். 10, 11 இல் இருந்தால் கோவில் பக்கம் குடி இருப்பார். 12 இல் இருந்தால் வீடு நிலைக்காது. தனுசில் இருந்தால் அக்ரகாரத்தில் இருப்பார்.

இப்படியே ரிஷப லக்னத்துக்கு 2 ஆம் அதிபதி புதன். அதன் பலன்கள் என்று கூற வேண்டும்.

## 2. ரிஷப லக்னம் 2 ஆம் அதிபதி புதன்

ரிஷப லக்னத்தில் (1 இல்) புதன் இருந்தால் பளிங்கு வீட்டில் குடியிருப்பார். 2 இல் இருந்தால் க்வார்ட்டர்ஸில் குடியிருப்பார். கடகத்தில் (3 இல்) இருந்தால் கடலோர ஊர்களில் குடியிருப்பார். 4 இல் இருந்தால் இரயில்வே நிலையம் (ஸ்டேஷன்) அருகில் குடியிருப்பார். 5 இல் இருந்தால் பெருமாள் கோவில் பக்கம் வீடு அமையும். துலாத்தில் (6 இல்) இருந்தால் மாடியில் தொழில் செய்வார்; கீழே குடியிருப்பார். 7 இல் புதன் இருந்தால் மாமிசக் கடையருகில் குடியிருப்பார். 8 இல் புதன் இருந்தால் ஹோட்டல் உள்ள இடத்தில் குடியிருப்பார் 9, 10, 11 இல் புதன் இருந்தால் தனி வீடு அமையும். 12 இல் புதன் இருந்தால் தாழ்வான இடம், மேலே ரோடு அல்லது ஆஸ்பத்திரியருகே குடியிருப்பார்.

## 3. மிதுன லக்னம்: இரண்டாம் அதிபதி சந்திரன்

லக்கினம் மற்றும் கடகம், விருச்சிகம், மீனத்தில் சந்திரன் இருந்தால் தொழில் உறவுடன் நீர்நிலை அருகே குடியிருப்பார். 3, 4, 5 இல் இருந்தால் கூட்டுக் குடும்பம். 6, 8, 12 இல் இருந்தால் குடும்பத்தில் இவருக்கு மதிப்பு இராது. 7, 8, 9 இல் இருந்தால் பஜனை மடத்தருகே வீடு அமையும். 10, 11 ஆம் வீடுகளில் சந்திரன் இருந்தால் காற்றோட்டமுள்ள வீடு அமையும். 12 இல் இருந்தால் வீடு சுமாரானது.

## 4. கடக லக்னம்: குடும்பாதிபதி சூரியன்

லக்னத்தில் சூரியன் இருந்தால் பாய்லர் தொழிற்சாலை அருகே வீடு அமையும். 2 இல் சூரியன் இருந்தால் சொந்தவீடு அமையும். 3 இல் சூரியன் கார்னர் வீடு அமையும். 4 இல் சூரியன் வீடு ஏலத்தில் போகும். 5 இல் சூரியன் கோர்ட்அருகே வீடு அமையும். 6, 8, 12 இல் அமைந்தால் அந்தந்தத் தெசா புக்திகளில் பெரும் மாறுதல் உண்டு. 9, 10, 11 இல் குடும்பாதிபதி இருக்க சுக பலன் உண்டு. 7, 8 இல் சூரியன் இருக்க நோய் தாக்கும். வீடு இராசி இருக்காது.

## 5. சிம்ம லக்னம்: குடும்பாதிபதி புதன்

சிம்மத்தில் புதன் இருக்க மலையாளிகள் உள்ள இடத்தில் வீடு அமையும். கன்னியில் இருந்தால் இரட்டைக் கதவுள்ள வீட்டில் குடியிருப்பார். துலாத்தில் இருந்தால் சிற்றப்பா வீட்டில் இருப்பார். 4 இல் இருந்தால் காளியம்மன் கோவில் அருகிலும், 5 இல் இருந்தால் தேவ மாதா கோவில் அருகேயும் வீடு அமையும். 6 இல் இருந்தால் ஒவ்வொரு தெசையிலும் புதன் புக்தியில் வீடு மாறும். ஒவ்வொரு வீட்டிலும் 20, 16, 15 வருடங்கள் குடியிருப்பார். கடைசி வரை சொந்த வீடு இருக்காது. 7, 8, 9 ஆம் வீடுகளில் புதன்

இருந்தால் சுமாரான பலன்களே உண்டு. 1, 11 ஆம் வீடுகளில் புதன் இருக்க கடைகளின் மேல்தளத்தில் குடியிருப்பார். 12 இல் புதன் இருக்க கடனில் வீடு முழுகும்.

**6. கன்னி லக்னம்: குடும்பாதிபதி சுக்கிரன்**

லக்னத்தில் சுக்கிரன் இருக்க போலிஸ்காரர் வீட்டருகே வீடு அமையும். துலாத்தில் சுக்கிரன் இருக்க பிள்ளைமார் இனமக்கள் உள்ள இடத்தில் வீடு அமையும். விருச்சிகத்தில் சுக்கிரன் இருக்க மண்பாண்டம் செய்பவர் இடம், செம்படவர் வீடு அமையும். தனுசுவில் சுக்கிரன் இருக்க பேருந்து நிலையம் (பஸ்டாண்ட்) அருகில் வீடு அமையும். மகரம், கும்பம், மீனம் இராசியில் 5, 6, 7 வீடுகளில் சுக்கிரன் இருக்க மலை – குளிர் பிரதேச வீடு அமையும். மேஷம், ரிஷபம், மிதுனத்தில் சுக்கிரன் இருந்தால் மாநகராட்சி, ஆர்.டி.ஓ அலுவலகம் பக்கம் வீடு அமையும். கடகம், சிம்மம் லக்னத்தில் சுக்கிரன் இருக்க வீண்செலவுகளே வரும்.

7. இதே போல் துலா லக்னத்துக்குக் குடும்பாதிபதி செவ்வாய் எங்கு இருந்தாலும் சகோதர சகோதரிகளின் வயிற்றெரிச்சலுடன் வீடு அமையும்.

8. விருச்சிக லக்னத்துக்குப் புறநகர் பகுதியில் வீடு அமையும்.

9. தனுசு லக்கினத்திற்குப் புற நகர் பகுதியிலும் வீடு அமையும்.

10, 11. மகரம், கும்ப லக்னத்துக்கு அப்பார்ட்மெண்ட்களிலும் ரெட்டாக்ஸைடு உள்ள வீடுகளாகவும் அமையும்.

12. மீன லக்னத்துக்குக் கோவில் பக்கம் வீடு அமையும்.

இதைக் கொண்டு ஜாதகருடைய வீட்டு அமைப்பு, குடும்பம் பற்றிக் கூறலாம்.

மேஷம், கன்னி லக்னக்காரருக்கு செங்கல் சூளை தொழில் மூலம் குடும்பவாழ்வு சுகமுறும்.

ரிஷபம், துலாக்காரர்களுக்குக் கல்வி – வணிகவியல் கணக்கு மூலம் வருமானமுண்டாகி குடும்பம் அமையும்.

லக்கினத்துக்கு 2 ஆம் வீட்டில் 3 கிரகங்கள் இருந்தால் கல்யாண மண்டபம் அல்லது தியேட்டர் உள்ள இடத்தில் வீடு அமையும்.

OOOOO

# பாவம் 3 – சகோதரம்

சகோதரகாரகன் செவ்வாய். இவர் உச்சமானால் சகோர சகோதரிகள் அன்பு பெருகும். நீச்சமானால் சகோதர சகோதரிகள் பகை உண்டு. ஆட்சியானாலோ வர்கோத்தமமானாலோ கூட்டுக் குடும்பம் உண்டு. இதை வைத்தே 2 ஆம் ஸ்தானம் (குடும்ப ஸ்தானம்) நிர்ணயம் செய்யப்படுகிறது.

மேஷம் மற்றும் விருச்சிக லக்னத்திற்குச் செவ்வாய் சகோதரகாரகன் மற்றும் புதன், சனி சகோதராதிபதிகள். ரிஷப லக்னத்துக்குச் சகோதராதிபதி சந்திரன். மிதுன லக்னத்துக்குச் சூரியன் கடகத்துக்குப் புதன். சிம்மம், மீனத்துக்குச் சுக்கிரன். துலாம், மகரத்திற்குக் குரு. தனுசுக்குச் சனி, கும்பத்துக்குச் செவ்வாய். சகோதரகாரகனே சகோதராதிபதியாகும். கும்பம், கன்யா இராசிகளுக்கு உடன் பிறந்தவரால் நலமிருக்காது.

சகோதராதிபதிகள் நீச்சமானால் சகோதரர் மூலம் பகை உண்டு. உச்சமானால் சகோதரர் இரு மணம் புரிவார். வர்கோத்தமமானால் நல்ல பலன் உண்டு.

சகோதராதிபதி லக்னத்திற்கு வந்தால், (எந்த லக்னமானாலும் ஒரே பலன்தான்.) சகோதர சகோதரிக்கு துர்மரணமுண்டாகும். சோடா கம்பெனிக்காரர் மூலம் தொல்லை உண்டாகும். சகோதராதிபதி லக்னத்துக்கு 2 இல் வந்தால் சகோதர சகோதரியுடன் வாக்குவாதம் உண்டு. சகோதராதிபதி 3, 4, 5 இல் இருப்பதும் 10, 11 இல் இருப்பதுமே சாலச்சிறப்பு. 6, 8, 12 இல் சகோதராதிபதிகள் இருந்தால் பகை, நோய், தொழிற்பிரிவு உண்டாகும். 7 இல் சகோதராதிபதி இருந்தால் சகோதரியிடம் சகோதரன் தவறாய் நடந்து கொள்வான். 8 இல் சகோதராதிபதி இருந்தால் சகோதரனுக்குச் சிறைவாசமுண்டு.

சகோதரகாரகனும் சகோதராபதியும் சேர்ந்தால் பிரைவேட் லிமிடெட் கம்பெனியில் & கோ ஆரம்பிப்பார். செவ்வாயுடனோ சூரியன் சேரின் கணினிஅலுவலர். புதன், குரு சேரின் மனித வள மேம்பாட்டு அதிகாரி. செவ்வாய், சனி சேரின் சிறை அதிகாரியாய் சகோதரர் இருப்பார். சுக்கிரன், செவ்வாய் சேரின் விவசாயி. இராகு சேரின் சினிமா, கேமரா, ஓவியத்தொழில் சகோதரர் செய்வார். கேது சேரின் மருத்துவராவார்.

3 ஆம் அதிபதி லக்னத்திலிருந்து உள்ள வீடு வரை எண்ணிவருவதே சகோதர – சகோதரிகளின் எண்ணிக்கை, தந்தையின் அண்ணன், தம்பி குழந்தைகளையும் கணக்கில் எடுத்துக் கொள்வது முறை.

OOOOO

# பாவம் 4 – மாத்துர்ஸ்தானம் (தாயார்)

உலகத்தில் முதன்மையானதும் குழந்தை பிறந்தும் உச்சரிக்கும் முதல் பேச்சும் அம்மா. உதட்டோடு உதடு ஒட்டுகின்ற அம்மா, அப்பா போன்ற வார்த்தைகள் புனிதமானவை. உலகில் 4 நீதிமன்றங்கள் உள்ளன. அதில் முதன்மையானது;தாயின் இதயம். 2 ஆவது மனசாட்சி. 3 ஆவது மக்கள் நீதிமன்றம். 4 ஆவது மனைவியின் மனது. எப்படிப்பட்ட தப்பைச் செய்தாலும் மன்னிக்கும் நீதிமன்றம் தாயின் இதயம். தப்பை மன்னிக்கவே மன்னிக்காத நீதிமன்றம் நம் மனசாட்சி. தவறுக்குத் தண்டனை தருவது மக்கள் நீதிமன்றம். மன்னிப்புக்கேட்டால் மன்னிக்கும் நீதிமன்றம் மனைவியின் இதயம். இதில் முதன்மையானது தாயின் இதயம்.

ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்துக்கு 4 ஆம் வீடு தாயாருடைய ஸ்தானத்தைக் குறிக்கும். அனைவருக்கும் மாத்துர்ஸ்தானதிபதிகள் வெவ்வேறாய் இருந்தாலும் மாத்தூர்காரகன் சந்திரன் ஆவான்.

1. மேஷ லக்னத்துக்குச் சந்திரனே மாத்துர்காரகனாகவும் மாத்துர்ஸ்தானாபதியும் ஆவார்.

2. ரிஷப லக்னக்காரருக்குச் சூரியன் மாத்துர்ஸ்தானாதிபதி.

3. மிதுனம், மீன லக்னக்காரருக்குப் புதன் மாத்துர்ஸ்தானாபதி.

4. கடகம், கும்ப லக்னக்காரருக்குச் சுக்கிரன் மாத்துர்ஸ்னாதிபதி.

5. சிம்மம், மகர லக்னக்காரருக்குச் செவ்வாய் மாத்துர்ஸ்தானாதிபதி.

6. கன்னி, தனுசு லக்னக்காரருக்குக் குரு மாத்துர்ஸ்தானாதிபதி.

7. துலாம், விருச்சிக லக்னக்காரருக்குச் சனி மாத்துர்ஸ்தானாதிபதி.

இதில் சிம்ம லக்னக்காரருக்குச் செவ்வாயே மாத்துர், பித்துர்ஸ்தானாதிபதியாவதால் பெற்றோர் வாழ்வு சுகமுறும். அதே போல் கும்ப லக்கினக்காரருக்கு மாத்தூர், பித்தூர் ஸ்தானாதிபதி சுக்கிரன் என்பதால் பெற்றோர் சுகம் பெறுவர்.

தனுசு லக்னக்காரருக்கு லக்கினாதிபதியே மாத்துர்ஸ்தானாதிபதியாவதால் நலமுண்டு. மேஷ லக்னக்காரருக்கு மாத்துர்காரகனான சந்திரனே மாத்துர்ஸ்தானாதிபதியாய் இருப்பது நல்லது. இதனால் சிம்மம், தனுசு, மேஷ லக்னக்காரர்களும் கடக லக்னக்காரர்களும் பெற்றோருக்குச் சாதகமாய் இருப்பர் என்பதில் ஐயமில்லை

சூரியன், சந்திரன், செவ்வாய் இவை ஒன்றுக்கொன்று நட்பு கிரகங்கள் ஆவதால் நல்ல பலன்களே நிகழும். மாத்துர்ஸ்தானாதிபதி – மாத்துர்காரகத்தால் பாதிப்பு (அதாவது ஆதிபத்திய – காரகத்துவ தோஷம்) உண்டாகாது.

மாத்துர்காரகன் சந்திரன் ஆட்சியானால் தாயாருக்கு நீண்ட ஆயுள் உண்டு.

மாத்துர்காரகன் நீச்சமானால் குழந்தைக்கு 4 வயதுக்குள் சந்திரன் தெசையோ, லக்னத்துக்கு 4 இல் உள்ள (கிரகத்தின்) தெசையோ, லக்னத்துக்கு 4 ஆம் அதிபதி தெசையோ நடந்தால் தாயாருக்கு மரணமுண்டாகும் .

சந்திரன் உச்சமானால், தாயாருக்கு யோகமுண்டு. ஜாதகர் பெண் குழந்தையானால் ஜாதகம் தாயாரைப் பாதிக்காது. ஆண்ஜாதகம் என்றால் உயிர்கண்டம் உண்டாக்கும்.

சந்திரன் நீச்சமாய் வர்கோத்தமமானால் தாயார் அன்பு கிடைக்காது.

சந்திரன் ஆட்சி –வர்கோத்தமமானால் (புனர்பூசம் – 4 ஆம் பாதக்காரர்கள் மட்டும்) தாயார் அரவணைப்பு உண்டு.

ஸ்தானாதிபதி சூரியன் மாத்துர் (ரிஷப லக்னத்துக்கு), சந்திரன் விருச்சிக லக்கினத்துக்கு பித்துார் ஸ்தானாதிபதி ரிஷப – விருச்சிக லக்னக்காரர்களுக்குப் பெற்றோர் சுகம் இருக்காது. மாத்துர் பித்துர்காரகன் சேர்ந்து ஒரு வீட்டில் இருந்தால் (அமாவாசை) பெற்றோர் பிரிவு உண்டு.

மாத்துர்ஸ்தானாதிபதி 1 இல் இருந்தால் தாயார் கண்டிப்பானவர். 2 இல் இருந்தால் குழந்தை வளர்ப்பில் திறமைசாலி. 3 இல் இருந்தால் ஜாதகரின் அடுத்த சகோதர – சகோதரியுடன் வசிப்பார். 4 இல் இருந்தால் நாட்டாமை செய்வார். 5 இல் இருந்தால் வெளியூரில் வசிப்பார். 6, 8, 12 இல் இருந்தால் இவருடைய அன்பு கிடைக்காது. கருத்து வேறுபாடு உண்டு. நோய் உண்டு. வெளிநாட்டில் வசிப்பார். 7இல் இருந்தால் தாயார் நடத்தை சரியாய் இருக்காது. 8இல் இருந்தால் மகனைப் பிரிவார். 9 இல் இருந்தால் கணவரை இழப்பார். 10, 11 இல் மாத்துர்ஸ்தானாதிபதி இருப்பது தாயாருக்கு நல்லது.

| | | | |
|---|---|---|---|
| | ல / | | |
| | இராசி | | சனி |
| | | | |
| | | | சந் செ |

இது ஓர் எடுத்துக்காட்டு  அமைப்பு: எல்லா லக்னங்களுக்கும் இது பொருந்தும்.

o   மாத்துர்ஸ்தானாதிபதி சகோதர ஸ்தானத்தில் இருந்தாலோ, மாத்துர்காரகனுடன் சேர்ந்து, 6, 8, 12 இவற்றில் ஒரு வீட்டில் மறைந்தாலோ, சனியின் 3ஆம் பார்வை பார்த்தாலோ ஜாதகர் சகோதர, சகோதரிகள், தாயார் அன்பை இழப்பார்.


**எடுத்துக்காட்டு:**

| | | | |
|---|---|---|---|
| | சுக் | | |
| ல / | இராசி | | சந் செ |
| | | | |
| | | | |

6, 8, 12 இல் மறைந்தாலோ, நீச்சமானாலோ, உச்சமானாலோ இதே பலன்தான். எனினும் வர்கோத்தமமானால் சிறு மாறுதல், ஆறுதல் உண்டு.

மாத்துர்ஸ்தானாதிபதியும் பித்துர்ஸ்தானாதிபதியும்  (4, 9 க்கு உரியவர்கள்) ஒரே வீட்டில் இருந்தால் பெற்றோர் ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருப்பர். அப்படி 4-9 க்கு உரியவர்களுடன் சந்திரனோ சூரியனோ சேர்ந்தால் பெற்றோரிடையே நல்லிணக்கம் உண்டு. எனினும் தந்தை மரணம் உண்டு.


***எடுத்துக்காட்டு ஜாதகம்***




இதில் 4 ஆம் அதிபதி சந்திரன் 9 ஆம் அதிபதி குரு இருவரும் 4 இல் இருப்பதால் ஜாதகரின் தந்தை தாயாரைப்பிரிந்து வேறு பெண்ணை மணப்பார். அல்லது தந்தைக்கு மரணமுண்டு. இது இராமருடைய ஜாதகம். தாயாரைப்பிரிந்து ராமரும் ராமரைப் பிரிந்து தயரதனும் இருந்ததும் தயரதன் மறைவும் யாமறிந்ததே.

o மாத்துர்காரகனும் பித்துர்காரகனும் 6, 8 இல் மறைந்து காணப்பட்டால் ஜாதகரின் பெற்றோர் ஜாதகரின் பணத்தை மட்டுமே மதிப்பார். ஜாதகரை மதிக்க மாட்டார். ஜாதகரும் பெற்றோரின் அன்புக்கு ஏங்குபவராய் யாதொரு பயனுமின்றி இருப்பார்.

***எடுத்துக்காட்டு ஜாதகம்***





மேஷ லக்னத்துக்கு மாத்துர்ஸ்தானாதிபதி மாத்துர்காரகன் சந்திரன், 6 இலும், சூரியன் 8 இலும் மறைந்து உள்ளன. ஜாதகர் அன்புக்கு ஏங்கி பிற இன ஆண்/பெண்ணை மணப்பார்.

o ரோகிணி, ஹஸ்தம், திருவோணத்துக்கு, அதாவது சந்திரன் ஆதிக்கமுள்ள நட்சத்திரங்களுக்குத் தந்தை அரவணைப்பு குறைவு. கடகம் லக்கினக்காரருக்கும், கார்த்திகை, உத்திரம், உத்திராடம் நட்சத்திரக்காரருக்கும் தாயார் அரவணைப்புக் குறைவு.

o 4 ஆம் அதிபதியும் மாத்துர்காரகனும் ஒன்றாய் இணைந்து ஒரு வீட்டில் இருந்தால், எடுத்துக்காட்டாக, மிதுன லக்னத்துக்கு மாத்துர்ஸ்தானாதிபதி புதன். மாத்துர்காரகன் சந்திரன். புதன், சந்திரன் சேர்ந்து 4 இல் இருந்தால் தாயார் பெயரில் வீடு கட்டி, ........ இல்லம் என்று பெயர் வைப்பார். (தாயார் பெயர் கல்பனா என்று இருந்தால், கல்பனா இல்லம் என்று பெயர் வைப்பார்.)

எடுத்துக்காட்டு  ஜாதகம்




O  மாத்துர்ஸ்தானாதிபதி உச்சமானால்  மேட்டு நிலத்திலும்,  நீச்சமானால் பள்ளப்பகுதியிலும், செவ்வாய்  பார்வை பெற்றால் சகோதரர் வீட்டருகிலும் வீடு கட்டுவார்.

புதன் ஆதிக்கமாயின் வெள்ளை – பளிங்கு வீடு கட்டுவார். அசுபதி நட்சத்திரக்காரர் பளிங்கு வீஸிஸி.. அதை  மருந்தகமாய் மாற்றுவார். பெரும்பாலும் அசுபதி நட்சத்திரக்காரர்  வீடு மருந்தகத்தை ஒன்றாக்குவார்.

OOOOO

# பாடம் 15 – பன்னிரு பாவங்கள் – பலன்கள் – 5, 6, 7, 8 வீடுகள்

## பாவம் 5 – பூர்வ புண்ணியம்

ஒருவருடைய ஜாதகத்தில் லக்கினத்துக்கு 5 ஆம் வீடு பூர்வபுண்ணிய ஸ்தானம் எனப்படும். அங்குள்ள கிரகம், கூட்டு கிரகங்கள் முதலியவற்றைக் கொண்டு ஜாதகருடைய மொழியறிவு, வீடு, வாகனம் இலாபம், சமூகத்தில் உள்ள அந்தஸ்து, பதவி, அதிகார பலம், புத்திரர் இலாபம் முதலியவற்றைக் கணக்கிடலாம். கல்வி அமைப்புகூட இதில் கணக்கிட முடியும்.

பூர்வபுண்ணியாதிபதி உச்சமாவதும் நீச்சமாவதும் நல்லதல்ல. அதே போல் தனித்திருப்பதும் நல்லதல்ல. பூர்வபுண்ணியாதிபதி ஆட்சியானால் நல்லது. மற்ற 11 அதிபதிகளுடன் பரிவர்த்தனையானால் நல்லது. குரு தனித்திருந்தாலும் வர்கோத்தமானமானாலும் நல்லது.

**1) பதவி**

மேஷம் லக்னத்துக்குப் பூர்வபுண்ணியாதிபதி சூரியன். லக்னத்தில் சூரியன் உச்சமாகி, லக்கினாதிபதி செவ்வாய் சிம்மத்தில் (சூரியன் வீட்டில்) இருப்பது பரிவர்த்தனை. இந்த அமைப்பு உள்ளவர்கள் கலெக்டர், அனல் மின்நிலையம் மற்றும் க்வாசி கவர்ன்மெண்ட், கார்ப்பரேஷன், வாரியச் சேர்மன்களாக இருப்பர். இது பற்றிப் பத்தாம் பாவத்தில் விரிவாகக் காண்போம். வர்கோத்தமமானால் பெரும்பதவி உண்டு. பூர்வபுண்ணியஸ்தானாதிபதி கேதுவுடன் அல்லது குரு+கேதுவுடன் இணைந்தால், முடியலங்கார நாவிதர் ஆவார்.

**புத்திர சோகம்:** 5 ஆம் அதிபதி நீச்சமானால் புத்திர சோகம் உண்டு. உச்சமானால் மனநிலை பாதிக்கும். ஆட்சியுற்றால் இராஜயோகத்துடன் இருப்பார். அதேபோல் லக்கினத்துக்கு 5 இல் கிரகம் நீச்சமானாலும் புத்திர இழப்பு உண்டு. லக்னத்துக்கு 5 இல் கிரகம் நீச்சமாவது ரிஷபம், மிதுனம், கடகம், கன்னி, விருச்சிகம், தனுசு, மீனம் ஆகிய லக்னங்களுக்கே உண்டு. மேஷம், சிம்மம், துலாம், மகரம், கும்ப லக்னங்களுக்கு 5 இல் எந்தக் கிரகமும் நீச்சமாகாது. இதனால் இவரகள் இது குறித்து கவலைப்பட வேண்டியதில்லை.

ரிஷப லக்னம் 11 இலும், விருச்சிக லக்னக்காரருக்கு 5 இலும் புதன் நீச்சமாவதால், ரிஷப லக்னக்காரர் குழந்தை மூச்சிறைச்சலில் உயிர் பிரியும். விருச்சிக லக்னக்காரருக்குப் புதன் தெசை– புதன் புக்தி காலங்களில் மகன்–மகள் பிரிவு நேரும்.

எல்லாக் கிரகங்களும் 5 ஆம் அதிபதிகளும் 5 ஆம் வீட்டில் ஆட்சி பெறுவதால் புத்திரதோஷம் பெறும். மேஷ லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி சூரியன், ரிஷபம், கும்ப லக்னங்களுக்குப் புதன். கடகம்– தனுசு லக்னங்களுக்குச் செவ்வாய். சிம்மம் – விருச்சிக லக்னங்களுக்குக் குரு. கன்னி–துலாம்

லக்னங்களுக்குச் செவ்வாய். சிம்மம் - விருச்சிக லக்னங்களுக்குக் குரு. கன்னி-துலாம் லக்னங்களுக்கு சனி, மிதுனம்- மகரம் லக்கினங்களுக்குச் சுக்கிரன் ஆகியவை. அந்தந்த வீடுகளில் தனித்து ஆட்சியாய் இருப்பது நல்லதல்ல. ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கிரகங்கள் இணைவதால் நலமுண்டாகும்.

### குடும்பம்

ஐந்தாம் அதிபதி 4 இல் இருந்தால் தாயாருடன் வசிப்பார். 6, 8, 12 இல் இருந்தால் பிறரால் கௌரவப் பழுது அடைவார். 10, 11 ஆம் வீடுகளில் 5 ஆம் அதிபதி இருப்பது நல்லது. 2, 3, 9 ஆம் வீடுகளில் இருப்பது சுமாரான பலனாகும். 5 ஆம் அதிபதி 7 இல் இருந்தால் கணவர்/மனைவி தருமசிந்தனை உள்ளவராய் கற்பு நிறை உள்ளவராய் இருப்பார். 5 ஆம் அதிபதியுடன் லக்னம் 2, 3, 4 அதிபதிகள் 9 ஆம் அதிபதியும் ஒன்றாகவோ தனித்தோ சேர கூட்டுக்குடும்பம் அமையும்.

### மொழிப் புலமை

மேஷ லக்னக்காரருக்குத் தெலுங்கு மொழிப் புலமை உண்டாகும்,

ரிஷப லக்னக்காரருக்குத் தமிழ் மொழிப் புலமை. மிதுன லக்னக்காரருக்கு சமஸ்கிருதம் மொழி,

கடக லக்னக்காரருக்குத் துளு மொழி, சிம்ம லக்னக்காரருக்கு மலையாளம்மொழி.

கன்னி லக்னக்காரருக்குக் கன்னடம் மொழி. துலா லக்னக்காரருக்கு மராட்டிய மொழி,

விருச்சிக லக்னக்காரருக்கு ராஜஸ்தானி மொழி. தனுசு, மகர லக்னக்காரருக்குப் பஞ்சாபி மொழி.

கும்பம், மீன லக்னக்காரருக்கு ஆங்கிலம் மொழிப்புலமை உண்டாகும்.

### 5 ஆம் அதிபதி நீச்சம்

புத்திரகாரகன் என்னும் குரு எந்த லக்னத்தில் இருந்தாலும் பணிவுமிக்க புத்திரர்களை பாக்கியத்தை அந்த ஜாதகர் பெறுகிறார். மேஷ லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி சூரியன் நீச்சமாவதால் பெற்ற மகனே கோர்ட்டில் வழக்கு தொடர்வான். ரிஷப லக்னத்துக்குப் புதன் மீனத்தில் நீச்சமானால் குடும்பப் பிரச்சினை உண்டு. மிதுன லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி கன்னியில் நீச்சமானால் வாகனத்தால் செலவு உண்டு. கடக லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி செவ்வாய் கடகத்தில் நீச்சமானால் பூமி இழப்பு உண்டு. பொதுவாக, 5ஆம் அதிபதி நீச்சமானால் தாழ்வு மனப்பான்மை, தன்னிரக்கம் உண்டாகும். மகரம் லக்னத்துக்கு 5 இல் குரு நீச்சமானாலும், சனி 8 இல் நீச்சமானாலும் உயரமான இடத்தில் இருந்து விழுந்து இறப்பார். துலா லக்னத்துக்கும் அதுவே. மகர லக்னத்துக்கு சுக்கிரன் நீச்சமானால் பெண்- பையனால் தொழில் நட்டம் உண்டு. மீன லக்னத்துக்குச் செவ்வாய் நீச்சமானால் 26 வயதில் மகனை இழந்து புத்திர சோகம் உண்டு.

## 2) 5 ஆம் அதிபதியும் கல்வியும்

மேஷ லக்னத்துக்கு ஐந்தாம் அதிபதி சூரியனாவதால் வெடி மருந்துகள், கேட்டரிங், கோவில், புரோகிதம், நெருப்பு எஞ்சின், இரயில்வே, அனல்மின் நிலையம் போன்ற நெருப்பின் ஆதிக்கமுள்ள தொழில் அமையும். கல்வி அமையும். சூரியன் மாவட்ட ஆட்சியர், செகரட்ரேடியட் பணி முதலியன தரும்.

ஐந்தாம் அதிபதி சந்திரனானால் கப்பல் போக்குவரத்து, ஏ.சி. மெக்கானிக், குடிநீர் வடிகால் வாரியம், உள்துறை செயலர் போன்ற நீர்மத்தொழில், அமிலம் போன்ற தொழில் கல்வி அமையும். கணினி தொழில் அமையும்.

ஐந்தாம் அதிபதி செவ்வாயானால் மின்னியல், இரசாயனம், மருத்துவம் (எலக்ட்ரிக்கல் கெமிக்கல் மெடிக்கல்) துறை நலம் தரும். தீவில் வசிக்க நேரும். குங்குமம் சிவந்த காய்கறிகள் மூலம் நலமுண்டாகும். பயிர்த்தொழில் கல்வி அமையும்.

மேற்கண்ட சூரியன், சந்திரன், செவ்வாய் இந்த மூவருமே 5 ஆம் அதிபதியாகவும் 10 ஆம் அதிபதியாகவும் அல்லது லக்னாதிபதியாகவும் இருந்தாலே மேற்சொன்ன பலன்களே கல்வி அமைப்பே உண்டாகும்.

நெருப்புக்கு அக்ரிணி என்று வடமொழியில் பெயர். அது தமிழ் மொழியில் அக்கினி என்றானது. அதுவே ஆங்கிலத்தில் அக்ரிக்கல்சர் ஆனது. கடலுக்கு வீங்கு நீர், ஓதம், ஓதாரண்யம் (நீர்க்காடு) என்று வடமொழி பெயர். ஔதாரம் நீர் அதனை உள்ளடக்கியதே உத்ரனியானது. நாவாய் என்றால் படகு கப்பல் என்று பொருள். அதுவே ஆங்கிலத்தில் நேவி என்றானது.

லக்னாதிபதி பூர்வபுண்ணியாதிபதி தொழில் அதிபதி புதன் என்றால் கணக்கியல். புதன் ஆட்சியானால் முதுநிலை (கணிதம்), உச்சமானால் சார்ட்டர்ட் அக்கவுண்டன்ட். நீச்சமானால் ஆடிட்டர் போன்ற தொழில் கல்வி அமையும். பசு பாக்கியம், பேப்பர், முத்தெடுப்பு, மெரீன், சிமெண்ட் போன்ற துறை கல்வியாய் அமையும். இதில் கல்வி அதிகாரி போன்றவர்கள் வருவர்.

லக்ன பூர்வபுண்ய தொழில் ஸ்தானாதிபதி குருவானால் பேராசிரியர், பொன் உருக்குதல் வெளியறவுத்துறை, கல்வி விரிவுரையாளர், நூலக அறிவியல் முதலிய துறைக்கல்வி அமையும். செவ்வாய் + குரு சேரின் சுரங்கம் (மைனிங்), புவியியல் அறிஞராவார். செவ்வாய் உச்சமானால் நிலம் விற்பனை அதிகரிக்கும். செவ்வாய் நீச்சமானால் நட்டமுண்டாகும். குரு உச்சமானால் தங்கம் விலை எகிரும். குரு நீச்சமானால் குறையும். குரு + செவ்வாய் ஒரே வீட்டில் நீச்சமானால் (கடகம் அல்லது, மகரத்தில்) பூகம்பம் உண்டாகி வீடு பொருள் சேதம் விளையும். குரு உச்சமாகி சனியால் பார்க்கப்பட்டால் பணிமனை தொடர்பான கல்வி அமையும்.

சனி உச்சமாகி லக்கின பூர்வபுண்ய தொழில் அதிபதியானால் முதுநிலை இஞ்சினீரிங், முதுநிலை டெக்னாலஜி (எம்ஈ, எம்டெக்) படிப்பு வரும். செவ்வாய்+ இராகு சேரின் சினிமா டைரக்டர் ஆவார். இராகு–கேது 5 இல் இருப்பது சுமாரான பலன்தரும்.

5 ஆம் அதிபதி 3 இல் மறைந்து சூரியன், சந்திரன் இணைந்து லக்னத்துக்கு 6, 8, 12 இல் மறைந்தால் குழந்தை சிற்றப்பா, மாமா வீட்டில் வளரும்.

எந்த ஒரு ஜாதகத்திலும் சூரியன்+புதன் சேர்ந்தே இருக்கும். அப்படிப்பட்ட ஜாதகம் குரு பார்வையற்று இருந்தால் இளங்கலை, இளம் அறிவியல், இளம் வணிகவியல் படிக்கவல்லது சூரியன் + சுக்கிரன் + புதன் இருந்தால் தடைபட்ட பட்டப் படிப்பு உண்டு.

மிருகசீரிஷம், சித்திரை, அவிட்டம் நட்சத்திரக்காரருக்கு செவ்வாய் உச்சமானால் ஜியாலஜி படிப்பு அமையும். புதன் லக்கினத்துக்கு 10 இல் தனித்து இருந்தால் கணக்கு ஆசிரியர் படிப்பு அமையும். புதன் ஆட்சி, உச்சம் பெற்றால் ஆடிட்டர் ஆவார். இதுபற்றி தொழில் பாவத்தில் விரிவாய்க் காண்போம்.

கேது பத்தில் இருந்தால் மருத்துவப் படிப்பு. கேது + புதன் இணைந்து உச்சம், நீச்சமானால் பல் மருத்துவர். லக்கினத்துக்கு 4 ஆம் அதிபதியுடன் கேது சேர்ந்தால் கண் மருத்துவப் படிப்பு. 3 இல் இருந்தால் காது, முக்கு, தொண்டை சிறப்பு மருத்துவப் படிப்பு. 8 இல் தொழில் அதிபதியுடன் கேது இருந்தால் மகப்பேறு (பிரசவ) மருத்துவப் படிப்பு. சனி + சந்திரன் வீடுகளில் தனித்தனியே இருந்தால் யோகா ஆசிரியர் படிப்பு. ஹோமியோபதி டாக்டர். சுக்கிரன், கேது சேர்ந்தால் மூலிகை மருத்துவர். சனி + புதன் பார்வை (ஏழாம் பார்வை) சிவில் இன்ஜினியர். கணித ஆசிரியர். புதன், சுக்கிரன், செவ்வாய் உள்ளவர் நீதியியல் படிப்பார். செவ்வாய் + சனி இணையின் சித்த மருத்துவர்.

இராசிக் கட்டங்களில் சூரியன் + புதன் அடுத்தடுத்த வீடுகளில் இருந்தால் அதாவது சூரியன் பின்னும் சந்திரன் முன்னும் (உ.ம்) மேஷத்தில் சூரியன், ரிஷபத்தில் புதன் இலக்கிய படிப்பு அமையும். இவர்கள் ஆங்கிலம், தமிழ் போன்ற துறையில் அவரவர் தாய் மொழியில் புலமைப் பெற்றிருப்பர். பேராசிரியர் மற்றும் பல்கலைக்கழக மொழியியல் துறை தலைவராய் இருப்பர்.

சூரியன் + புதன் + சுக்கிரன் இருந்தால் விலங்கியல் (சுவாலஜி) படிப்பும், சூரியன் + புதன் + கேது இருந்தால் உயிரியல் (பையாலஜி) படிப்பும் அமையும். சூரியன் + இராகு + புதன் தாவரவியல் (பாட்டனி) படிப்பு தரும். புதன் + கேது சேரின் மின்விளக்குகள் ஆய்வகத் துறை உதவியாளர் ஆவார். சந்திரன் மீனம், கடகம், விருச்சிகத்தில் இருந்தால் பொருளாதாரம் (எக்னாமிக்ஸ்) படிப்பு வரும். சுக்கிரன் + சூரியன் + புதன் மிதுனத்தில் இருந்தால் எனர்ஜி ஆடிட்டர் ஆவார்.

ரிஷப லக்னக்காரர்கள் எம்.பி.ஏ. படித்தாலும் சிவில் சர்வீஸ் எழுதினாலும் நலமுறும். ரிஷபம், தனுசு, கும்ப இராசிக்காரர்கள் கடக லக்னமாயிருந்தால் எம்.பி.ஏ. (சந்தையியல்) படிப்பார். மேற்சொன்ன மூன்று லக்னக்காரர்கள் மிதுன இராசிக்காரராய் இருந்தால் எம்.பி.ஏ. (பைனான்ஸ்) படிப்பார். துலா இராசிக்காரர்கள் எம்.பி.ஏ. (மனிதவள மேம்பாட்டுத்துறை ) படிப்பார். கேது + சுக்கிரன் இருந்தால் மருத்துவர். தாவரவியல் வல்லுநர்.

அனுஷம், பூசம் நட்சத்திரக்காரர் புள்ளியியல், கணக்கியல் ஆய்வு செய்வார்.

திருவோணம், சதயம், மிருகசீரிஷம் நட்சத்திரக்காரர் இயற்பியல் படிப்பார்.

## 3) நட்சத்திரங்களும் வீட்டு அமைப்புகளும்

### 1. அசுபதி, மகம், மூலம்

அசுபதி நட்சத்திரக்காரர் பளிங்கு வீடு கட்டுவார். அக்ரஹாரம் மற்றும் வரிசை வீடுகளில் நடு வீட்டில் குடியிருப்பார். இவர்களுக்கு காலி மனை ஒட்டாது.

மகம் நட்சத்திரக்காரர் எல் (L) வடிவ வாயில் வீடு உள்ளவர். பெரும்பாலும் ஓரத்திலுள்ள பகுதியில் (சைடு போர்ஷனில்) குடியிருக்க நேரும். சகலை, மைத்துனி வீட்டில் இருப்பார்.

மூல நட்சத்திரக்காரர் மூலை (கார்னர்) வீட்டிலோ, தரை (கிரவுண்டு) வீட்டிலோ இருப்பார்.

### 2. பரணி, பூரம், பூராடம்

பரணி நட்சத்திரக்காரருக்குக் கூட்டுக்குடும்ப வீடு அமையும். தியேட்டர், பெருமாள் கோவில் அருகே வீடு அமையும். மாடி வீடு சில நேரம் அமையும்.

பூரம் நட்சத்திரக்காரர் ஸ்டோரில் குடியிருப்பர். இவர்களுக்கு வாங்குதல், விற்றல் என்ற நோக்கம் உள்ளதால் சொந்த வீடு அமைவது கடினம்.

பூராடம் நட்சத்திரக்காரர் முக்கு வீட்டில் குடியிருப்பார்.

### 3. கார்த்திகை, உத்திரம், உத்திராடம்:

கார்த்திகை நட்சத்திரக்காரர் செம்மண் ரோடு உள்ள இடத்தில் வீடு கட்டுவார். இவருக்குச் சொந்த வீடு இருந்தாலும் அனுபவிக்க முடியாது. இவர் மூன்று வீடு மாறுவார். சொந்தமாய் வாங்குவார். கடலோரத்து ஊரில் அதற்கு மகான்கள் பெயர் இடுவார். சாய் இல்லம், இயேசு இல்லம், ராகவேந்திரா இல்லம் போன்ற பெயர் இடுவர்.

உத்திரம் நட்சத்திரத்தார் கிராமத்து வீடு போல் இரண்டடுக்கு வீடு வாங்குவர். ஆனால், வீடு ஒட்டாது. கடனில் முழுகும் அல்லது பெண் – பிள்ளை திருமணத்திற்கு வீட்டை விற்றுவிடுவார்.

உத்திராடம் நட்சத்திரக்காரர் பெரும்பாலும் வாடகை வீட்டில் இருப்பார். பிழைக்கத் தெரியாதவர்

தப்பித்தவறி இருந்தாலும் சகோதரர், மாமா வீடு அமையும். லக்கினத்திலிருந்து 4 ஆம் அதிபதியுடன் கேது சேரின் மாமா வீட்டிலும், இராகு சேரின் சிற்றப்பா வீட்டிலும், செவ்வாய் சேரின் சகோதரர் சகோதரி வீட்டிலும், குரு சேரின் நண்பர் வீட்டிலும் இருப்பார்.

தப்பித் தவறி வீடு கட்டினாலும் இவர்கள் காலத்துக்குப் பின்பு அரசாங்கம் அதனை நினைவு இல்லமாகவோ பயிற்சிக்கூடமாகவோ மாற்றிவிடும். மேற்சொன்ன கூட்டுக்கிரகத்தைப் பொறுத்து 4 ஆம் அதிபதியுடன் கேது சேரின் மருத்துவக் கூடமாகும். இராகு சேரின் இராணுவ அலுவலகம் ஆகும். சுக்கிரன் சேரின் அருங்காட்சியகம் (மியூசியம்) ஆகும்.

கார்த்திகை, உத்திரம், உத்திராடக்காரர்கள் பரிதாபத்துக்கு உரியவர்கள். இவர்கள் பிறர் கண்காணிப்பில் இருப்பதே நல்லது. பணம், வீடு உட்பட எல்லாம் பிறரால் பராமரிக்கப்பட வேண்டும். தாட்சண்யம், தனநாசம் என்பது அறியாதவர்கள்.

**4. ரோகிணி, ஹஸ்தம், திருவோணம்**

இந்த நட்சத்திரக்காரர்கள் முன்பு சொன்ன மூவரையும் விட இன்னும் பரிதாபத்துக்கு உரியவர்கள். வெளிநாடுகள் சென்று பணம் சேர்த்து விடு கட்டுதல், பர்மா, சீனா போன்ற புத்த மத நாடுகளுக்குச் சென்று பொருளீட்டி வீடு கட்டுதல், கடைத்தெருவில் (கீழே கடைகள், மேலே வீடு) குடியிருப்பார். *ரோகிணி***?**

ஹஸ்தம் நட்சத்திரக்காரர் பூசம் நட்சத்திரக்காரர் போன்றே மனைவியின் சீதன வீட்டிலோ அல்லது கணவர், மனைவி தொழில் நிமித்தம் வீடுகள் மாறி மாறியே இருப்பர்.

திருவோணம் நட்சத்திரத்தார் பெரிய சொந்த வீட்டைப் பூட்டி விட்டு வாடகை வீட்டில் குடியிருப்பார்.

**5. மிருகசீரிஷம், திருவாதிரை, புனர்பூசம்**

மூவரும் பூர்வீக வீட்டில் குடியிருப்பர். சொந்த வீடு கட்டினால் உள்ளடங்கிய வீடு கட்டுவர்.
இதில் மீருகசீரிஷத்தார் சுமாரான வீட்டிலும், திருவாதிரை நட்சத்திரத்தார் கட்டிய வீட்டில் உறவினர்களும் குடியிருப்பர். புனர்பூசத்துக்கு வீடு அமைவது அரிது. மீருகசீரிஷ நட்சத்திரக்காரர்களின் அடுத்த வீடு செட்டிமார் வீடாகும்.

**6. சித்திரை, ஸ்வாதி, விசாகம்**

அண்ணன், தம்பி வாங்கிய வீட்டில் இவர்கள் குடியிருப்பர்

**7. அவிட்டம், சதயம், பூரட்டாதி**

வெளி மாநிலங்களில் அல்லது சொந்த ஊரிலிருந்து 60 கிலோ மீட்டர் தள்ளி வீடு கட்டுவர்.

**8. ஆயில்யம், கேட்டை, ரேவதி**

இவர்களுக்குக் கையூட்டுப் பணம் அதிகம் வரும். அல்லது கமிஷன் வருமானத்தில் வீடு அமையும்.

ஆயில்ய நட்சத்திரக்காரர்கள் நீர் நிலைகள் உள்ள இடத்திலும், கேட்டை நட்சத்திரக்காரர் அனுமார் கோயில் அல்லது நதிகள் கரையிலும், ரேவதி நட்சத்திரக்காரர் வீடு இல்லாமல் வாடகை வீட்டிலும் வீடு கட்டியோ வாடகைக்கோ இருப்பர்.

இதில் ஆயில்யம், கேட்டை நட்சத்திரக்காரர்களுக்கு 100% சொந்த வீடு வாய்ப்பும். ரேவதி நட்சத்திரக்காரருக்கு 40% வாய்ப்பும் உள்ளது.

**9. பூசம், அனுஷம், உத்திரட்டாதி**

இவர்கள் சந்நியாச எண்ணம் உள்ளவர்கள். இவர்கள் வாடகைக் கார், வாடகை வீடுகளிலேயே இருப்பர். சொந்த வீட்டுக் கனவு மட்டுமே இருக்கும். தம்பி கட்டிய வீட்டில் இருப்பர். சொந்த வீட்டை யாராவது மிரட்டி எழுதி வாங்குவர் என்பதால் சொந்த வீடு இல்லாமலிருப்பதே நல்லது.

லக்கினத்திலிருந்து 4 ஆம் அதிபதி தனித்து இருந்தால் தனி வீடும், சூரியனோடு இருந்தால் சௌராஷ்ட்ரா மக்களுடனும், 4 ஆம் அதிபதியுடன் சந்திரன் இருந்தால் நகரத்தாருடனும், செவ்வாய் இருந்தால் இராணுவ வீரர் அருகில் இருக்கும் வீடு அமையும். குருவானால் அக்ரஹாரத்திலும் குரு அல்லது நீச்ச சுக்கிரனானால் சேரிகளிலும் வசிக்க நேரும். புறநகர் வாசத்தை இராகு, கேது உண்டாக்கும்.

மேஷம், சிம்மம், தனுசு லக்னக்காரர்களின் எதிர்த்த வீடு பூட்டியே இருக்கும். அருகில் பார்க்கும் அளவு கோவில் இருக்கும். வாயில் முகப்பு வடக்கு பார்த்தே அமையும்.

ரிஷபம், கன்னி, மகர லக்னக்காரர்களின் வீடுகள் மூலையில் (கார்னரில்) தெற்கு பார்த்து இருக்கும்.

மிதுனம், கும்பம், துலா லக்னக்காரர்களின் வீடுகள் மருத்துவமனை அருகில் அமையும்.

கடகம், விருச்சிகம், மீன லக்னக்காரர்களின் வீடுகள் கோயில், மசூதி, சர்ச் இவற்றின் கோபுரம் தெரியுமிடத்தில் அமையும்.

பூசம், அனுஷம், உத்திரட்டாதி நட்சத்திரக்காரர்களை ரேவதி, ஆயில்யம், கேட்டை நட்சத்திரக்காரர்கள் கிண்டல் செய்து ஏமாற்றுவர். ஸ்வாதி , மகம், பூராடம் நட்சத்திரக்காரர்கள் ஒதுக்கி வைப்பர். எனவே, ஏமாறும் குணமுள்ள பூசம், அனுஷம், உத்திரட்டாதிக்காரர்கள் ஏமாற்றும் குணமள்ள மேற்சொன்னவர்கள் முன்பு பேசுவதோ, அவர்களைக் கௌரவப்படுத்திப் பேசுவதோ, செய்யாத தப்பை அவர்களின் நட்புக்காக ஏற்றுக் கொள்வதோ முட்டாள் தனம் என்பதால், இந்த நடவடிக்கைகளைத் தவிர்ப்பது நல்லது.

ஐந்தாம் அதிபதி 1 இல் இருந்தால் தாமத புத்திர இலாபமுண்டு. 5 ஆம் அதிபதியுடன் 6, 8, 12 ஆம்

அதிபதிகள் சேருவது விபரீத இராஜயோகம் தரும். ஜாதகருக்கு அமையும் பெயர்கள் கூட 5 ஆம் அதிபதியின் நிலைப்பாட்டைப் பொறுத்தே அமையும். புதன் சூரியனுடன் இணைந்து 12 இல் மறைவதும் மணவாழ்வு சுகம் தராது. குழந்தைகள், மனைவி இணைந்து தாய் வீட்டில் வசிக்க நேரும்.

மேஷ லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி சூரியன். இவருடன் சந்திரன் சேரின் கிழக்கு நாட்டில் வீடு அமையும். செவ்வாய் சேரின் எல்.ஐ.சி. உத்தியோகம் உண்டு. புதன் சேரின் ஆடிட்டர் ஆவார். குரு சேரின் வக்கீல் ஆவார். சுக்கிரன் சேரின் வாழை, தென்னை வளர்ப்பு உண்டு. செவ்வாய் சேரின் நிலஅளவைத் துறையாளர் (சர்வேயர்) ஆவார். இதனைத் தொழில் பாவத்தில் பார்ப்போம்.

5 ஆம் அதிபதி கடகம், விருச்சிகம், மீனத்தில் இருந்தால் திரைகடல் ஓடி திரவியம் சேர்ப்பார். 5 ஆம் அதிபதி மேஷம், சிம்மம், தனுர் இராசியில் இருந்தால் ஆலோசகர் (அட்வைசர்) ஆவார். ஜனன காலத்தில் 5 ஆம் அதிபதி வக்ரமாய் இருந்தால் வலிமைவாய்ந்த இராஜதந்திரியாவார். சனியுடன் 5 ஆம் அதிபதி சேரின் அகழ்வாராய்வுத் துறை நலம் தரும்.

5 ஆம் அதிபதி அதிசாரமாய் இருந்தால் பலன்கள் அதிவிரைவில் நடக்கும். வக்ரம் என்றால் பின்னோக்கி செல்லல் என்றம் அதிசாரம் என்றால் கிரகம் முன்னோக்கிச் செல்லல் என்றும் பொருள். வக்ரமோ அதிசாரமோ ஒரே வீட்டில் நடந்தால், அதாவது மகம் 1 இலிருந்து மகம் 2 க்குப் போனாலோ அல்லது பூரம் 4 இலிருந்து பூரம் 3 க்குப் போனாலோ ஒரே வீட்டில் வக்ரமும் அதிசாரமும் நடப்பதாய் அர்த்தம். இப்படி நடப்பது யாதொரு மாற்றத்தையும் உண்டு பண்ணாது.

ஒரு கிரகம் மகம் 1 இல் இருந்து ஆயில்யம் 4 க்குப் போனால் சிம்மத்தில் இருந்து கடகத்துக்கு வக்ரமாகும் அல்லது ஒரு கிரகம் உத்திரம் 1ல் இருந்து 2 க்குப் போனால் அதிசாரம் சிம்மத்தில் இருந்து கன்னிக்குப் போவது பலன் மாறும். 5 ஆம் அதிபதியுடன் குரு சேரின் புத்திர பாக்கியம் கெடும். இது கூடாது.

5 ஆம் அதிபதி ரிஷபம், கன்னி, மகரத்தில் இருந்தால் கார்ப்பரேஷன் தலைவராய் இருப்பார். 5 ஆம் அதிபதியுடன் 6, 7 ஆம் அதிபதிகள் சேரின் பிற ஜாதிப் பெண்களைப் புணருவார்.

5 ஆம் அதிபதி மிதுனம், துலாம், கும்பத்தில் இருந்தால் கூட்டுறவு பண்டகசாலையில் பணியாற்றுவார். 5 ஆம் அதிபதியுடன் செவ்வாய் மற்றும் சுக்கிரன் சேரின் வாழை பயிர் செய்வார்.

### 4) 5 ஆம் அதிபதியும் மிருகங்களும்

5 ஆம் அதிபதி அசுபதி சதயக்காலில் இருந்தால் குதிரை வளர்ப்பார். (துலா லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி சனி கும்பத்தில் சதயத்தில் இருத்தல்) (தனுசு லக்னத்துக்கு 5 இல் செவ்வாய் அசுபதியில் இருத்தல்).

5 ஆம் அதிபதி பரணி, ரேவதியில் (பரணி–ரேவதி-1, 2, 3, 4 பாதத்தில்) இருந்தால் யானைப்பாகன் ஆவார்.

2 இல் இராகு, சனி இருந்தால் ஆடு வளர்ப்பார்.

5 ஆம் அதிபதி மிருகசீரிஷம், ரோகிணி பாதங்களில் இருந்தால் பாம்பாட்டிகள் ஆவார்.

5 ஆம் அதிபதி திருவாதிரை, மூலம் பாதங்களில் இருந்தால் நாய் வளர்ப்பார்.

5 ஆம் அதிபதி புனர்பூசம், ஆயில்யம் பாதங்களில் இருந்தால் பூனை வளர்ப்பார்.

5 ஆம் அதிபதி மகம், பூரம் பாதங்களில் இருந்தால் நாய்–பூனை வளர்க்கக்கூடாது.

5 ஆம் அதிபதி சுவாதி, ஹஸ்தம் பாதங்களில் இருந்தால் எருமை வளர்ப்பார்.

5 ஆம் அதிபதி சித்திரை, விசாகம் பாதங்களில் இருந்தால் புலித்தோல் அணிவார். இவர்கள் நாய் வளர்க்கக்கூடாது.

5 ஆம் அதிபதி உத்திரம், உத்திரட்டாதி பாதங்களில் இருந்தால் பசு வளர்ப்பார்.

இவற்றை இராசி, அம்சத்தில் பார்த்தால் தெரியும்.

ooooo

## பாவம் 6 – ருண, ரோக, விரோதம்

பொதுவாய் எல்லா லக்னங்களுக்கும் 6, 8, 12 ஆம் வீடுகள் மறைவு ஸ்தானங்கள் என்றும், சுக்கிரனுக்கு 12 ஆம் வீட்டுக்குப் பதில் 3 ஆம் வீடு (லக்னத்துக்கு) மறைவு ஸ்தானம் என்றும் பார்த்தோம். இதில் ஆறாவது என்பது அங்கு இடம் பெறும் கிரகங்கள் வலிமையற்றவை; தீயபலன்கள் தர வல்லவை என்ற கருத்து பரவலாய் இருந்தாலும், லக்னத்துக்கு 6 இல் சூரியன், செவ்வாய், புதன், சனி, இராகு, கேது மறைவது ரொம்பவும் நல்லது. மேற்கண்ட தெசா, புக்தி காலங்களில் அபரிமிதமான பலன்களைத் தரும்.

6 இல் சந்திரன் மறைந்தால் மனநலம் பாதிக்கும். குரு மறைந்தால் கல்வி தடைபடும். சுக்கிரன் மறைந்தால் பணம் தங்காது.

மேலும் 6 இல் லக்னாதிபதி மறைந்தால் நல்ல செல்வாக்கு பெருகும்.

குடும்பம் (2 ஆம் அதிபதி), சகோதரம் (3 ஆம் அதிபதி), மாத்துர் (4 ஆம் அதிபதி) ஸ்தானாதிபதிகள் மறைவது நல்லதல்ல. அப்படி மறைந்தால் குடும்பக் கடனுபாதையும் பெருகும்.

3 ஆம், 4 ஆம் அதிபதி மறைந்தால் சகோதரர், சகோதரிகள், தாயார் விரோதம் உண்டாகும்.

5 ஆம் அதிபதி மறைந்தால் சமூக அந்தஸ்து கிடைக்காது.

6 ஆம் அதிபதி 6இல் மறைவது ஆட்சி பெறுவதால் பாதகமில்லை.

7 ஆம் அதிபதி மறைந்தால் மணவாழ்வு சுகம் தராது.

8 ஆம் அதிபதி மறைந்தால் வெப்ப நோய் வரும்.

9, 10, 11 ஸ்தானாதிபதிகள் மறைந்தால் தொழில் வருமானம் சரியாய் இராது.

12 ஆம் அதிபதி மறைந்தால் கருமியாய், உலோபியாய் இருப்பார்.

**காரகத்துவ மறை**

சூரியன் (பித்துர்காரகன்) 6 இல் மறைந்தால் தந்தை வழி இலாபமில்லை.

சந்திரன் (மாத்துர்காரகன்) 6 இல் மறைய தாயார் சுகமில்லை.

செவ்வாய் (சகோதர, பூமிகாரகன்) 6 இல் மறைந்தால் சகோதரரால் நிலம் அபகரிக்கப்படும்.

புதன் (மாதுலகாரகன்) மறைந்தால் மாமா அரவணைப்பு இராது.

குரு (புத்திரகாரகன்) மறைந்தால் ஆண்வாரிசு இருக்காது.

சனி (ஆயுள் காரகன்) மறைவதால் நீண்ட ஆயுள் உண்டு.

சுக்கிரன் (களத்திரகாரகன்) மறைவதால் கணவர் / மனைவி துரோகம் நிகழும்.

இராகு 6 இல் மறைய விபத்து உண்டாகி கை, கால் உடையும்.

கேது 6 இல் மறைய மருந்துண்டு இறப்பார்.

6 இல் கிரகம் நீச்சமானால் அதன் காரகத்துவம் கெடும். உச்சமானால் பல்மடங்கு பிரிவு உண்டு. 6 இல் கிரகம் ஆட்சி, வர்கோத்தமம் ஆனால் பணபலம் பெருகும். பரிவர்த்தனையானால் ஆதிபத்தியத்துக்குத் தகுந்த பலன் கிட்டும்.

6 ஆம் இடம் கடன், பகை, நோய் (ருண, விரோதம், ரோகம்) ஆகியவற்றைக் குறிக்கின்றது.

**1. கடன்**

1. தாய் வழிக் கடன், 2. தந்தை வழிக் கடன், 3. சகோதரர் வழிக் கடன், 4. மனைவிவழிக் கடன், 5. தொழில் வழிக் கடன், 6. பித்ருவழிக் கடன், 7. தெய்வக்கடன் என்று ஏழுவகைக் கடன்கள் உண்டு.

**2. பகை**

1. பெற்றோர் வழிப் பகை, 2. சகோதரர் வழிப் பகை, 3. மனைவி வழிப் பகை, 4. அக்கம்பக்கம் பகை, 5. தொழிற்பகை, 6. ஜாதீயப்பகை, 7. தற்பகை என்று ஏழுவகைப் பகைகள் உண்டு.

**3. நோய்**

1. உடல் நோய் (12), 2. மனநோய், 3. தொடு நோய், 4, தொடா நோய் என்று நால்வகை நோயகள் உண்டு.

இவற்றைப் பற்றிய விரிவான நிலைகளை அடுத்துக் காண்போம்.

**1. கடன்**

**1.1. குடும்பக் கடன்**

தாய், தந்தை, சகோதரர், மனைவி வழிக்கடன்களை குடும்பக்கடன் என்ற கட்டுக்குள் கொள்ளலாம். இதில் பெற்ற பிள்ளை தரும் பணத்தைத் தந்தை திருப்பித் தர வேண்டியதில்லை என்பதால் புத்திரக் கடன் என்பது கிடையாது. பெற்ற பெண் திருமணம் ஆகாத நிலையில் தரும் அவரது வருமானம் திருப்பித் தர வேண்டியதில்லை.

இதில் உயிருடன் உள்ள தாய் தந்தை கடன் வேறு. பித்துர்கடன் என்பது நம்பிக்கை அடிப்படையில் இருப்பதால் இது வேறு.

தொழிலால் ஏற்படும் கடன்தான் கண்ணுக்குப் புலப்படக் கூடியது. தெய்வ கடனும் அப்படியே.

1. மாத்துர்காரகன் சந்திரன் 6 இல் மறைந்தாலோ மாத்துர்ஸ்தானாதிபதி 6 இல் மறைந்தாலோ 4 ஆம் வீட்டில் (லக்னத்துக்கு) ஆட்சி பெற்றாலோ தாய் வழிக் கடனை (சித்தியின் திருமணம்), தாய்வழிப் பாட்டன்

சொத்தை மீட்டல் போன்ற கடனடைக்கும் நிலை உண்டாகும்.

2. பித்துர்காரகன் 6 இல் மறைந்தாலோ, பித்துர்ஸ்தானாதிபதி 6 இல் மறைந்தாலோ 9 இல் ஆட்சிபெற்றாலோ தந்தை வழிக் கடனை (சிற்றப்பா, அத்தையின்) அடைக்க நேரும். (பித்துர்காரகன்–சூரியன்)

3. சகோதரகாரகன் (செவ்வாய்) 6 இல் மறைந்தாலோ சகோதராதிபதி 6 இல் மறைந்தாலோ 3 இல் சகோதராதிபதி ஆட்சியுற்றாலோ சகோதரன் குடி, தொழில், கூடா நட்பால் உண்டான கடனை அடைக்க நேரும்.

இதில் சூரியனுடன் இராகு அல்லது கேது சேர்ந்தாலோ, சந்திரனுடன் இராகு–கேது சேர்ந்தாலோ, செவ்வாயுடன் இராகு, கேது சேர்ந்தாலோ மேற்சொன்ன மூவரால் கூடா நட்பால் உண்டான கடனை அடைக்க நேரும். கள்ளக் கடத்தல் தொழில் கடன் தீர்க்க நேரும்.

மாத்துர்காரகனும் மாத்துர்ஸ்னாதிபதியும் பித்துர்காரகனும் பித்துர்ஸ்தானாதிபதியும் சகோதரகாரகனும் சகோதராதிபதியும் சேர்ந்து ஒரே வீட்டில் இருந்தால் தாயார், தந்தையால், சகோதரனால் ஜாதகர் தாக்கப்படுவார்.

மாத்துர்காரகனுடன் மாத்துர்ஸ்தானாதிபதியும், பித்துர்காரகனுடன் சந்திரனும், செவ்வாயுடன் சந்திரனும் சேர்ந்தால் குடிப் பழக்கத்தால் உண்டான கடனை அடைக்க நேரும். கேது சேரின் பெருநோய் பீடித்து அதனால் உண்டான கடனை அடைக்க நேரும். மேற்சொன்னது போல் களத்திரகாரகன் சுக்கிரன் அல்லது களத்திராதிபதி மறைந்தால் மனைவி / கணவர் மூலம் உண்டான கடன் அமையும்.

6, 8, 12 ஆம் இடங்கள் மறைவுஸ்தானங்களேயொழிய தோஷமான இடங்கள் அல்ல. இராகு–கேதுக்கள் லக்கினம் இராசிக்கு 2, 5, 7 ஆம் வீடுகளில் இருப்பின் நாகதோஷம். அவ்வாறன்றி 6, 8, 12 இல் இருந்தால் தோஷமல்ல.

### 1.2. பித்துர் கடன்

தென்புலத்தார் என்று கூறப்படும் இறந்த மனைவி, கணவர், தாய், தந்தை, புத்திரருக்குச் செய்ய வேண்டிய கடனைக் காட்ட வல்லது பித்துர்கடன். லக்னம், இராசிக்குக் குரு 6 இல் மறைந்தால் இறந்த புத்திரருக்கும், 6, 8, 12 இல் சூரியன் மற்றும் சந்திரன் மற்றும் செவ்வாய் மறைந்தால் இறந்த தாய், தந்தை, சகோதரிக்கும் செய்யும் கடன் பாக்கி அதாவது சடங்கு பாக்கி உள்ளது என்று பொருள். சுக்கிரனும் 7 ஆம் அதிபதியும் சேர்ந்து 6, 8, 12 இல் மறைந்தால் இறந்த கணவர் / மனைவிக்கு உயிருடன் இருப்போர் செய்ய வேண்டிய சடங்கு உள்ளது என்று பொருள். அமாவாசை அன்று தாம்பத்தியமுற்றால் தென்புலத்தாருக்கு

மலக்குழி படுதோஷம் உண்டாகும் என்பது சாத்திரம். இவை நீங்க திலம் என்றும் எள் தற்பணம் செய்வது நல்லது. அல்லது திலோத்தமை என்கின்ற தெய்வத்தை வழிபடுவது நல்லது. (தில + உத்தமி = திலோத்தமை) தெய்வக்கடனைவிட பித்துர்கடன் பல வழிகளில் தொல்லை தரும். எனவே, கடல், நதி நீராடி தற்பணம் செய்வது நல்லது.

தென்புலத்தாருக்கு வருடாவருடம் அவர்கள் இறந்த தேதியிலோ திதியிலோ உணவு வகைப் படையல் செய்வதை திவசம் என்று கூறுவர். திவசம் என்றால் நாள்-நினைவு நாள் என்று பொருள். மிகவும் சிரத்தையோடு செய்வதால் அதற்குச் சிரார்த்தம் என்றும் பெயர். உலகத்தாருக்கு ஒரு வருடம் என்பது பித்துர்களுக்கு ஒரு நாள் ஆகும். அதாவது இறந்தவர்களுக்குத் தினம் தினம் உணவளிப்பதாய் ஆகும். இது தடைபடுமாயின் குடும்ப விருத்தி பாதிக்கும். எனவே, இக்கடன்களை உடனுக்குடன் செய்வது நல்லது.

### 1.3. தெய்வக் கடன்

துன்பத்தைத் தேய்ப்பதால் கடவுளுக்குத் தெய்வம் தெய்வதம் என்ற பெயர் வந்தது. குழந்தை பிறந்ததும் ஓராண்டுக்குள் குலதெய்வத்துக்கு முடியிறக்குதல் தடைபடின் அது தெய்வக் கடனாகும்.

தெய்வக்கடன் என்பவை:

1. முடியிறக்குதல், 2. வேண்டுதல் பாக்கி, 3. பலிஇடுதல், 4. அன்னதானம், 5. கோயிலுக்கு எண்ணெய், பால் தருதல் என 5 வகைப்படும்..

லக்னாதிபதி 10 இலும், 10 ஆம் அதிபதி லக்னத்திலும் இருந்தாலோ, பத்தாம் அதிபதி லக்னத்தில் நீச்சமானாலோ, முடியிறக்கல் பாக்கி உள்ளது என்று பொருள். 3 ஆம் அதிபதி லக்னத்தில் உச்சமானால் இறைவனுக்கு அளிக்க வேண்டிய காதணி பாக்கி உள்ளது என்று பொருள். இந்தக் காரியம் தடைபடுவது ஏன்? என்று ஜாதகம் பார்க்க வருபவர் கேட்கும்போது ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

இதனையே நாளிரண்டு, வாரமிரண்டு, மாதமிரண்டு, வருடமிரண்டு என்பதான மலங்கழித்தல், எண்ணெய் தேய்த்து நீராடல், சம்போகம் மற்றும் வருடமிரண்டுமுறை செய்ய வேண்டிய குலதெய்வ ஆராதனை செய்தாலே போதும். வெறுமனே கோயிலுக்குச் சென்று வந்தாலே இறைக்கடன் அடையும்.

பலியிடுதல் என்பது உயிர்ப்பலி. இது ஏற்புடையதல்ல. ஓருயிர் வாழ ஓருயிர் இறப்பது உகந்ததல்ல. அதற்குப் பதில் இரத்ததுக்கு சமமான குங்குமத்தை அரிசியில் கலந்து (உடையாத அரிசி - அட்சதை) இறைவழிபாடு செய்வது ஜீவ அகிம்சைக்கு வழிவகுக்கும்.

மிகவும் நேர்மையான முறையில் நாடாண்ட மனுச்சக்கரவர்த்தி நினைவாய் இன்று மனு கொடுத்தல் என்றும் மகாபலிச்சக்கரவர்த்தி தன்தலையையே இறைவனுக்கு அர்ப்பணித்ததால் அவன் நினைவாய் பலி

கொடுத்தல் என்றும் பெயர்வந்தது. இறைவன் கருணையுருவானவர். வாழை மரத்தை வெட்டுவதோ ஆடு, மாடுகளைப் பலியிடுவதோ இறைவன் ஒரு போதும் விரும்பியதில்லை. குடும்ப சகிதம் கோவில் வழிபாடு. வெட்டவெளி வழிபாடு (அருவ வழிபாடு) செய்வதே உகந்தது. இதை ஜோதிடர்கள் வலியுறுத்தவேண்டும். சில விவரங்கள் கூறினால் மனவருத்தமூட்டும் கருத்துக்கள் வெளியாகிவிடும், அதாவது மத நம்பிக்கைக்கு எதிராய்ப் பேசப்பட்டு விடும் என்பதால் இது இத்துடன் விடப்படுகிறது. மது – மாமிசம் என்பது தேன். தேன் நமது தேகம் என்பதால் கடவுளுக்குத் தேனால் அபிசேகம் செய்து ஊனால் வழிபடல் என்பதாகும்.

அன்னதானம் செய்யலாம்; நல்லது அக்காலத்தில் கோவிலுக்கு ஒருவரே எல்லாச் செலவும் செய்யாமல் எல்லாரும் கலந்து கொள்ளவே எண்ணெய் குடம் வாங்கித் தரச் சொல்லப்பட்டது. தற்போது மின்விசை சாதனங்கள் வந்துள்ளதால் இவை அவசியம் இல்லை.

**1.4. தொழிற் கடன்**

செய்தொழில் நட்டம், கூட்டுத்தொழில் நட்டம், குடும்பத் தொழில் நட்டம் என்பன தொழிற்கடன்.

லக்கினத்திலிருந்து 10 ஆம் அதிபதி 6 இல் மறைந்தாலோ நீச்சமுற்றாலோ தொழில் கடனில் மூழ்கும். லக்னத்துக்குப் 10 ஆம் அதிபதி 6, 8, 12 இல் உச்சமானால் தொழிற்கடன் உண்டாகி முதலாளி தலைமறைவு ஆவார். 10 ஆம் அதிபதி 5 இல் நீச்சமானால் நண்பருடன் சேர்ந்த தொழில் நட்டமாகும். 3, 2 இல் நீச்சம் உச்சமானால் சுய குடும்த்தாருடன் சேர்ந்து செய்த தொழில் நட்டமாகும்.

இவ்விதம் ஒரு ஜோதிடர் 10 ஆம் அதிபதியின் அமைப்பை நன்கறிந்து சுயதொழில் செய்யலாமா என்று கேட்டுவருவோர்க்கு தக்க பதில் சொல்வதே பரிகாரம். வெளிப்படையாய் கூட்டுத்தொழில், சுயதொழில் வேண்டாம் அல்லது செய்யலாம் என்று சொல்லிவிடுதல் நலம்.

அதேபோல் 6, 8, 12 ஆம் அதிபதிகள் 10, 5 இல் இருந்தாலும் தொழில் நட்டமாகும். 10 ஆம் அதிபதி இராசியில் உச்சமாகி, அம்சத்தில் நீச்சமானால் படுதோல்வி உண்டு. மாறாக இராசியில் நீச்சமாகி, அம்சத்தில் உச்சமானால் வெற்றிகரமாய் தொழில் அமையும்.

தொழில் ஸ்தானாதிபதியுடன் சுபகிரகம் கூடியிருந்தாலும் வளர்பிறைச் சந்திரன் இருந்தால் மட்டுமே சுயதொழில் செய்ய வேண்டும். தேய்பிறைச் சந்திரன் என்றால் கூடாது. வளர்பிறைச் சந்திரன், தேய்பிறைச் சந்திரன் என்று எப்படிக்கண்டுபிடிப்பது? ஜாதகத்தின் இராசி–அம்சக் கட்டத்துக்கு மேல் கிருஷ்ணபக்ஷ அட்டமி, நவமி என்று திதிகள் பெயர் இருந்தால் அது தேய்பிறை. சுயதொழில் கூடாது. சுக்லபக்ஷ அட்டமி, நவமி என்று திதிகள் பெயர் இருந்தால் அது வளர்பிறை. சுயதொழில் செய்யலாம். அதாவது: சுக்லபக்ஷத்தில் பிறந்திருந்தால் செய்யலாம். கிருஷ்ணபக்ஷத்தில் பிறந்திருந்தால் செய்யக் கூடாது. தேய்பிறை அட்டமி, நவமியில் மருந்துண்டால் மீண்டும் நோய் வராது.

## 2. பகை: (விரோதம்)

பொதுவாய் நமக்கே சிலபேரைப் பார்த்தால் பாசமுடன் பழகத் தோன்றும். சிலரைப் பார்த்த மாத்திரத்தில் வெறுக்கத் தோன்றும். இவையாவும் கிரக அமைப்புகளால் நிகழ்வன.

### 2.1. பெற்றோர்வழிப் பகை

சூரியன், சந்திரன், செவ்வாய் நீச்சமானால் அல்லது லக்னத்திற்கு 6, 8, 12 இல் மறைந்தால் சூரிய நீச்சம் தந்தை வழி விரோதத்தையும், சந்திரன் நீச்சம் தாய் வழி விரோதத்தையும், செவ்வாய் நீச்சம் சகோதரர் வழி விரோதத்தையும் உண்டாக்கும். லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி, சுக்கிரன் இரண்டும் நீச்சமானாலோ 6, 8, 12 இல் மறைந்தாலோ மனைவி / கணவர்வழி விரோதம் உண்டு. இவையே பெற்றோர், சகோதரர், மனைவி வழிப் பகையாகும்.

11 ஆம் அதிபதி நீச்சமானாலோ ஆறில் மறைந்தாலோ மாமியார் விரோதமாவார். லக்னத்துக்கு 4 ஆம் அதிபதி நீச்சம், மறைவு பெற்றால் மாமனார் விரோதமுண்டு. 10 ஆம் அதிபதி நீச்சம், மறைவு பெற்றால் மைத்துனன், கொழுந்தன் விரோதமுண்டு.

இராகு நீச்சமானால் சிற்றப்பாவழிப் பகை. கேது நீச்சம், மறைவு பெற்றால் மாமாவழிப் பகை ஏற்படும்.

### 2.2. அக்கம்பக்கப் பகை

லக்னத்துக்கு 2 இல் அல்லது 12 இல் 6, 8, 12 ஆம் அதிபதிகள் இருந்தால் பக்கத்து வீட்டுக்காரரால் இடருண்டாகும். இதற்கு ஒரேவழி ஆரம்பத்திலேயே யாருடனும் நெருங்கிப் பழகாமல் இருப்பதுவே.

### 2.3. தொழிற் பகை

10 ஆம் அதிபதி 6, 8, 12 இல் நீச்சமாய் மறைந்தாலோ பகையம்ஸம் பெற்றாலோ நம்மோடு பணியாற்றும் சக ஊழியர்களால் சதி செய்யப்பட்டு வேலையை இழக்க நேரும். 10 ஆம் அதிபதியுடன் சந்திரன் சேர்ந்தாலும் அப்படியே. இதில் கும்ப லக்னக்காரர்களே மிகவும் பாதிக்கப்படுவர்.

### 2.4. ஜாதீயப் பகை

லக்னத்துக்கு 5 ஆம் அதிபதி 6 ஆம் அதிபதியுடன் சேர்ந்து 5 அல்லது 6 ஆம் வீட்டில் இருந்தால் சுய ஜாதியரால் பழி வாங்கப்படுவார். சுய ஜாதியினரே விரோதியாவர். 6 ஆம் அதிபதி நீச்சமானால் கீழ் மக்களால் (தொழிலாளர்களால்) தொல்லையுறுவார்.

அதில் குரு நீச்சமானால் பிராமணர்களாலும், சுக்கிரன் நீச்சமானால் கீழ்மக்களாலும், புதன் நீச்சமானால் முகமதியர்களாலும், சந்திரன் நீச்சமானால் கிறித்தவர்களாலும், புதன் உச்சமானால் நாயுடு, பிள்ளைமார்களாலும், சனி நீச்சமானால் (இவை 6 இல் இருக்க) கள்ளர்களாலும் பகை உண்டாகும்.

## 2.5. தற்பகை

சுக்கிரன், குரு அம்ஸத்திலும் அதாவது பூரட்டாதி, புனர்பூசம், விசாகம் காலில் இருக்க, குரு, சுக்கிரன் (பரணி, பூரம், பூராடம்) காலில் இருந்து பரிவர்த்தனையானாலும், லக்கினம், இராசி இவை 6, 8, 12 இல் இருந்தாலும் தனக்குத் தானே விரோதியாய் அதிகம் பேசியும், கெட்டவர்களுக்குச் சிபாரிசு செய்தும் அந்நியரோடு இணைந்து சகோதரரைத் தாக்குதல் போன்றவற்றில் ஈடுபட்டு, தனக்குத்தானே பகையைத் தேடிக் கொள்வார். லக்கினம் + இராசி 6, 8இல் மறைந்தால் சுய விரோதிகளாவார். எடுத்துக்காட்டு. சிம்மம் – மீனம் இராசி.

ஒரே ரஜ்ஜுவில் (லக்னம் + சந்திரன் இராசி இருந்தாலும்), பகையோனிகளில் லக்னம், சந்திரன் இருந்தாலும் சுய விரோதிகளாவார். (எ.கா) கார்த்திகை நட்சத்திரத்தில் லக்னமும், உத்திர நட்சத்திரத்தில் சந்திரன் இருப்பதும், பரணி நட்சத்திரத்தில் லக்னமும், அவிட்ட நட்சத்திரத்தில் சந்திரன் இருப்பதும் (யானை – சிங்கம்) சுய விரோதம் ஆகும். இதுபோல் எல்லா லக்னத்துக்கும் பொருந்தும்.

இவற்றை ஒரு சோதிடர் வருபவர்களிடம் எடுத்துரைத்து, எச்சரிப்பது நல்லது. பகையற்ற ஜாதியினர் பகையற்ற குணத்தவருடன் தொழில் செய்ய வழி காட்ட வேண்டும். இது அவரது கடமை.

# 3. நோய்

## 3.1. உடல் நோய்

| | |
|---|---|
| லக்னம்–தலை | 7 ஆம் வீடு – இடுப்பு, பால் குறி |
| 2 ஆம் வீடு – வாய் | 8 ஆம் வீடு – தொப்புள் (நாபி) |
| 3 ஆம் வீடு – காது | 9 ஆம் வீடு – தொடை |
| 4 ஆம் வீடு – கண் | 10 ஆம் வீடு – முழங்கால், முழங்கை |
| 5 ஆம் வீடு – நெஞ்சு, கை | 11 ஆம் வீடு – கணுக்கால் |
| 6 ஆம் வீடு – கைகள் விரல்கள் | 12 ஆம் வீடு – பாதம், பாத விரல்கள் |

ஒருவர் ஜாதகத்தில் 12 இராசிகளும் 12 வீட்டைக் குறிக்கும். அந்தந்த வீட்டு அதிபதிகள் இருக்கும் இடத்தைப் பொறுத்து நோய் உண்டாகும்.

லக்னத்தில் ஒரு கிரகம் நீச்சமானால் பைத்தியம் பிடித்துவிடும். தாழ்வு மனப்பான்மை உண்டாகும்.

2 ஆம் அதிபதி நீச்சமானால் மற்றும் 2 ஆம் வீட்டில் ஒரு கிரகம் நீச்சமானால், தொண்டை (டான்ஸில்ஸ்) உபாதை உண்டு. 2 ஆம் அதிபதி 6 இல் மறைந்தால் ஊமையாவார். சனி + கேது 2 இல் இருந்தால் திக்குவாய் நோய் வரும். 2 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் வேகமாய் மளமளவென்று பேசுவார். 12 இல் இருந்தால் பேசுபவர் பல் உதிரும்படி பேசுவார். இரத்தம் உதிருவதால் உதிரம் என்ற பெயர் வந்தது.

3 ஆம் அதிபதி நீச்சமானால் காதுவலி உண்டு. அடைசல்வரும் 6-8-12ல் மறைந்தால் செவிடு ஆவார்.

4 ஆம் அதிபதி நீச்சமானால் மாலைக்கண்நோய் வரும். 4 ஆம் அதிபதி நீச்ச சூரியனானால் பார்வை மங்கி குருடராவார். 4 ஆம் அதிபதி இராகுவுடன் இருந்தால் மாறுகண் பெறுவார். கண் புரை நோய், கண் புற்று நோய் போன்றவை புனர்பூசம், பூசம் நட்சத்திரக்காரர்களையே பீடிக்கும்.

இதே அமைப்பு 5 ஆம் அதிபதியுடன் செவ்வாய் சேர்ந்து 4 இல் இருந்தால் கண்ணறுவைச் சிகிச்சை நடைபெறும். 5 இல் இருந்தால் இதய அறுவைச் சிகிச்சை நடைபெறும்.

6 இல் இராகு, கேது, 5 இல் சனி, குரு இருந்தால் கை ஊனமாகும்.

7 இல் சந்திரன், செவ்வாய் இருந்தால் அழகிய உடலமைப்பு பெற்றவராயினும் பெண்ணாக இருந்தால் நீர்க்கட்டி நோயும், ஆணாக இருந்தால் பித்தப்பை, மஞ்சள் காமாலை நோயும் உள்ளவராய் இருப்பார்.

8 ஆம் அதிபதி உச்சமானால் பித்தப்பை இடர் உண்டு.

9 ஆம் அதிபதி பாதக இடத்தில் இருந்தால் தொடைவலி உண்டாகும்.

10 ஆம் அதிபதி புதனுடன் சேர, மூட்டு வலி உண்டாகும்.

11 ஆம் அதிபதி நீச்சமானால் கணுக்கால் செயலிழக்கும்.

12 இல் சனி இருந்தால் ஆணிக்கால் வரும். 12 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் கால் வீக்கம், தசை இழுப்பு வரும். இராகு லக்கினத்திலும் 7 இல் கேதுவும் இருப்பின் இளம்பிள்ளை வாதம் வரும்.

உடலில் முக்கியமான உறுப்பு கண். கண் குளிர்ச்சியாய் இருந்தால் எல்லா வேலைகளையும் சுறுசுறுப்பாய்ச் செய்யலாம். எனவே, கண்ணைக் குளிர்ச்சியாய் வைத்துக்கொண்டால் நோய், களைப்பு ஏற்படாது.

### 3.2. மனநோய்

சந்திரன் அமைப்பைப் பொறுத்து மனநோய் அமையும். அவை 1. தன்னிரக்கம், 2. பிரேத பயம், 3. தனிமை பயம், 4. மன பயம்.

சந்திரன் லக்னத்துக்கு 6, 8, 12 இல் மறைந்தால் தன்னைப் பார்த்து தானே வருத்தப்படுவார். மனைவியை, குழந்தைகளைத் தனக்கு எதிராய் சதிசெய்வதாய் நினைப்பார். இது தன்னிரக்க நோய் அதாவது சுய பச்சாதாபம் ஆகும்.

பிண ஊர்வலம், பேய்க்கதையைப் படிப்பதால் பார்ப்பதால் வருவது பிரேத பயம். இது கார்த்திகை உத்திரம், உத்திராடம் நட்சத்திரக்காரருக்கே உரியது.

சிம்மம், மீன லக்னக்காரர்கள் வீட்டில் தனியாய் இருந்தால் பயப்படுவர். மற்ற இராசிக்காரருக்குச் செல்லாது.

8 இல் சந்திரன் இருந்தால் நீர் நாய் பயமுண்டு. இது கடல், அகண்ட நதியைப் பார்த்துப் பயப்படுதல் நோய்.

## 3.3. தொடு நோய், தொடா நோய்

தொடுநோய் என்பது உடலோடு ஒட்டிய தொழுநோய், கண்வீக்கம், யானைக்கால் நோய் போன்றவற்றைக் குறிக்கும். இது உடலைத் தொடுவதால் தொடுநோயாகும்.

தொடா நோய் என்பது ஜலதோஷம், வியர்வை வெளியேற்றம், மூச்சிரைச்சல், வாயுப்பிடிப்பு போன்றவை ஆகும். இவை உடலைத் தொடாதவை.

தோல் ஊழ் நோய் தொழுநோய் என்றானது. ஊழ் என்றால் பாபம். தோலில் இருந்து சீழ் ஒழுகுவதால் தோலொழுகு நோய், தொழுநோய் என்றானது. இராகு, கேதுக்களைப் புதன், சனி பார்த்தாலோ அவர்களுடன் இணைந்தாலோ தொழுநோய் வரும்.

இராகு, சந்திரனாலோ சூரியனாலோ பார்க்கப்படின் தோல் அலர்ஜி உண்டாகும். 5 இல் இராகு கோட்சார ரீதியாய் வரும்போது தோல் நோய் வரும்.

லக்கினத்தில் செவ்வாய் நீச்சமானால் இராகுவுடன் இருந்தால் செவ்வாய் அல்லது இராகுதெசை நடக்கும் போது செங்குட்டநோய் வரும்.

12 ஆம் அதிபதி பரணி, ரேவதி காலில் இருந்தால் யானைக்கால் நோய் வரும்.

4 இல் செவ்வாய் நீச்சமுற சூரியன் இருந்தால் கண்சிவக்கும்.

### தொடா நோய்

லக்கினத்துக்கு 5 இல் சூரியன் இருந்தால் வியர்வை அதிகம் வெளியேறும்.

5, 6 இல் இராகு இருந்தாலோ லக்கினத்தில் 8 இல் இருந்தாலோ மூச்சிரைச்சல் வரும்.

சந்திரன் நீச்சமானாலோ 6, 8, 12 இல் மறைந்தாலோ கடுமையான ஜலதோஷம் வரும்.

இராகு 5 இல் இருந்தால் மஞ்சட்காமாலை வரும்.

சனி, குரு 5 இல் சேரின் பாராடைபாயிடு வரும்.

புதன் 4 இல் இருந்தால் நிமோனியா காய்ச்சல் வரும்.

சனி + இராகு 6 இல் சேரின் அம்மை போட்டு இறக்க நேரும்.

3-இல் குரு இருந்தால் மூக்கில் அறுவைசிகிச்சை உண்டாகும். சந்திரன், குரு பரிவர்த்தனை, உச்சம் நீச்சம் பாதிப்பு இல்லை. நோய் வராது.

**மருத்துவம்**

சனி– சந்திரன் பரஸ்பர பார்வை இருந்தால் ஹோமியோபதி மருந்துண்ணலாம்.

சுக்கிரன், சனி சேரின் ஆயுர்வேத மருந்துண்ணலாம்.

புதன், சனியுடன் சேரின் யுனானி மருந்துண்ணலாம்.

செவ்வாய் + சனி சேரின் சித்த மருந்து உண்ணலாம்.

சூரியன், சந்திரன், சுக்கிரன் வலுத்திருப்பவர் ஆங்கில (அலோபதி) மருந்துண்ணலாம்.

மேலும் சில முக்கிய குறிப்புகள்:

1. புதன் + சுக்கிரன் கன்னியில் இருந்தால் இரட்டைப் பல் உண்டாகும்.
2. 3 இல் புதன்+கேது இருந்தால் இரட்டைக் காது உண்டாகும்.
3. புதன் + சுக்கிரன் மீனத்தில் இருந்தால் இரட்டைச் சுழி உண்டாகும்.
4. விருச்சிகம் லக்னக்காரருக்கு விஷக்கடி உண்டாகாது.
5. அனுஷம், கேட்டை நட்சத்திரக்காரரை நாய் கடிக்கும். பூசம் நட்சத்திரக்காரரை நாய் துரத்தும். உத்திரட்டாதிக்காரரை நாய் கௌவும்.
6. உத்திராடம் நட்சத்திக்காரரை பாம்பு தீண்டும். கடிக்காது. ரோகிணி, மிருகசீரிஷம் நட்சத்திரக்காரர்களை பாம்பு கடிக்காது.
7. மூலம் நட்சத்திரக்காரர் நாய் பொம்மை வைத்திருப்பர்.
8. ஆறாம் அதிபதி தெசை காலங்களில் அதிகத் துயரங்கள் இருக்குமே தவிர உயிர் கண்டம் உண்டாகாது.
9. கேது தெசை கேது 6, 7 இல் இருந்தால் நல்லவையே நடக்கும். உணவுக்குப் பஞ்சம் இராது. அதாவது குடும்ப உறுப்பினருக்கு மட்டும் உணவு கிட்டும்.
10. மகர லக்கினத்துக்கு 10 ஆம் அதிபதி ஆறாம் வீட்டில் இருக்க, அந்த வீடு துலாம் இராசியானால் நீதிமன்றம் விவகாரங்கள் உண்டாகும்.
11. 11 ஆம் அதிபதி 6 இல் மறைய அந்தத் தெசை நடந்தால் தலை மறைவு வாழ்வு உண்டாகும்.
12. சூரியன் 6 இல் இருந்தால் பணவரவும், சந்திரன் இருந்தால் தாயாருக்குப் பகை உணர்வும், செவ்வாய் 6 இல் இருந்தால் இரத்தக்கறை படும். புதன் ஆறில் இருந்தால் புத்தகம் வியாபாரமும் குரு 6 இல் இருந்தால் மனபயமும், சுக்கிரன் 6 இல் இருந்தால் ஆண்குறி, விரை வீக்கமும் உண்டாகும். அதாவது அந்தந்தத் தெசைகளில் உண்டாகும்.
13. இராகு 6 இல் மறைய நரம்புத் தளர்வு உண்டாகும். சந்திரன் தெசை நடக்கும் போது அது 6 இல் இருந்தால் நினைவு மறதி (அம்னீஷியா) உண்டாகும்.

ரிஷப லக்னத்துக்கும் விருச்சிக லக்னத்துக்கும் 6 ஆவது வீடு தோஷம் தராது. மகரம், கும்பத்துக்கு 6 ஆவது வீடு தோஷம் தராது. 6 ஆம் அதிபதியும் லக்னாதிபதியும் பரிவர்த்தனை, உச்சம், வர்கோத்தமம் நிலையில் இருந்தால் தோஷம் உண்டாகாது.

6 ஆவது வீடு சுத்தமாய் இருந்தாலும் ஆறாம் அதிபதி வேறு இடத்தில் நீச்சமானாலும் இடருண்டாகும். இவையாவும் அனுபவத்தில் கண்டறியப்பட்டவை.

OOOOO

## பாவம் 7 – மணவாழ்வு

மனித வாழ்வு செம்மையுற இன்றியமையாதவை மனம்–மணம்–திருமணம். உடல், உள்ளம் யாவும் செம்மையுறச் செய்வது இல்லறம். இல்லறம் என்பது துறவறத்தை விடச் சிறந்தது. உடலில் சரிபாதி மனைவி. அவர் உடல் ஆடவரின் இடப்பக்கம் இருக்கவல்லது என்பதால்தான் சிவன்–உமை இருவரும் வல, இடமாய் உள்ளனர். நமது சட்டையில் பையும் கூட இடப்பக்கம் இருப்பதன் தத்துவம் இதயத்தோடு இயைந்த மனைவிக்கு ஒப்பானது பை என்பதே. வலக் கரம் செய்வது (தானம்) இடக் கைக்குத் தெரியக் கூடாது என்பது ஒருவர் செய்யும் தானம், தருமம் விளம்பரத்துக்கு அப்பாற்பட்டதாய் மனைவிக்குக் கூடத் தெரியக் கூடாது என்பதாகும். ஒருவருக்கு நல்ல மனைவி கிடைத்தால் எல்லாமே நல்லதாய் முடிந்துவிடும்.

மனைவியில் ஏழு வகை உண்டு என்று பௌத்த மதம் கூறுகிறது. அதாவது அவர்கள் குணத்துக்குத் தகுந்தாற்போல் வதிக்சமா, சோர்சமா, சூர்சமா, பகினிசமா, பத்னிசமா, பதசமா, கமலசமா என்பவை ஆகும். அதன் விளக்கங்கள் தற்போது தேவையில்லை.

ஒருவர் ஜாதகத்தில் ஏழாவது வீடே கணவர் / மனைவியைக் (களத்திரத்தைக்) குறிக்கும். பெரும்பாலும் 7 ஆவது வீடு சுத்தமாய் இருந்தால் நல்லது என்பர். ஏழாவது வீடு சுத்தமாய் இருந்தால் நல்லது என்ற முடிவுக்கு வரக்கூடாது. அந்த ஏழாம் அதிபதி 6, 8, 12 இல் மறைந்தாலோ, நீச்சம், உச்சமானாலோ, தீய கிரகங்களுடன் சேர்ந்தாலோ வாழ்வு தொல்லையாய், நரகமாய் இருக்கும்.

7 ஆம் அதிபதி உச்சம், நீச்சம், பகை, கெட்டவர் சேர்க்கையின்றி 5, 10, 11 ஆம் வீடுகளில் இருப்பதுவே நல்லது.

லக்கினத்திற்கு 12ஆம் வீடு மனைவியின் பூர்வீகத்தைக் குறிக்கும். ஆண் / பெண் ஜாதகத்தில் புதன் 7 இல் இருந்தால் ஆண் / பெண் தன்மையற்றவர்.

இனி 7 ஆம் பாவத்தின் வகைகளைக் காணலாம்.

1. **விதிவிலக்கு**

உச்சம், நீச்சம் ஆகாத கும்பம், மிதுனம், சிம்மம், தனுசு இராசி லக்னங்களுக்கு எல்லாமே விதிவிலக்கு.

2. **இருதார யோகம்**

மேஷ லக்னத்துக்கு 12 இல் (7 ஆம் அதிபதி சுக்கிரன் உச்சமாவதால்) திருமணமாகி, ஓரிரு வருடங்களில் மனைவியைப் பிரிந்து வேறு பெண்ணை மணப்பார். மனைவி வேறு திருமணம் செய்ய மாட்டார்.

ரிஷப லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி செவ்வாய் 9 இல் உச்சமாவதால் தந்தை வழியில் திருமணமாகி, அத்தை வீட்டுடன் தங்கி விடுவார்.

மிதுன லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி குரு 2 இல் உச்சமாகும். கலப்புத் திருமணமே நடக்கும். கணவர் / மனைவி ஏதோ ஒரு காரணத்தால் நீதி மன்றம் போவார்.

கடக லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி சனி 4 இல் உச்சமானால் சித்தார்த், அரவிந்தன், கௌதம் என்பவரால் நலமுண்டு. சுயம்வர மணம். 7இல் சூரியன் இருந்தால் பிறமொழிப் பெண்ணை மணப்பார்.

சிம்ம லக்னத்துக்கு மணவாழ்வில் மனைவி / கணவர் வழி இன்பம் எதிர்பார்த்த அளவு திருப்தியாய்க் கிடைக்காது.

கன்னி லக்னத்துக்குக் 7 ஆம் அதிபதி குரு 11இல் உச்சமானால் நல்ல துணை உண்டாகும்.

துலா லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி செவ்வாய் மகரத்தில் உச்சமானால் கணவர் / மனைவி துரோகமிழைப்பர், சுக்கிரனோ ஏழாம் அதிபதியோ 6 இல் மறைந்தால் பிற பெண்கள் / ஆடவர் தொடர்பு உண்டாகும். 8 இல் மறைந்தால் சந்தேகம் பெருகி பிரிவர். 12 இல் மறைந்தால் பிறருடன் சென்று விடுவர்.

விருச்சிக லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி சுக்கிரன் உச்சமானால் பிற மொழிப் பெண் / ஆணை மணப்பர்.

தனுசு லக்னத்துக்கு 7 ஆம் அதிபதி உச்சமாவது நல்லது. மனைவி / கணவர் தூரக்கிழக்கு நாட்டில் பணியாற்றுவார். பெரும்பதவி உண்டாகும்.

மகர லக்னத்துக்கு 7 இல் குரு உச்சமாவதும் நல்லதே.

கும்ப லக்னத்துக்கு மனைவி / கணவர் பதி விரதையாய் இருப்பார். ஆனால், கும்பம் லக்கினக்காரர்கள் முன்பின்னாய் இருப்பர். மனைவி அருமை தெரியாதிருப்பர்.

மீன லக்னத்துக்கு குரு 5 இல் உச்சமாவது மனைவி / கணவர் சம்பாதிக்கும் ஆணவத்தில் அலட்சியம் செய்வர்.

அதே போல், லக்னத்தில் இருந்தோ, இராசியில் இருந்தோ அல்லது சுக்கிரனில் இருந்தோ 7 ஆவது வீட்டில் கிரகங்கள் அல்லது 1 கிரகம் உச்சமானால் இருதார யோகம் உண்டு.

மேலும் 7 ஆம் அதிபதிகள் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன், குரு, சுக்கிரன் நீச்சமானால் திருமணம் நிச்சயதார்த்தத்துடன் நின்று, வேறு நாளில் வேறு ஒருவரை மணக்க நேரும்.

7 இல் ஒரு கிரகம் உச்சமாகி, இன்னொரு கிரகம் நீச்சமானால் இரட்டையரில் ஒருவரை மணப்பார். இவர்களுக்குப் பிறக்கும் குழந்தை சில நேரம் திருநங்கைகளாய்ப் பிறக்க வாய்ப்புள்ளது.

**நீச்சம்**

சூரியன் 7 இல் நீச்சமானால் மனைவி / கணவருக்கு நோய் உண்டு.

சந்திரன் 7 இல் நீச்சமானால் சகோதரி சண்டையால் கணவர் / மனைவி பிரிவர்.

செவ்வாய் 7 இல் நீச்சமானால் பல பெண்களுடைய சகவாசம் வரும்.

புதன் 7 இல் நீச்சமானால் ஆண்மை / பெண்தன்மை அறவே இருக்காது.

குரு 7 இல் நீச்சமானால் கணவர் மலையிலிருந்து உருண்டு விழுந்து இறப்பார். மனைவி வேறு மணம் செய்வார். புதன், குரு இணைந்தால் ஸ்டாப் நர்ஸ் மூலம் இடருண்டு.

சனி 7 இல் நீச்சமானால் பிற மாநிலத்தவரை மணப்பார்.

இராகு அல்லது கேது உச்சம், நீச்சமானால் நல்லவர்போல் நடித்து தகாதன செய்வார்.

**எந்த வீட்டில் இருந்தால்?**

7 ஆம் அதிபதி ஆட்சியாய் இருப்பது நல்லது.

7 ஆம் அதிபதி லக்கினத்தில் இருந்தால் வயது தகுதி அறிவுக்கு மேம்பட்டவரை மணப்பார்.

7 ஆம் அதிபதி 2 இல் இருந்தால் சந்தோஷம் இருக்காது.

7 ஆம் அதிபதி லக்கினத்துக்கு 3 இல் இருந்தால் தாமதத் திருமணம்.

4, 7ஆம் அதிபதி 9 இல் இருந்தால் தாய்மாமா, அத்தை பெண் மணப்பார்.

1, 5 இல் இருந்தால் தர்ம சிந்தனையுள்ள மனைவி அமைவார்.

1, 7 ஆம் அதிபதி 7, 8இல் இருப்பது நல்லதல்ல.

மற்றும் 10, 11 ஆம் வீடுகளில் இருப்பது நல்லது.

12 இல் 7 ஆம் அதிபதி இருந்தால் (கணவன் / மனைவி) நோய்வாய்ப்படுவார்.

எல்லா லக்னக்காரர்களும் இராசிக்காரர்களும் நட்சத்திரக்காரர்களும் காதல் வயப்படுவர் என்பதை மறக்கக்கூடாது. நான் நெருப்பு என்னை நெருங்கமுடியாது என்று வசனம் பேசுவதையோ, உன்னைத்தவிர

வேறு ஒருத்தியை நினைத்ததில்லை என்று சொல்வதையோ, நான் மாமிசம் சாப்பிட மாட்டேன், முட்டையைக்கூடத் தொட மாட்டேன் என்று மனத்தைத் தொடும் வார்த்தைகளையோ யாரும் நம்ப வேண்டாம்.

7 இல் சூரியன், சந்திரன் சேர்ந்தால் பெண் குழந்தை பாக்கியம் உண்டாகும்.

சூரியன், செவ்வாய் 2, 7, 8, 12 இல் சேர்ந்தால் கணவர் மனைவி பிரிந்து விவாகரத்து ஆகி வாழ்வர்.

சூரியன் + புதன்+ சுக்கிரன் இருந்தால் புத்திர பாக்கியம் குறைவு.

7 இல் குரு இருந்தால் பிற ஆடவர் ஸ்பரிசம் உண்டாகும்.

குரு + சுக்கிரன் 7 இல் இருந்தால் மாவட்ட ஆட்சியாளர் (கலெக்டர்) போன்ற பெருந்தொழில் புரிவோரை மணப்பர்.

7 இல் சனி இருந்தால் துடுக்கான காமம் உண்டு.

### 3. கலப்புத் திருமணம்

களத்திரகாரகன் அல்லது களத்திரஸ்தானாதிபதி நீச்சமானால் தாழ்ந்த குலத்தவரை மணப்பார்.

7 ஆம் அதிபதி 12 இல் நீச்சமாய் மறைந்தால் பதிவுத் திருமணம் செய்வார்.

7 ஆம் அதிபதி 12 இல் நட்பு வீட்டில் இருந்தால் கோவிலில் கலப்பு மணம் நடக்கும்.

சுக்கிரன் + சூரியன் சேர்ந்து அல்லது இராகு + சனி சேர்ந்து 2, 5, 7, 8 இல் இருந்தால் கால தாமதக் கலப்புத் திருமணம் உண்டாகும்.

2 இல் கிரகம் உச்சமானால் திருமணத்தன்று பெண் தப்பியோடி காதலரைக் கைபிடிப்பாள்.

7 ஆம் அதிபதி 3 இல், 5 இல் அல்லது 3 ஆம் அதிபதி 7, 5 இல் இருந்தால் சகோதரியிடம் தவறாய் நடந்து கொள்வார்.

7 இல் கேது பிற கிரகத்துடன் இருந்தால் கலப்பு மணம் நடக்காது. கேது தனித்திருந்தால் மதம் மாறிய மணம் நிகழும்.

7 இல் சந்திரன் நீச்சமாகி குருவால் பார்க்கப்பட்டால் அகதியைத் திருமணம் செய்வார்.

2 இல் சுக்கிரன், கேது இருந்தால் காதல் ஜோடி தற்கொலை செய்து கொள்வர்.

திருவாதிரை, பூரட்டாதி, விசாகம் நட்சத்திரக்காரர்கள் உடல் ஊனம் உள்ளவரை மணப்பர்.

சுக்கிரனையோ 7 ஆம் அதிபதியையோ சனி பார்த்தால் திருமணம் கிடையாது.

2 இல் அல்லது 7 இல் 5 கிரகங்கள் இருந்தால் திருமணம் கிடையாது.

12-இல் 1, 2, 3, 4 ஆம் அதிபதிகள் இருந்தால் ஒரே நாளில் இருவரும் மரிப்பர்.

குடும்ப லக்னாதிபதி அம்சத்தில் இருக்கும் இடத்துக்கு குரு அம்ச ரீதியாய் வரும்போது திருமணம் நிகழும்.

உச்ச வீட்டுக்கு 7-இல் அதே கிரகம் நீச்சமாகும்.

உயிர் எண், உடல் எண் 21-01-1961 = 3 என்றானால் வெற்றி உண்டு.

## 4. விதவை (வைதவ்ய) யோகம்

தவம் என்றால் நோன்பு. விநாயகர் என்றால் இவருக்குமேல் தலைவர் யாரும் இல்லை என்பது போல், விதவை என்றால் மேலான தவம் செய்பவள் என்று பொருள். கணவன் இறந்து, இழந்த பின் கணவன் உயிருடன் இருப்பது போல் பாவித்து செய்யப்படும் தவம் விதவம். அந்த வேள்வியை மேற்கொள்பவர் யாரோ அவர் விதவை. கைம்மை என்றும் நோன்பு செய்பவள் கைம்மையாட்டி என்றும் அழைப்பர்., இந்த நிலை வைதீகச் சடங்குகளில் கொடுமையானது. இந்த நிலை வரவிருக்கும் கிரக நிலை என்ன?

1. லக்னத்தில் சூரியன் + சந்திரன் அல்லது சூரியன் + செவ்வாய் அல்லது சூரியன் + குரு அல்லது சூரியன் + சுக்கிரன் அல்லது சனி + இராகு இருந்தால் விதவையாவார்.
2. 7 இல் புதன் உச்சமுற்றால், நீச்சமுற்றால் விதவையாவார்.
3. 2 இல் செவ்சாய் + புதன் இருந்தால் திருமணமாகி, பத்தாண்டுகளில் விதவையாவார்.
4. 7 ஆம் அதிபதி 4 இல் நீச்சமானால் (தனுசு லக்னத்துக்கு இது பொருந்தும்) வாகன விபத்தில் கணவர் மரித்து விதவையாவார்.
5. திருவோணம் நட்சத்திரக்காரப் பெண்களுக்குக் கணவர்கள் விபத்தில் உயிர் இழப்பது கண்கூடு.
6. 7 ஆம் அதிபதி லக்கினத்தில் இருந்தால் கணவர் மனைவி பிரிவு உண்டு. அல்லது கணவர் இறப்பார்.
7. களத்திரகாரகனும் களத்திரஸ்தானாதிபதியும் 6, 8, 12 இல் மறைந்தால் கணவர் இறப்பார்.
8. சூரியன் + சந்திரன் + செவ்வாய் + புதன் எல்லாம் ஒரே வீட்டில் இருக்கும் ஜாதகர் திருமணமான காலத்தில் 10 நாளில் மரணமடைவார்.
9. 7 ஆம் அதிபதி கடகம், விருச்சிகத்தில் இருந்து, லக்னத்தில் இருந்து, 8 ஆம் வீடாய் இருந்தால் வெளிநாட்டில் கணவர் இறந்து விடுவார்.
10. அசுபதி, சதயம் முதலிய நட்சத்திரப் பெண்களுக்குக் கணவர் சரியாய் வாழ்வது இல்லை.
11. பெரும்பாலும் சிம்மம், கும்பம் லக்கினக்கராா்கள் கலப்பு மணத்தை எதிர்த்தாலும் கலப்பு மணமே அமையும். தீர்க்க சுமங்கல்யம் உள்ளவராவார்.
12. ரேவதி, பரணி நட்சத்திரப் பெண்களுக்குச் சுமங்கல்ய பலமுண்டு
13. 7 இல் சுக்கிரன் இருப்பின் அண்ணியின் சகோதரன் மனைவியுடன் களவு உண்டாகும்.
14. சூரியன் + இராகு சேரின் மாமன் மனைவியை புணர்வார்.

**5. திருமணமாகாத ஜாதகம்**

1. 7 ஆவது வீட்டைச் சனி பார்த்தால் திருமணமில்லை.
2. 2, 7, 8 இல் கூட்டு கிரகம் இருந்தால் திருமணமில்லை.
3. 2 ஆம் அதிபதி (குடும்பாதிபதி ) 6 இல் மறைந்தால் திருமணமில்லை.
4. லக்கினாதிபதி, இரண்டாம் அதிபதி சேரினும் திருமணமில்லை.
5. 7 இல் புதன் அல்லது உச்ச சுக்கிரன் பார்வை இருப்பின் திருமணமில்லை.
6. சூரியன் நீச்சமாகி 10 இல் இருந்தாலும் திருமணமில்லை.
7. 2 ஆம் அதிபதி உச்சமானால் இருதார யோகம். 2 ஆம் அதிபதி அல்லது 7 ஆம் அதிபதி, 10 ஆம் அதிபதியுடன் இருந்தால் மனைவியின் சகோதரியை மணப்பார்.

இவ்வகை அமைப்புள்ளவர் குலதெய்வ ஆராதனை மூலம் நல்வாழ்வு பெறலாம்

OOOOO

## பாவம் 8 - ஆயுள்

மனித வாழ்வில் உலகில் பிறந்த ஒவ்வொருவருமே தாம் 89 வயதுக்குமேல் இருப்போம் என்றும் மறுபிறப்பற்றவர் என்றும் நினைத்துக்கொள்வது இயல்பே. எனினும் நாம் பிறந்த உடனேயே மூச்சுவிடத் தொடங்குகிறோமல்லவா? ஒவ்வொரு மூச்சும் நம்மை மரண காலத்தை நோக்கியே அழைத்துச் செல்கிறது என்ற உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

ஒருவர் ஜாதகத்தில் லக்கினத்துக்கு 8 ஆவது வீட்டைக் கொண்டு அவருடைய ஆயுள் பலத்தை அறியலாம். பொதுவாய் 8 ஆவது வீடு சுத்தமாய் இருக்க வேண்டும் என்பதே நியதி. எனினும் 8 ஆவது வீடு சுத்தமாய் இருந்தும் அந்த வீட்டு அதிபதி உச்சமாகவோ நீச்சமாகவோ மறைவிடத்திலோ இருந்தால் நீண்ட ஆயுள் என்று சொல்வதற்கில்லை. நீச்சமானால் துர்மரணம் உண்டாகலாம்.

எந்த வகையில் ஒருவருக்கு உயிர் பிரியும் என்பதைப் பார்ப்போம்.

**8 இல் நீச்சம்**

ஒருவர் ஜாதகத்தில் லக்னத்துக்கு 8 இல் சூரியன் நீச்சமானால் தீ விபத்தில் உயிரிழப்பார்.

சந்திரன் நீச்சமானால் வெள்ள அபாயத்தில் நீச்சமான தெசா காலத்தில் உயிரிழப்பார்.

செவ்வாய் நீச்சமானால் இரத்தத்தில் இரும்புச் சத்து (ஹிமோகுளோபின்) குறைந்து மூச்சிரைச்சலுற்றும் உயிரிழப்பார்.

புதன் நீச்சமானால் மனபயம், சித்தபிரமையாலும், குரு நீச்சமானால் பசியாலும், சுக்கிரன் நீச்சமானால் புயல் காற்றாலும் உயிரிழப்பார்.

இராகு நீச்சமானால் வன்முறையாளர்களால் தாக்கப்பட்டு உயிரிழப்பார்.

கேது நீச்சமானால் விஷ மருந்தினால் உயிரிழப்பார். கேது 8இல் இருந்தால், விஷ மருந்து தான் உண்ணுதல் மட்டுமின்றி, பிறரால் வலுக்கட்டாயமாகத் தரப்படலாம். அல்லது சொல்லாமல் விஷம் அளிக்கலாம். எனவே நாகரீகம் கருதி முன்பின் அறிமுகமில்லாத இடங்களில் உணவு உண்ணாமல் இருப்பதே பரிகாரமாகும்.

மேற்கண்ட யாவும் லக்கினத்துக்கு 8 இல் இருந்தால் நிகழும். மேலும் குரு நீச்சமானால் மலை உச்சியில் இருந்து உருண்டு உயிர் பிரியும். கேது 8இல் இருந்தால் பாம்பு கடித்து உயிர் இழப்பார்.

**மற்ற லக்னத்தில் நீச்சம்**

கிரகங்கள் லக்னங்களில் நீச்சமானால் முழு மயக்க நிலை அடைந்தும் தலை துண்டிக்கப்பட்டும் இடி விழுந்தும் உயிர் இழப்பார்.

சூரியன் 1 இல் நீச்சமானால் மயக்கநிலை உண்டாகும்.

சந்திரன் லக்கினத்தில் நீச்சம் ஆனால் மறதி, மயக்கம் உண்டு. செவ்வாய் 1 இல் நீச்சமானால் பிரமை பிடிக்கும். புதன் 1 இல் நீச்சமானால் பல் உதிர்ந்து இரத்தம் வடிந்து உயிர் இழப்பார். குரு, சனி போன்றவை லக்கினத்தில் நீச்சமானால் விபத்தை உண்டாக்கும்.

மேற்கண்ட கிரகங்கள் லக்னத்துக்கு 2 இல் நீச்சமானால் சூரியன் என்றால் புகையிலை போட்டு புற்று நோய் உண்டாகி உயிரிழப்பார். சந்திரன் எனில் மதுஅருந்தி உயிர் இழப்பார். தொண்டை அடைப்பான் (டான்ஸில்) உண்டு. செவ்வாய் நீச்சமானால் கிணற்றில், கடலில் விழுந்து இறப்பர்.

மேற்கண்ட கிரகங்கள் லக்னத்துக்கு 3, 4, 9 ஆகிய இடங்களில் நீச்சமானால் சகோதரர், தாயார், தந்தை வழி உறவு பகையால் உயிர் இழப்பார். 4 இல் ஒரு கிரகம் நீச்சமானால் வாகன விபத்தில் கண்–இருதய அறுவை சிகிச்சையில் உயிரிழப்பார்.

5 இல் மேற்கண்ட கிரகங்கள் நீச்சமானால் புத்திர சோகத்தில் உயிரிழப்பார்.

6, 8, 12 இல் இருந்தால் கடனுபாதையில் தற்கொலை செய்து கொள்வார்.

7 இல் நீச்சமானால் தவறான ஆண் / பெண் பழக்கம், எய்ட்ஸ் நோய் கண்டு உயிரிழப்பார்.

10 இல் நீச்சமானால் தொழில் கடன் உண்டாகி உயிர் இழப்பார்.

12 இல் சனி, இராகு இருந்தால் யானைக்கால் நோய் உண்டாகி உயிர் இழப்பார். 12 இல் புதன் இருந்தால் அந்தத் தெசை நடந்தால் கால்வீக்கம் உண்டாகி உயிர் பிரியும்.

சந்திரன், சுக்கிரன் ஒரே வீட்டில் இருக்க அருவியில் குளிக்கப் போனால் மூச்சுத் திணறி உயிர் பிரியும்.

சுக்கிரன் கோரிக்கைக்கு அதிபதி என்பதால் சுக்கிரன் எந்த இடத்தில் நீச்சமாய் இருந்தாலும் ஒன்றும் செய்யாது. இது விதிவிலக்கு.

கேது 8இல் இருந்தால், விஷ மருந்து தான் உண்ணுதல் மட்டுமின்றி, பிறரால் வலுக்கட்டாயமாகத் தரப்படலாம். அல்லது சொல்லாமல் விஷம் அளிக்கலாம். எனவே நாகரீகம் கருதி முன்பின் அறிமுகமில்லாத இடங்களில் உணவு உண்ணாமல் இருப்பதே பரிகாரமாகும்.

**8 இல் உச்சம்**

சூரியன் 8 இல் உச்சமானால் குளிராலும், சந்திரன் உச்சமானால் தாகத்தாலும், செவ்வாய் உச்சமானால் உயர் இரத்த அழுத்தத்தாலும், புதன் உச்சமானால் அதிகக் கொழுப்பாலும், குரு உச்சமானால் அதிக சிந்தனை வயப்படுதலாலும் உயிர் பிரியும். சுக்கிரன் 6இல் உச்சமானால் மனைவியால் கொல்லப் படுவார். (உச்சமாகி 6 இல் மறைந்தால்,) சனி 8இல் உச்சமானால் இரும்பு தாக்கப்பட்டு உயிர் இழப்பார். இராகு உச்சமானால் சிற்றப்பாவாலும் கேது உச்சமானால் மாமாவாலும் மரணமுண்டு. இவை யாவும் 8 ஆம் வீட்டில் இருந்தால் உண்டாகும்.

இராகு உச்சமாகி லக்னத்தில் இருந்தால் இடி இடித்து தலையில் விழுந்து உயிர் பிரியும்.

**நீண்ட ஆயுள்**

லக்னத்தைச் சனி 10 ஆம் பார்வையாலும், செவ்வாய் 8 ஆம் பார்வையாலும், குரு 9 ஆம் பார்வையாலும் பார்த்தால் நீண்ட ஆயுள் 85 வயது வரை உண்டு.

சனியோ ஆயுள் ஸ்தானாதிபதியோ ஆட்சியாய் இருந்தால் நீண்ட ஆயுள் உண்டு.

லக்னத்துக்கு 8 இல், இரண்டில், லக்னத்தில் சனி இருந்தால் நீண்ட ஆயுள் 90 வயது உண்டு.

இராசியில் அல்லது அம்ஸத்தில் லக்கினம் + சந்திரன் இணைந்தால் 96 வயது உண்டு.

மனிதனுக்குப் பூரண ஆயுள் என்பது 120 வருடங்கள். அதாவது தான் பிறந்த தெசா புக்தி மீண்டும் வரும் வரை வாழ்ந்தால் 120 வயது உள்ளவராவார். மத்திம ஆயள் 60 வயது. அற்பாயுள் 40 வயது. 80 வயது வாழ்பவர்கள் வணங்கத் தகுந்தவர்கள்.

ஒருவர் ஜாதகத்தில் உச்சம், நீச்சம் இல்லாதிருந்தால் நீண்ட ஆயுள் உண்டு. எல்லா தெசைகளிலும் இராசிநாதனுக்கு 8 ஆவது வீட்டு புத்திநாதன் புத்தியில் உயிர்கண்டம் உண்டாகும். புத்திநாதன் ஆட்சி அல்லது வர்கோத்தம நிலை அடைந்திருந்தால் நீண்ட ஆயுள் உண்டு.

பஞ்சபூதங்களால் உண்டான தேகம் பஞ்சபூதங்கள் ஒன்றால்தான் மரணமடைவார்.

**கொலையும் தற்கொலையும்**

தொழிலாளர் நலச்சட்டபடி தொழில் வளாகத்தில் நடக்கும் கொலை விபத்தாகக் கருதப்படும். தற்கொலை விபத்தாய்க் கருதப்பட மாட்டாது.

1. ஒரு ஜாதகத்தில் லக்கினத்துக்கு 8 இல் சூரியன், சந்திரன், செவ்வாய், புதன் கூடியிருந்தாலோ, கோச்சாரப்படி கூடியிருக்கும் நேரத்திலோ வாகனத்தில் கோர விபத்து அடைந்து உயிர் இழப்பார்.

2. லக்கினத்துக்கு 6 இல் சூரியன், செவ்வாய், இராகு கூடின் பல பேரால் அடித்துத் துன்புறுத்தப்பட்டு இறப்பார்.

3. லக்கினத்துக்கு 12 இல் கூட்டு கிரகம் அதாவது புதன், குரு, இராகு, செவ்வாய் இருந்தால் துப்பாக்கி குண்டுக்கு இரையாவார்.

4. சந்திரன் நீச்சமாகி, கடகத்தில் குரு இருந்தால் படகு மூழ்கி உயிர் இழப்பார்.

5. 8 ஆம் வீட்டில் 2 ஆம் வீட்டு அதிபதி இருந்தால் இராகு-கேதுவால் பார்க்கப்பட்டால் அதிகம் உணவு உண்டு உயிர் இழப்பார்.

6. 2 இல் கேது அல்லது செவ்வாய் இருந்தால் விஷமருந்தி தற்கொலை செய்து கொள்வார்

7. கேட்டை- அனுஷக் கால்களில் எட்டாம் அதிபதி நீச்சமானால் நாய்க்கடியால் உயிர் பிரியும்.

8. ரேவதி - பரணி நட்சத்திரக்காரர்களுக்கு பூனையால் தொற்றுநோய் உண்டாகும். பூரட்டாதி. அவிட்டம் நட்சத்திரக்காரர்கள் யானையிடம் கவனமுடன் இருப்பது நல்லது.

9. 8 இல் சந்திரன் இருந்தால் கடனுபாதையால் உயிர் இழப்பர்.

10. 6 ஆம் அதிபதி 8 இல் இருந்தால் வயல் வரப்பில் மயங்கி உயிர் இழப்பர்.

11. 8 இல் சனி அல்லது சூரியன் இருந்தால் ரீச்சமானால் இரயிலடியில் உயிர் பிரியும்.

12. புதன், குரு நீச்சமானால் எலும்பு தேய்ந்து உயிர் பிரியும்.

13. சனி, செவ்வாய் பரஸ்பர பார்வை நெருப்பு அபாயம் உண்டு.

**இயற்கை மரணம்**

ஆயுள்காரகனும் ஆயுள் ஸ்தானாதிபதியும் உச்சம் நீச்சமின்றி ஆட்சி வீட்டில் இருந்தால் இயற்கையான மரணம் உண்டாகும். ரோகிணி, அனுஷம் ஆகிய தேவகணங்களுக்கு இயற்கை மரணம்

உண்டு. சுவாதி நட்சத்திரக்காரர் மரண பயம் இன்றி உயிரை விடுவார். பௌர்ணமியில் உயிர் பிரியின் நன்று. அமாவாசையில் உயிர் பிரியின் சுமாரான பலனே உண்டாகும். தனிஷ்டா பஞ்சமி என்பதெல்லாம் பார்க்க வேண்டியதில்லை. தீபம் ஏற்றல் போன்றவையும் தேவையில்லை. அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி நட்சத்திரங்களில் உயிர் பிரிந்து தனுஷ்டா பஞ்சமி கன்னக்கோள் வேண்டாம்.

செவ்வாயும் சூரியனும் பரிவர்த்தனையாகி இராகுவால் பார்க்கப்பட்டால் கலவரத்தில் உயிர் பிரியும்.

சுக்கிரன் நீச்சமாகி குருவால் பார்க்கப்பட்டால் அமிலங்களால் உயிர் பிரியும். புதன் நீச்சமாகி செவ்வாயால் பார்க்கப்பட்டால் பள்ளத்தில் விழுந்து உயிர் பிரியும்.

சனி நீச்சமாகி செவ்வாயால் பார்க்கப்பட்டால் கத்தி ஆயுதங்களால் உயிர் பிரியும். இராகு + செவ்வாய் சேர்ந்து சனியால் பார்க்கப்பட்டால் கொதிக்கும் வெந்நீர், எண்ணெய் பட்டு உயிர் பிரியும்

6 ஆவது வீட்டில் 5, 6, 7, 8 ஆம் அதிபதிகள் இருந்தால் நண்பர்கள் குழுமியிருக்க உயிர் பிரியும். குத்திக் கொல்லப்படுவார்.

சிம்மம், மிதுனம், கும்பம், தனுசு லக்னக்காரர்களுக்கு இயற்கை மரணம், சுப மரணம் உண்டு. புதன் நீச்சமாகி செவ்வாயால் பார்க்கப்பட்டால் நுரையீரல் நோயால் உயிரிழப்பர்.

சுக்கிரன் + புதன் சேர்ந்தால் புற்று நோய் தாக்கும். சுக்கிரன் + சூரியன் சேர்ந்து 6 இல் இருந்தால் தோல் ஒவ்வாமை (அலர்ஜி) உண்டாகும். குரு + சனி சேரின் தசை நரம்புப் பிடிப்பு உண்டாகும்.

அசுபதி , அவிட்டம், ஆயில்யம், ஹஸ்தம், அனுஷம் ஆகிய நட்சத்திரக்காரர்கள் நீண்ட ஆயுள் அடைவர்.

புனர்பூசம், பூசம் நட்சத்திரக்காரர்கள் கணவர் / மனைவியால் தொல்லையுறுவர். சதயம் நட்சத்திரக்காரர்கள் காது–தொண்டைவலியால் அவதியுறுவர். மகம், பூரம் நட்சத்திரக்காரர்கள் பாம்பு பயம் உள்ளவர்.

லக்னத்துக்கு 5, 11 இல் இராகு, கேது இருந்தால் பாம்பு கடித்து உயிரிழப்பர். சனி + இராகு சேர்ந்து 6 இல் இருந்தால் அம்மை போட்டு உயிர் இழப்பர்.

பரணி, பூரம் நட்சத்திரக்காரர்கள் மருந்து மாத்திரையால் உயிர் இழப்பர்.

உத்திரம், உத்திரட்டாதி, புனர்பூசம் நட்சத்திரக்காரர்கள் பிற மாதர் தொடர்பால் நோயுற்று இறப்பர்.

9 இல் கூட்டுக்கிரகம் இருந்து சனியால் பார்க்கப்படின் பெற்றோர் இருவரும் ஒரே நாளில் இறப்பர். இராகு + செவ்வாய் லக்கினத்துக்கு 3 இல் இருப்பின் பெற்ற மகனாலோ உடன்பிறந்த சகோதரியாலோ வஞ்சிக்கப்பட்டு உயிரிழப்பார்.

புதன் + இராகு + செவ்வாய் சேரின் தொழுநோயால் அவதிப்பட்டு உயிர் இழப்பர்.

சூரியன் நீச்சமாகி, சந்திரனால் பார்க்கப்படின் மாலைக்கண் நோய்கண்டு இறப்பர்.

குரு + இராகு சேர்ந்து மகரத்தில் இருந்தால் தனியறையிலோ குகையிலோ சிக்கி மூச்சுத் திணறி இறப்பர்.

சுக்கிரன் நீச்சம் உப்பு நோயால் ( சந்திரன் + சுக்கிரன் நீச்சம்) உயிர் இழப்பார்.

சந்திரன் + புதன் சேர்ந்து 6 இல் இருந்தால் பாலில் விஷம் கலந்து உயிரிழப்பர். புதன், கேது, சந்திரன் சேரின் பிறரால் விஷம் பாலில் கலந்து தர உயிர் இழப்பர். புதன் + குரு சேரின் நீதிமன்ற வழக்கால் உயிர் இழப்பர். புதன், சுக்கிரன் சேரின் விவசாயக் கடனால் உயிர் இழப்பர்.

10 ஆம் அதிபதி நீச்சமாகி 2 இல் கேது இருந்தால் தொழில் நட்டமுண்டாகி உயிர் துறப்பர்.

OOOOO

## அலகு V

## பாடம் 16 – பன்னிரு பாவங்கள் – பலன்கள் – 9, 10, 11, 12 வீடுகள்

### பாவம் 9 – தந்தை

லக்னத்துக்கு 9 ஆம் வீடு தந்தையின் நிலைமையைக் குறிக்கும்.

9 ஆம் அதிபதி சூரியனானால் தந்தை இரயில்வே நெருப்பு இயந்திரம் போன்ற துறை, கிராம தாலுகா அதிகாரியாவார்.

9 ஆம் அதிபதி சந்திரனானால் கப்பல், மதுக்கடை, தண்ணீர் வாரியம், வடிகால்வாரியம், கணினி பணியில் இருப்பார்.

9 ஆம் அதிபதி செவ்வாயானால் இராணுவம், வெடிமருந்துத்தொழில் செய்வார்.

9 ஆம் அதிபதி புதன் எனில் தட்டச்சு அலுவலர், பத்திரிகை இயலறிஞர், கணக்காயர் ஆவார். கிருஸ்துவரெனில் மதபோதகராவார்.

9 ஆம் அதிபதி குருவானால் வக்கீல், பேராசிரியர், பொன்வாணிபர், நூலக அதிகாரியாய் இருப்பார். மொழிஆசிரியர் ஆவார்.

9 ஆம் அதிபதி சுக்கிரனானால் மருத்தவர் ஆவார். வண்டி வாகனம், உரம், சினிமா, துணி (டெக்ஸ்டைல்) அலுவலராவார்.

9 ஆம் அதிபதி சனியானால் வேலையற்றவராவார்.

9 இல் இராகு அல்லது கேது இருப்பின் பஞ்சாயத்துத் தலைவராவார்.

9 ஆம் அதிபதி நீச்சமானால் அலுவலகத்தில் உதவியாளர் வேலையில் (அட்டெண்டர்) பணியாற்றுவார். உச்சமானால் பெரும்பதவி பெறுவார் (கலெக்டர், வருவாய் கோட்ட அதிகாரி). 9 ஆம் அதிபதி ஆட்சியானால் தந்தை நீண்ட ஆயுளுடன் இருப்பார். 9 ஆம் அதிபதி வர்கோத்தமமானால் தந்தை மனஉறுதி உள்ளவராய் இருப்பார்.

மூத்த மகனுக்கு 10 ஆம் அதிபதி தெசை நடக்கும் காலத்தில் தந்தைக்கு உயிர் கண்டமுண்டு. 4 ஆம் அதிபதி அல்லது சந்திரன் தெசை நடக்கும்போதும் சந்திரன் புக்தி நடக்கும்போதும் தாயாருக்கு மரணமுண்டு. செவ்வாய் தெசை நடக்கும்போதும், 3 ஆம் அதிபதி தெசை நடக்கும்போதும் சகோதரருக்கு மரணமுண்டு.

சனி மூன்றாம் பார்வையால் எதைப் பார்க்கிறதோ அது கெட்டுவிடும்.

சூரியன், சந்திரன் சேர்ந்து ஒரு வீட்டில் இருந்தாலோ சூரியன் + 9 ஆம் அதிபதி + 4 ஆம் அதிபதி ஒரே வீட்டில் இருந்தாலோ பெற்றோர் பிரிந்து வாழ்வர்.

9 ஆம் அதிபதி  உச்சமானால் தந்தை வேறு பெண் தொடர்பு உடையவர். 9 ஆம் அதிபதி நீச்சமானால் உடலாரோக்கியமற்றவர்.

9 ஆம் அதிபதி  லக்னத்தில் இருந்தால் தந்தை பெரும் பதவி உள்ளவர். லக்னத்துக்கு 2 இல் 9 ஆம் அதிபதி இருந்தால் தந்தை ஆசிரியர். துலாம் இராசியில் இருந்தால் வக்கீல். மீனத்தில் இருந்தால் கருவி பயிற்சியாளர். 3 இல் இருந்தால் தம்பி வீட்டில் கூட்டுக் குடும்பம் இருப்பர். 4 இல் இருந்தால் மனைவியின் தங்கை வீட்டில் இருப்பர். 5 இல் இருந்தால் தனி வீடு அமையும் 6, 8, 12 இல் இருந்தால் தந்தை தேசாந்தரியாவான். 7 இல் இருந்தால் சண்டையிடும் குணமுள்ளவர். 9, 10, 11 இ ல் இருந்தால் கடமை தவறாதவராவார்.

லக்னத்திற்கு 4 இல் சூரியன் இருந்தால் ஜாதகரின் சிறுவயதிலேயே அவரது தந்தை மரணமடைவார். லக்கினத்துக்கு 9 இல் சந்திரன் இருந்தால் ஜாதகரின் தாயார் ஜாதகரின் 8 வயதுக்குள் மரணமடைவார். அதாவது சந்திரன் தெசையோ சூரியன் தெசையோ நடந்தால் ஏற்படும்.

சூரியனும் புதனும் சேர்ந்து இராகுவால் பார்க்கப்பட்டால் தந்தைக்கு தோல் ஒவ்வாமை (அலர்ஜி) வரும்.

எப்போது தந்தைக்கு மரணம் வரும்?

மேஷம், துலாம் லக்னங்களுக்கு குருதெசை புதன் புக்தி  காலங்களில் தந்தைக்கு மரணம் உண்டாகும். ரிஷபம், விருச்சிகம் லக்னங்களில் பிறந்தவர் தந்தைக்கு சனிதெசை சுக்கிரன்புத்தி காலங்களில் தந்தை உயிர் பிரியும். மிதுனம் தனுசு லக்னக்காரர்களின் சூரியன்தெசை சனிபுக்தி காலங்களில் தந்தைக்கு மாரகம் உண்டாகும். கடகம், மகரம் லக்னக்காரர்களுக்கு சந்திரன் தெசையில் தந்தைக்கு இடர் மரணமுண்டாகும். சிம்மம் கும்பம் லக்னக்காரர்களுக்குச் சுக்கிரன் தெசையிலும் கன்னி, மீனம் லக்கினக்காரர்களுக்குக் குருதெசையிலும் தந்தைக்கு இடர்  உண்டுபண்ணும்.

பால்ய சுக்கிரன் நடக்கும்போது பெற்றோருக்கு மரணம் உண்டாகும் என்பதற்கு போதிய ஆதாரம் இல்லை. மாமா, சிற்றப்பா வீட்டில் தங்க நேருவதால் தந்தைக்கு நலமே உண்டாகும்.

OOOOO

# பாவம் 10 – தொழில்

ஒருவர் ஜாதகத்தில் லக்கினம், 5 ஆம் வீடு, பத்தாம் வீடு ஆகிய வீடுகளைக் கொண்டே அவருடைய செல்வாக்கையும் செல்வத்தையும் பதவி நலனையும் காணமுடியும். ஒருவர் ஜாதகத்தில் 2, 5, 7, 8, 10, 11 ஆகிய ஸ்தானங்கள் நல்லதாய் அமைந்துவிட்டால் அதன்பின் கவலை ஏதும் இராது. தொழிலையும் பணத்தையும் வைத்துதானே மனிதர்களை எடைபோடுகின்றனர்? சுயதொழில் செய்தாலும் தானே எதையோ கண்டுபிடித்தாலோ முதலில் ஏளனத்துக்கே ஆட்படுகின்றனர். பழகப் பழக மக்கள் உண்மையை உணருவர்.

முதன் முதலில் புகைவண்டி அறிமுகமானபோது அது மனிதர்களை சுமந்துகோண்டு வேகமாய் ஓடுவதைப் பார்த்து இது கொள்ளிவாய்ப் பிசாசு என்று பயந்தனர். பின்னர் வியந்தனர். முதன்முதலில் தொலைபேசி அறிமுகம் ஆனபோது ஹைதராபாத் நிஜாம் கண்ணுக்குத் தெரியாமல் பேச்சுகேட்பது சைத்தான் வேலை என அனுமதி கொடுக்க மறுத்தார். ஆனால் தந்திரசாலியான ஆங்கிலேயர்கள் கைக்கூலிகளைக் கொண்டு தொலைபேசி மூலம் குர்ஆனை ஓத வைத்து சைத்தான் வேதம் ஓதாது என்ற நம்பிக்கையுள்ள நிஜாமிடம் இருந்து டெலிபோனை அலுவலகத்தில் வைக்க அனுமதி பெற்றது. யாவரும் அறிந்ததே.

பெண்கள் பருவ நிலைகள் ஏழு. ஆண்கள் பருவ நிலைகள் ஏழு. நாட்கள் ஏழு, ஆடு வகை ஏழு, இசை ஏழு என்பன போல் தொழில் வகைகளையும் ஏழாய்ப் பிரிக்கலாம். அவை:

1. மத்திய அரசுப் பணி
2. மாநில அரசுப் பணி
3. கழகம் (கார்ப்பரேஷன்)
4. தனியார் துறை
5. சுய தொழில்
6. குடும்பத் தொழில் (குலத்தொழில்) (தனித்தொழில்)
7. கூட்டுத் தொழில்

**1. ஆட்சியானால்**

1. லக்னத்துக்குச் சூரியன் 10 இல் இருந்தால் (ஆட்சியுற்றால்) விருச்சிகம் லக்கினம் கேந்திரீய வித்யாலாயா தலைமை ஆசிரியர், கலெக்டர், இரயில்வே டிவிஷனல் மேலாளர், மந்திரி போன்ற பெரும்பதவி வகிப்பர்.

2. லக்னத்துக்கு 10 இல் சந்திரன் ஆட்சிபெறின்:கப்பல் மாலுமி, சிக்னல் ஆபீஸர். கப்பற்படைத் தளபதி ஆகிய பதவி உண்டு. (துலாம் லக்னம்)

3. லக்னத்துக்கு 10 இல் செவ்வாய் ஆட்சியானால் (கடகம் லக்கினம்) இராணுவ அதிகாரி. சர்ஜன், செவ்வாழை பயிர் ஆய்வாளர், இரத்தப் பரிசோதகர் ஆவார்.

அதே போல் லக்னத்துக்கு 10 இல் சூரியன் ஆட்சி, உச்சம், நீச்சம், வர்கோத்தமமற்று இருந்தால் புரோகிதர். 10 இல் சந்திரன் மேற்சொன்னபடி இருந்தால் மீனவர். செவ்வாய் இருந்தால் விவசாயி.

4. லக்னத்துக்கு 5, 10 இல் புதன் ஆட்சியுற்றால் கணக்காசிரியர். சாதாரணமாய் 10, 5 இல் இருந்தால் அக்கவுண்ட்டண்ட். கன்னி லக்கினமாயின் விமானி (பைலட்).

5. 10 இல் குரு ஆட்சி பெற்றால் ஆன்மீகவாதி. ஆன்மீகச் சொற்பொழிவாளர். (மீனம் லக்கினம்)

6. 10 இல் குரு இருந்தால் (தனுர், மிதுனம் லக்கினம்) வெளிநாட்டு வேலை. 10 இல் செவ்வாய் (மேஷம் லக்னம்) சுரங்கம், மின்னியல், இரசாயனம், மருத்துவம் (சுரங்கம், எலக்ட்ரிக்கல் கெமிக்கல் மெடிக்கல்) தொழில்.

7. லக்கினத்துக்கு 10 இல் சுக்கிரன் ஆட்சியானால் (சிம்மம் லக்னம்) மருத்துவர்.

8. லக்னத்துக்கு 10 இல் சனி ஆட்சியானால் (மேஷம் லக்னம்) எஸ்டேட் இஞ்சினியர். ரிஷபம் லக்னம் மேனேஜமெண்ட் இஞ்சினியர் ஆவார்.

9. லக்னத்துக்கு 10 இல் கேது இருந்தால் மயானம் காப்பாளர். இராகு இருந்தால் கள்ளக்கடத்தல் அலுவலர்.

**2. உச்சமானால்**

10இல் சூரியன் (கடகம் லக்கினத்துக்கு) உச்சமானால் அனல்மின்நிலைய அதிகாரியாவார். சீனா, பாக்கிஸ்தான் தூதரகப் பணியாற்றுவார் (பகை நாட்டுத் தூதுவர்).

10 இல் சந்திரன் உச்சமானால் (சிம்மம் லக்கினம்) நெருப்பு எஞ்சின் அலுவலர். சதுரங்கம் – கேரம்போர்டு சேம்பியன். இந்து அறநிலையத்துறை அலுவலர்.

10 இல் செவ்வாய் உச்சமானால் (மேஷம்) தலைமை மின்பொறியாளர். கிரானைட் அலுவலர். கால்நடை மருத்துவர்.

10 இல் சூரியன் உச்சம், நீச்சம், ஆட்சியற்று சாதாரணமாய் இருந்தால் தேநீர், காப்பி கடை வைப்பார்.

சந்திரன் 10ல் இருந்தால் பொதுப்பணித்துறை, குடிநீர் வாரியம் வேலை அமையும். செவ்வாய் இருந்தால் கல் சுரங்கத்தில் கல் உடைப்பார்.

10 இல் புதன் உச்சமானால் தூதரகம் (ஆஸ்திரேலியா, இந்தோனேஷியா) பணியாற்றுவார். சி.ஏ. படித்து உள் கணக்குத் தணிக்கையாளர் ஆவார். 10 இல் புதன் சாதாரணமாய் இருந்தால் நியூஸ் ஏஜென்ஸி நடத்துவார்.

10 இல் குரு உச்சமானால் மும்மாநில அலுவலர், மனிதவள மேம்பாடு மேலாளர், மீன் வளத்துறை மந்திரியாவார். சாதாரண இடத்தில் இருந்தால் ஆரம்பப் பள்ளி மேலாளராவார்.

10 இல் சுக்கிரன் உச்சமானால் டெக்ஸாஸ் மாநிலத்தில் கணினி அலுவலராவார். சாயப் பட்டறைத் தொழில் நடத்துவார்.

10 இல் சனி உச்சமானால் தரக் கட்டுப்பாடு அதிகாரி (க்வாலிட்டி கண்ட்ரோலர்).

10 இல் இராகு உச்சமானால் பொது (குடலியல்) மருத்துவர். லக்னத்தில் இருந்தால் இஞ்சின் டிரைவர்.

10 இல் கேது உச்சமானால் பொருளாதார நிபுணர். கண் மருத்துவர்.

மேற்கண்டவை யாவும் நீச்சமானால் அந்தந்தத் துறையில் அட்டண்டர், இளநிலை எழுத்தர் போன்று இருப்பர்.

9 கிரகங்களுள் எது வர்கோத்தமமானாலும் சுயதொழில் அமையும்.

பரிவர்த்தனையானால் க்வாசி அரசு, பேங்க் தொழில் அமையும்.

இருகிரகங்கள் ஒரே வீட்டில் இருந்து ஒரு கிரகம் உச்சமாகி, இன்னொரு கிரகம் நீச்சமானால் அனல்மின்நிலையப்பணி அமையும்.

ஆட்சி, உச்சம் கிரகம் (எடுத்துக்காட்டு;) செவ்வாய் + சூரியன் மேஷத்தில் இருந்தால் மத்திய அரசுப் பணி அமையும்.

10ஆம் வீடு குருபார்வை பெறின் மாநில அரசுப் பணி அமையும்.

செவ்வாய் + சுக்கிரன் உச்சம், நீச்சம் வைர வியாபாரி. செவ்வாய் + சுக்கிரன் சேரினும் அதுவே.

கேது + 10 ஆம் அதிபதி இருந்தால் புளி வாணிபர். 10 –இல் சூரியன் + புதன் + சனி இருந்தால் காகிதக் குவளை தயாரிப்பார்.

**பஞ்சபூதங்களும் தொழில்களும்**

கடகம், விருச்சிகம், மீனம் லக்னம் அல்லது இராசியை உடையவர்கள் பஞ்சபூதங்களில் ஒன்றான நீர் சம்பந்தத் தொழிலைச் செய்வர். அதாவது சந்திரன், செவ்வாய், குரு ஆதிக்கமுள்ள இவர்கள் கடகத்தில் சந்திரன் ஆட்சியுற்றால் வாழை ஆய்வு மையம், வேளாண்மைத் துறை, மெரீன் ஆற்றுப்படுகை ஆய்வு போன்ற தொழிலில் ஈடுபடுவர். விண்வெளிக்குச் சென்ற ஆம்ஸ்ட்ராங் கடகம் இராசி என்பது குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஆற்றுநீர், அணைக்கட்டு, பாசன அதிகாரியாவார். பூமியை அறுத்துச் செல்வதால் நீர்நிலைக்கு ஆறு என்று பெயர் வந்தது. அதே போன்று மனிதர்கள் பாதம் பட்ட நிலம் பட்டுப்போன இடம் பாதை என்றானது.

செவ்வாய் ஆதிக்கமுள்ள விருச்சிகம், இராசி–லக்கினம் உள்ள ஜாதகர் சற்று அமிலம் கலந்த திரவத் தொழில் செய்வார். 1 இல் பள்ளி, கல்லூரி ஆய்வுக்குட உதவியாளர். பிளிச்சிங் பவுடர், மருந்து போன்றவை தயாரிப்பார். இரத்தப் பரிசோதனை ஸ்கேன் போன்று எங்கெல்லாம் மை திரவம் உள்ளதோ அந்தத் தொழில் அது சம்பந்தமான தொழில் செய்வார்.

குரு ஆதிக்கமுள்ள மீனம் லக்னம்–இராசிக்காரர்கள் ஏற்றுமதி செய்பவர். ஆலோசகர், பொன் உருக்குதல், தூதரகம் போன்ற இடத்தில் பணியாற்றுவார். கடல் சார்ந்த மற்றும் முன்னீர்ப் பாதை பேராசிரியராய், மழை–மலைவழி நீர்ஆய்வு போன்ற துறையில் விளங்குவார். நாற்று நடவு பற்றிய ஆய்வும் செய்வார்.

மேஷம், சிம்மம், தனுசு லக்னம் இராசிக்காரர்கள் நெருப்பு நிலை ஆதிக்கமுள்ளவர்கள்.

மேஷம் லக்கினம், இராசிக்காரர்கள் வெடிமருந்து, மருத்துவம், மின்னியல், வேதியியல் இவற்றால் இலாபமுறுவர்.

சிம்மம் லக்னம், இராசிக்காரர்கள் இரயில்வே, சோலார், புரோகிதர் போன்ற துறையில் முன்னேறுவர்.

தனுசு லக்னம் இராசிக்காரர்கள் டிஜிட்டல் கணினி, வான்வெளி மூலம் இலாபமுறுவர்.

ரிஷபம், கன்னி, மகரம் லக்னம் இராசிக்காரர்கள் காற்று ஆதிக்கமுள்ளவர். நிர்வாகம், ஆலோசகர், ஆடிட்டங், காப்பி, தேநீர், ஏலம், ஆலிந்தியா ரேடியோ போன்ற துறையில், தொலைக்காட்சி, தொலைபேசியில் தொழில் அமைந்து இலாபமுறுவர்.

மிதுனம், துலாம், கும்பம் லக்னம் இராசிக்காரர்கள் அடிக்கடி பயன்படுத்தும் பொருட்கள், மனிதவளத்துறை, சந்தைப்படுத்துதல், கணினி அறிவு மூலம் முன்னேறுவர்.

தொழில் ஸ்தானாதிபதி எந்த உறுப்பில் இருக்கிறாரோ அந்தத் தொழில் அமையும்.

லக்கினாதிபதியும் ஸ்தானாதிபதியும் சேர்ந்திருந்தால் பெரும்பதவி உண்டு.

10 ஆம் அதிபதி 1 ல் இருந்தால் தலைமையதிகாரி. 2 இல் இருந்தால் ஆசிரியர்.

3 இல் இருந்தால் தொலைபேசி ஆப்பரேட்டர். 4 இல் இருந்தால் கண் மருத்துவர்.

5 இல் இருந்தால் தட்டச்சாளர். 6 இல் இருந்தால் பேராசிரியர்.

7 இல் இருந்தால் அஞ்சலக அதிகாரி. 8 இல் இருந்தால் உணவு தயாரிப்பு அலுவலர்.

9 இல் இருந்தால் தந்தை பார்த்தத் தொழில். 10 இல் இருந்தால் வங்கித் தொழில்.

11 இல் இருந்தால் வெளிநாட்டுப் பணி. 12 இல் இருந்தால் கண்டக்டர். (1 தலை, 2 வாக்கு, 3 காது,

4 கண், 5 கை, 6 மறைபொருள், 7 இடுப்பு, 8 வயிறு, 9 கால், 10 தொடை, 11 கணுக்கால், 12 பாதம் என்பதால் அந்தந்தத் தொழில் அமையும்.)

**12 அதிபதிகளும் கூட்டுக்கிரகத்தால் உண்டாகும் தொழில்களும்**

1. மேஷத்தில் பத்தாம் அதிபதி சனி இருந்தால் நாவிதர், முடிதிருத்தும் பணி.

2. ரிஷபத்தில் சனி இருந்தால் மேலாண்மை அலுவலர்

3. மிதுனத்தில் குரு இருந்தால் கல்லூரி முதல்வர்.

4. கடகத்தில் செவ்வாய் இருந்தால் கசாப்புக் கடைக்காரர். இரத்தப் பரிசோதனை அதிகாரி.

5. சிம்மத்தில் சுக்கிரன் இருந்தால் (10 ஆம் அதிபதி) மாவட்ட ஆட்சியாளர்.

6. கன்னியில் புதன் இருந்தால் கணக்கு பரிசோதகர், விமானி.

7. துலாத்தில் சந்திரன் இருந்தால் மாலுமி. (10 ம் அதிபதி)

8. விருச்சிகத்தில் சந்திரன் இருந்தால் சுயதொழில்.

9. தனுசில் புதன் இருந்தால் கணக்காசிரியர்.

10. மகரத்தில் செவ்வாய், சுக்கிரன் இருந்தால் திரைப்பட இயக்குனர். (சனி-செவ்வாய் பரஸ்பர பார்வையானால் ஞானியாவார்.)

11. கும்பத்தில் செவ்வாய், சுக்கிரன் இருந்தால் பொருளாதார நிபுணர். தாதுப்பொருள் அலுவலர்.

12. மீனத்தில் குரு இருந்தால் துணைவேந்தர்.

**கூட்டு கிரகத் தொழில்**

10 ஆம் அதிபதி 2 இல் தனியாகவோ பூர்வபுண்ணியாதிபதியுடனோ இருந்தால் கருவி பயிற்சியாளர் ஆவார். 10 ஆம் அதிபதியுடன் கேது சேரின் இல்லறத் துறவியாவார்.

எந்த லக்னத்துக்கும் சுக்கிரன் நீச்சமானால் வெல்ல மண்டி, வாழைக்காய் மண்டி வைப்பார். புதன் நீச்சமானால் பல் மருத்துவர் ஆவார்.

செவ்வாய + புதன் + சூரியன் சேரின் விலங்கியல், தாவரவியல் அறிஞராவார். குரு + புதன் சேரின் வக்கீலாவார்.

**மருத்துவம்**

மிதுனம் லக்கினம், மகரம் இராசி திருவோணம் என்றால் ஹோமியோபதி மருத்துவர்.

லக்னாதிபதி கேதுவுடன் சேர்ந்து லக்கினத்தில் இருந்தால் மூளை அறுவை சிகிச்சையாளர். லக்னாதிபதி கேதுவுடன் சேர்ந்து 2 இல் இருந்தால் காது, மூக்கு, தொண்டை மருத்துவர்.

3 இல் இருந்தால் குழந்தை நலம் மருத்துவர். 4 இல் இருந்தால் இதயம் அல்லது கண் மருத்துவர்.

5, 8 இல் இருந்தால் மயக்க மருந்து மருத்துவர். 12 இல் இருந்தால் மகப்பேறு மருத்துவர்.

புதன் நீச்சமானால் பல் மருத்துவர். கேதுவுடன் செவ்வாய் சேர்ந்து மேஷத்தில் இருந்தால் கால்நடை நல மருத்துவர். மிதுனம் லக்கினம், மகரம் இராசி, திருவோணம் நட்சத்திரம் ஓமியோபதி மருத்துவர்.

ஒருவர் ஜாதகத்தில் சுக்கிரனும் கேதுவும் சேர்ந்திருந்தால் மருத்துவம் கைகூடும்.

**கல்வித்துறை**

1. மகரத்தில் சுக்கிரன் இருந்தால் தலைமை ஆசிரியர் ஆவார்.
2. ரிஷபத்தில் சுக்கிரன் + கேது இருந்தால் அரசாங்கத்தில் கல்வி அதிகாரியாவார்.
3. சூரியன் + புதன் அடுத்தடுத்த வீட்டில் இருந்தால் மொழி ஆசிரியர் ஆவார்.
4. சூரியன + செவ்வாய் சேரின் வேதியியல் ஆசிரியர்.
5. சனி + புதன் சேரின் இயற்பியல் ஆசிரியர்.
6. 5 இல் குரு + சனி இருந்தால் கைத்தொழில் ஆசிரியர் மற்றும் பொறியாளர் (மகரத்தில் இருந்தால்).
7. செவ்வாய் + சுக்கிரன் (அல்லது) செவ்வாய் + இராகு இருந்தால் ஓவிய ஆசிரியர்.
8. 2 இல் ஓர் கிரகம் ஆட்சியானால் ஆசிரியர்.
9. புதன் 5 இல் இருந்தால் கணக்காசிரியர்.
10. சனி + சூரியன் சேரின் வரலாற்று ஆசிரியர்.
11. 10 ஆம் அதிபதி சித்திரை, அவிட்டக் காலில் இருந்தால் புவியியல் ஆசிரியர்.
12. 10 இல் சுக்கிரன் சூரியனுடன் இருந்தாலோ துலாத்தில் சுக்கிரன் இருந்தாலோ வக்கீல், யூனியன் தலைவர்.
13. சனி + புதன் கும்பம் மகரத்தில் இருந்தால் தட்டச்சர், அச்சடித்தல் தொழில் அலுவலர்.
14. இரு கிரகங்கள் பரிவர்த்தனையானால் க்வாசி அரசு அதிகாரி.
15. 5 ஆம் அதிபதி ஆட்சியானால் சுயதொழில் அலுவலர்.
16. 2 ஆம் வீட்டை 3 கிரகங்கள் பார்த்தால் ஜோதிடர்
17. 2 இல் லக்கினாதிபதி 5 ஆம் அதிபதியும் தொழிலதிபதியும் இணைந்தால் குடும்பத்தொழில் அமையும்.
18. 11 ஆம் அதிபதியும் 5 ஆம் அதிபதியும் சேரின் கூட்டுத்தொழில் அமையும்.
19. 7 இல் 10 ஆம் அதிபதி இருந்தால் தனித்தொழில் அமையும்
20. 10 ஆம் அதிபதி நீச்சமானால் தொழில் தரை மட்டமாகும்.
21. 10 ஆம் அதிபதி உச்சமானால் பெருந்தொழில் உண்டாகும்.


22. 10 ஆம் அதிபதி சனியுடன் நீச்சமானால் கடைநிலை ஊழியர்.

23. சுக்கிரன் நீச்சமானால் வெல்ல மண்டி வாழைக்காய் மண்டி அமையும்.


24. புதன் நீச்சமானால் எலும்புருக்கி நோய் அல்லது எலும்புச்சிதைவு மருத்துவர் ஆவார்.

25. சூரியன் + புதன் + சுக்கிரன் சேரின் தாவரயியல் படிப்பு வரும்.

26. சூரியன், புதன் + இராகு சேரின் விலங்கியல் படிப்பு வரும்.





(1)





(2)

படம்-1: மேலே சுக்கிரன் - குரு பரிவர்த்தனை, புதன் - சூரியன் பரிவர்த்தனை, வேறு கிரகங்கள் இவ்வாறு பரிவர்த்தனையானாலும் க்வாசி அரசு பதவி உண்டு.


படம்-2: மேற்கண்ட அமைப்பு நீதிபதி, வக்கீல், பேராசிரியர் ஆகியவற்றைக் குறிக்கும்.





இதில் 5 ஆம் அதிபதி 5 இல் ஆட்சியாவதால் சுயதொழில் செய்வார்




இதில் கன்னி 2 ஆம் வீட்டை செவ்வாய், சந்திரன், சனி பார்ப்பதால் வாக்குப்பலிதமுள்ள ஜோதிடர்.




இதில் லக்கினாதிபதி 5 ஆம் அதிபதி 10 ஆம் அதிபதி இணைவதால் 2 குடும்பஸ்தானம் என்பதால் குடும்பத் தொழில் அமையும்.




இதில் 5+11 ஆம் அதிபதிகள் இணைவதால் சுய தொழில் அமையும்.

தொழில் காண்டம் கடல் போன்றது. காலம், நாடு சூழ்நிலைகளுக்கு இணங்க தொழில்கள் மாறுபடுவதால் கைதேர்ந்த ஜோதிடர் தன் திறமையால் தொழில் நிலை அறிந்து சொல்ல வேண்டும்.

ஈ முதல் யானை வரை அனைவருக்கும் இறைவன் படியளக்கவல்லவன் என்பதால் யாரும் சோடை போனவரல்லர் என்ற நினைப்புடன் ஆராய்ந்து நல்வழிப்படுத்துதல் ஒரு ஜோதிடரின் கடமை ஆகும்.

OOOOO

## பாவம் 11 & 12 – இலாபம் & நட்டம்

லக்னத்துக்கு 11 இல் சூரியன் இருந்தால் முறுக்குக்கம்பிகள் விற்பனைமூலம் இலாபம் உண்டு.

சந்திரன் இருந்தால் பழச்சாறு சர்ப்பத் கடை நடத்துவர்.

செவ்வாய் இருந்தால் பூமி இலாபமுண்டு.

புதன் இருந்தால் மன நலம் பாதிக்கப்பட்டவரைக் காப்பாற்றி இலாபமடைவார்

குரு இருந்தால் குரங்கு, சிங்கத்துடன் சர்க்கஸ் நடத்துவார்.

சனி 11 இல் இருந்தால் வெளி மாநிலத் தொடர்பு வரும்.

இராகு இருந்தால் பாம்பாட்டியாவார்.

கேது இருந்தால் நாவிதர் அல்லது சன்யாசியாவார். பணபலம் உண்டாகும்.

சுக்கிரன் இருந்தால் வட்டி வாங்கிப் பிழைப்பு நடத்துவார்.

11 ஆம் அதிபதி சூரியனானால் வக்கீல்களாலும், சந்திரனானால் முத்து, மீன் முதலிய தொழிலாலும், செவ்வாயானால் மருத்துவத்தாலும், நீர்மின்சாரத்தாலும், புதனானால் வாரியங்களாலும், குருவானால் தொழிலகத்தாலும், சனியானால் தாழ்த்தப்பட்ட மக்களாலும், சுக்கிரனானால் விவசாயத்தாலும், இராகுவானால் விமானப் போக்குவரத்து மூலமும், கேதுவானால் பெட்டிக்கடையாலும் இலாபமுண்டு.

11 ஆம் அதிபதி ஆட்சியானால் நல்லதாகாது. உச்சமானால் அந்தத் தெசை நலம் தரும் நீச்சமானால் பணபலம் உண்டு. வர்கோத்தமமானால் பணபலம் பெருகும்.

OOOOO

## பாவம் 12 – நஷ்டம்

எல்லாக் கிரகங்களும் லக்னத்துக்கு 12 இல் இருந்தால் நஷ்டமாகும்.

1. 12 ஐ சனி பார்த்தால் தூக்கமின்மை உண்டு.

2. 12 இல் 12ம் அதிபதி இருந்தால் தூக்கத்தில் நடக்கும் நோய் உண்டு.

2. 12 இல் சுக்கிரன் இருந்தால் பெண்சுகம் உண்டு.

4. 12 இல் 7 ஆம் அதிபதி இருந்தால் கணவர் / மனைவி துரோகம் இழைப்பர்.

5. 12 ஐ குரு பார்த்தால் பல பெண் / ஆண்களைப் புணர்வர்.

6. 12 இல் சுக்கிரன் இருந்தால் மல்லாந்து, இரு கைகளையும் தலைக்கு வைத்துக் கொள்வர்.

7. பூசம், கார்த்திகை நட்சத்திரக்காரர்கள் ஆட்டிடையன் போல் தங்கள் ஆடையையே போர்வையாய்ப் போர்த்தித் துயில்வர்.

8. 12 ஆம் அதிபதி 6 இல் இருந்தால் கருமி. 8 இல் இருந்தால் தருமி.

9. 12 இல் 10 ஆம் அதிபதி இருந்தால் கண்டக்டர்

10. 12 இல் 9, 4 ஆம் அதிபதிகள் இருந்தால் பெற்றோரின் திருமணத்தை, மறுமணத்தைக் கண்ணால் பார்ப்பர்.

11. 12 இல் சூரியன் இருந்தால் செட்டியார்களாலும், சந்திரன் இருந்தால் ஜெயின் மக்களாலும், செவ்வாய் இருந்தால் கிறித்தவர்களாலும், குரு இருந்தால் பிராமணர்களாலும், சனி இருந்தால் வேசிகளாலும், சுக்கிரன் இருந்தால் தாசிகளாலும், இராகு இருந்தால் சமூக விரோதிகளாலும், கேது இருந்தால் கீழ்மக்களாலும் இடருண்டாகும்; நட்டமுண்டாகும்.

12. 12 இல் குரு, சுக்கிரன் இருந்தால் தேர், இரயில், பேருந்து சக்கரத்தில் அடிபடுவர்.

13. 12 இல் 11 ஆம் அதிபதி இருந்தால் நல்ல மரணம் உண்டாகும்.

14. 12 ஆம் அதிபதி 6 இல் இருந்து அந்தத் தெசை நடந்தால் வீட்டை விட்டு ஓடிவிடுவார்.

இதுவரை பன்னிருபாவங்களின் பலன்களைப் பார்த்தோம். இதனை உணர்ந்து படித்து மேலும் அனுபவத்தாலும் பலன் சொல்லி முன்னேறலாம்.

ooooo

## தாள்– 3 சோதிடப் பலன்கள்

## வினாக்கள்

**பாடம் 1 – கிரகங்கள் உச்சம், நீச்சம், ஆட்சி, வர்கோத்தமம், பரிவர்த்தனை பலன்கள்**

1. சூரியன், குரு உச்சமானால் உண்டாகும் பலன்களை 5 வரிகளில் எழுதுக.
2. செவ்வாய், சூரியன் ஒரு ஜாதகத்தில் நீச்சமானால் நிகழ்வது என்ன?
3. வர்கோத்தமம் என்றால் என்ன? விளக்குக.
4. செவ்வாய், புதன் பரிவர்த்தனையானால் நிகழ்வது என்ன?

**பாடம் 2 – தனிக் கிரகம், கூட்டு கிரகங்கள் பலன்கள்**

1. குரு தனித்திருப்பதற்கும் புதன் தனித்திருப்பதற்கும் உள்ள வேறுபாடு, நன்மை, தீமை எவை?
2. ஏதாவது இரண்டு மற்றும் மூன்று கிரகங்கள் ஒரு வீட்டில் இருந்தால் உண்டாகும் பலன்களை எழுதுக.
3. சூரியனுடன் இராகுவோ சந்திரனுடன் கேதுவோ இணைவதால் உண்டாகும் நன்மை தீமை யாவை?
4.. செவ்வாய், புதன் பரஸ்பர பார்வை பலன் கூறுக.
5. பரஸ்பர பார்வையின் பலன்கள் யாவை?

**பாடம் 3 – பிறந்த மாதம், வருடம், கிழமை பலன்கள்**

1. வைகாசி, மாசி மாதம் பிறந்தவர்களின் பலன்கள் யாவை?
2. 60 வருடங்களில் ஏதாவது 5 வருடங்களில் பிறந்தவர்களின் குண நலன்களை எழுதுக.
3. புதன்கிழமையில் பிறந்தவருக்கும் புத தெசையில் பிறந்தவருக்கும் உள்ள வித்தியாசங்கள் எவை?

**பாடம் 4 – இரு திரு நாகங்கள்**

1. மருத்துவக்காரகன் செய்யும் முக்கிய செயல்கள் யாவை?
2. சதயம் 3 இல் கேதுவும், பூரம் 1 இல் இராகுவும் இருந்தால் உண்டாகும் பலன்களை வரைக?
3. இராகு காலத்துக்கும் இராகு தெசைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
4. கடகம் – மகரம் இராகு கேதுவின் சிறப்பியல்புகள் யாவை?
5. புதன், சந்திரனுடன் இராகுவோ கேதுவோ இணைந்தால் உண்டாகும் விளைவுகள் எவை?

**பாடம் 5 – பழமொழிகளும் விதிவிலக்குகளும்**

1. புதனைப் பற்றிய பழமொழிகளும் விளக்கங்களும் கூறுக.
2. பீடுடைய மாதத்தில் செய்யும் காரியங்கள் யாவை? பீடுடைய மாதம் எது?
3. பரணி, கேட்டை நட்சத்திரப் பழமொழிகள் கூறுக.
4. மூலம், பூராடம் பற்றிய கருத்துக்கள் கூறுக.
5. பொய் என்றால் என்ன? விளக்குக.

**பாடம் 6 – ஜாதீயப் பழமொழிகள்**

1. சும்மாடு பற்றி எழுதுக.
2. தான தருமம் விளக்கம் கூறுக.

3. இராகு காலத்திற்கும் சுவாதி நட்சத்திரத்துக்கும் உள்ள தொடர்பு கூறுக.

4. தையல் என்றால் என்ன? பொருள் கூறுக.

5. காத்துக்கருப்புக்கும் பொறாமைக்கும் உள்ள தொடர்பு யாது?

**பாடம் 7 – பன்னிரு பாவம் உச்சம், நீச்சம், வர்கோத்தமம் பலன்கள்**

1. இரு கிரக நீச்சம் கட்டமிட்டு காட்டுக.
2. 5, 6 இல் ஒற்றைக் கிரகம் இருந்தால் உண்டாகும் பலன்கள் யாவை?
3. 7ஆவது வீடு பற்றிய குறிப்பு வரைக.
4. வாகன விபத்து நடக்கும் கிரக அமைப்பு கூறுக.
5. இருகிரகம் ஒரே வீட்டில் நீச்சமானால் பயன்கள் எவை?

**பாடம் 8 – அதிபதிகளும் அவை இருக்கும் வீடுகளும்**

1. லக்னாதிபதி முதல் ஆறு வீடுகளில் இருந்தால் உண்டாகும் பலன்களைப் பத்து வரிகளுக்குள் எழுதுக.
2. குடும்பாதிபதி 6, 8, 12 ஆம் வீடுகளில் மறைந்தால் ஏற்படும் பலன்களை 5 வரிகளுக்கு எழுதுக.
3. கூட்டுக் குடும்பம் அமையும் கிரக அமைப்புக்கள் யாவை?
4. 6, 8, 12 க்குரியவர்கள் பற்றி 10 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.
5. 7, 8 க்குரியவர்கள் செய்யும் நன்மை, தீமைகள் யாவை?

**பாடம் 9 – இராசி, அம்சம், லக்னம் பலன்கள்**

1. லக்னாதிபதி, ஆயுள்அதிபதி வர்கோத்தமமானால் உண்டாகும் பலன்கள் யாவை?
2. கிரகங்களுக்கும் உலக நாடுகளுக்கும் உள்ள தொடர்புகளை ஒரு பக்க அளவு கட்டுரை எழுதுக.
3. அறிவியல் மற்றும் சோதிடத்தில் பங்கு என்ன?
4. வாகனவியலுக்கு உண்டான சனி சந்திரன் நட்சத்திரம் சுக்கிரன் பற்றிய விவரங்கள் எழுதுக.
5. மொழிகளுக்கும் சோதிடத்துக்கும் உள்ள தொடர்பு என்ன?

**பாடம் 10 – சோதிவியலும் சமூகவியலும்**

1. சோதிடவியல் மனித வாழ்வியலுடன் சம்பந்தப்பட்டதை 20 வரிகள் தொகுத்து எழுதுக.
2. பொன் மற்றும் பூமி விற்பனை ஏற்ற இறக்கங்களுக்குக் காரணம் யாவை?
3. மருத்துவகாரகன், சுக்கிரன், சனி இணைவதால் உண்டாகும் விளைவுகள் எவை?
4. பல்மருத்துவம், எம்.பி.பி.எஸ் படிப்புக்கு உண்டான கிரக அமைப்புக்கள் எவை?
5. வாகனப்பழுது, விபத்துக்களுக்கு உண்டான கிரக அமைப்புக்கள் யாவை?

**பாடம் 11 – கோச்சார பலன்கள்**

1. குரு 6, 8, 12 இல் இருந்தால் நிகழ்வது என்ன?
2. திருமணமாகும் கோச்சார அமைப்புப் பற்றி விவாதிக்க.
3. அட்டமச் சனி, ஏழரைச் சனி, சனி புக்தியில் வேறுபாடுகள் யாவை?
4. சனி, குரு இரண்டும் ஒருவர் வாழ்வில் எவ்வளவு வரும்?

5. மாத கிரகங்கள் எவை? அதன் பண்புகள் எவை?

**பாடம் 12 – தெசா புக்தி பலன்கள்**

1. சூரியன், சந்திரன் தெசை காலங்களில் ஒரு ஜாதகருக்கு வாழ்வு எப்படி அமையும்?
2. திருவாதிரை, விசாகம், மூலம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தவர்களுடைய தெசா புக்தியை வரிசைப்படுத்துக.
3. அசுபதி, சதயம் நட்சாத்திரக்காரார்கள் வாழ்வில் வரும் தெசா புக்திகளின் ஒற்றுமை என்ன?
4. புதன் நீச்சமாகி அந்தத் தெசை நடந்தால் என்ன நிகழும்?
5. குரு, சனி தெசைகளில் வரும் நன்மை தீமைகள் யாவை?

**பாடம் 13 – சோதிடமும் இறையாண்மையும்**

1. சோதிடருக்கு உண்டான தகுதிகள் ஆறு கூறுக.
2. இறையாண்மை, இறைத்தன்மைக்கு உள்ள வேறுபாடுகள் யாவை?
3. ஒரு பொறியாளர், ஒரு மருத்துவர், ஒரு சோதிடருக்கு உண்டான. வேறுபாடுகள் யாவை?
4. சோலார், லூனார் முறை என்றால் என்ன?
5. உண்மையான சோதிடர் எப்படி இருக்க வேண்டும்?

**பாடம் 14 – பன்னிரு பாவங்கள் பலன்கள் – 1, 2, 3, 4 வீடுகள்**

1. மேஷ லக்னத்துக்குச் செவ்வாய் 4, 8, 12 இல் இருந்தால் உண்டாகும் பலன்களை 10 வரிகளில் எழுதுக.

2. மிதுன லக்னக்காரருக்கும் தனுசு லக்னக்காரருக்கும் குரு 2 இல் இருக்க, செவ்வாய் 3 இல் இருக்க உண்டாக்கும் பலன்களை எழுதுக.

3. மேஷ இராசி, மிதுன வக்னம் பரணி நட்சத்திரக்காரர்களின் குணநலன்கள், குடும்ப வாழ்வு, சகோதர, தாயார் நிலைப்பாடுகளை 50 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

4. ரிஷப லக்னம், விருச்சிக இராசி, கேட்டை நட்சத்திர ஜாதகரின் குடும்ப வாழ்வு, சகோதர வாழ்வு, குடியிருப்பு அமைப்பை 50 வரிகளுக்கு மிகாமல் எழுதுக. புதன் தெசை இருப்பு 4 வரு. 7 மாதம், 6 நாள். செவ்வாய் 3 இல், சந்திரன் 7 இல், புதன் 5 இல் உள்ள அமைப்பு உள்ள ஜாதகம். 28-09-1979 பிறந்த தேதி.

**பாடம் 15 – பன்னிரு பாவங்கள் பலன்கள் – 5, 6, 7, 8 வீடுகள்**

1. கும்ப லக்னம் சித்திரை மாதம் பிறந்த கடக இராசி ஜாதகருக்குப் புதன் 4 இல் இருக்க பூர்வீகம், உடல் உபாதை, தண வாழ்வு பற்றி 10 வரிகளில் பலன்கள் எழுதுக.

2. கடக லக்னம், 11 இல் சந்திரன், 5 இல் செவ்வாய், இருப்பு 3 வரு, 4 மாதம் 7 நாள் உள்ள ஜாதகருக்கு மண வாழ்வு, புத்திர பாக்கியம் பற்றி வரைபடத்துடன் விவரிக்க.

3. தனுசு லக்னம் 4 இல் புதன், 7 இல் குரு இருக்க கடகத்தில் செவ்வாய் உள்ள கடக இராசிப் பெண் ஜாதகத்திற்கு நிகழவிருக்கும் வீடு, வாகன நிகழ்ச்சிகளை குறித்தும் மண வாழ்வு குறித்தும் வரைபடத்துடன் 50 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

**பாடம் 16 – பன்னிரு பாவங்கள் பலன்கள் – 9, 10, 11, 12 வீடுகள்**

1. ரிஷப லக்னக்காரருக்கு மகரத்தில் குரு, 6 .ல் சூரியன், 12 இல் சனி இருக்க உண்டாகும் பலன்களை 10 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

2. மகர லக்னத்துக்கு 1, 5, 12 ஆம் அதிபதிகள் 6, 8, 12 இல் இருந்தால் உண்டாகும் பலன்களை 10 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

3. 23-10-1979 ஐப்பசி மாதம் மதியம் 1-45 க்குப் பிறந்த விசாகம் 4 ஆம் பாதம் ஜாதகருக்கு லக்னத்தில் கேது, 7 இல் சனி, 9 இல் சுக்கிரன், 6 இல் செவ்வாய் அமைப்புள்ள நிலைப்பாட்டிற்குத் தந்தை, தொழில், இலாபம் மற்றும் ஏற்படவிருக்கும் நட்டம் ஏற்படும் வழிகளை வரைபடத்துடன் ஆராய்க. குரு தெசை இருப்பு 3 வரு, 1 மாதம் 0 நாள்.

4. கீழ்க்கண்ட ஜாதகர் எந்த ஆண்டு, எந்த மாதம், எத்தனை மணிக்குப் பிறந்தார் என்று கண்டுபிடித்து கிரக பாத சாரங்களுடன் இவரது ஜாதகப் பலன்களை 50 வரிகளுக்கு மிகாமல் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| சந் | சுக் | புத | சூரி இராகு |
| | இராசி | | |
| ல | | | |
| கேது | | குரு | செவ் சனி |

| | | | |
|---|---|---|---|
| இராகு | செவ் புத | | சனி |
| | அம்சம் | | |
| ல | | | |
| சுக் குரு | | சூரி | சந் கேது |

* * * * *